திருப்பாவை

பி.ஸ்ரீ



அல்லயன்ஸ்

பெரியாழ்வார்

பி. ஸ்ரீ. இயற்றியது

விலை ரூ. 3—0—0

சென்னை மாஜி ஷெரீப்

ஸ்ரீ. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள்

சிறப்புரை கொண்டது

பொருளடக்கம்

1 பெரியார் கொண்டாடிய ஸ்ரீஜயந்தி
2 விஷ்ணுசித்தரின் விருப்பம்
3 தமிழ்வளர்த்த மதுரையிலே
4 மங்கிக்கிடந்த மனவிளக்கு
5 கனவும் காட்சியும்
6 பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்
7 ஆழ்வார் திருமகள்
8 பெரியாழ்வார் காலம்
9 பேரும் புகழும்
10 வாழ்க்கைத் தத்துவம்
11 பெரியாழ்வார் நந்தவனம்
12 நந்தவனத்திலே ஞானப்பூங்கொடி
13 கோதை யார்?
14 பிரபந்தச்சோலையில் பெரியாழ்வார்
15 இதிகாச புராண சஞ்சாரம்
16 பெரியாழ்வாரும் தமிழ்நாட்டுக் கதைகளும்
17 கண்ணனைப்பற்றிய வேறு கதைகள்
18 பிள்ளைத்தமிழும் கவிதையும்
19 குழந்தையை வந்து பாருங்கள்
20 அழகுவளரும் தொட்டில்
21 அம்புலி மாமா! வாவா!
22 ஆடும் அழகு
23 பசி ஏது? தாகம் ஏது?
24 ஜகன்மோகன வேணுகோபாலன்
25 கவிதையும் உபதேசமும்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

திருப்பாவை

கந்தன் புகழ் நூல்கள்

1. ஷண்முக விஜயம்
2. பால ஷண்முக விஜயம்
3. வழிகாட்டி
4. கந்தபுராணத் திரட்டு
5. திருமுருகாற்றுப்படை
6. திருவகுப்பு
7. கந்தரலங்காரம்
8. கந்தரனுபூதி
9. திருப்புகழ் விருத்தியுரை

திருப்பாவை

பதவுரை, பொழிப்புரை, விளக்கம்,
உள்ளுறை பொருளுடன்

ஆசிரியர்

பி. ஸ்ரீ.

சிறப்புரை:
ஸர்விஸ் கமிஷன் தலைவர்
திவான்பகதூர்-
ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம். ஏ., பி. எல்.

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

காபிரைட்] 1948 [ரூ. 1-8-0

இவ்வாசிரியரின்
வேறு நூல்கள்

1. ஆண்டாள்
2. பெரியாழ்வார்
3. மகாபாரதக் கதைகள்
4. கண்ணபிரான்
5. ஔவையார்
6. கட்டுரைகள்.

Printed at the Sadhu Press,
Royapettah, Madras,
Paper Issue Card No. M. S. 115
for The Alliance Company,
Mylapore, Madras,
Paper Issue Card No. 109
10-4-1948

4-1

திவான்பகதூர் -

ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம், ஏ., பி. எல்.

(சென்னை ஸெர்விஸ் கமிஷன் தலைவர்)

அளித்த

முன்னுரை

ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த இடம் ஸ்ரீவில்லிபுத்தூர். அவ்வூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஆண்டாளை நான் முதன்முதலாகத் தரிசித்தபோது, அத்திருவுருவம் என் உள்ளத்தைப் பரவசப்படுத்தியது. பெண்மையின் பெருமிதம் தெய்விகம் பெற்று அருளொளி வீசுவது அத்திருவுருவம். பெண்மைக்கு உரிய காதலைத் தெய்வக் காதலாக்கியவள் ஆண்டாள். ஆண்டாளின் உள்ளத்தில் ஊற்றெடுத்த அக்காதலே 'திருப்பாவை' என்னும் நூலாகத் ததும்பி வெளிவந்து, அந்நாள்முதல் மக்கள் மனத்திற்குத் துன்பம் அணுகாத இன்பத்தை நல்கி, மக்கள் பாதகங்களைத் தீர்த்துப் பரமன் அடிகாட்டி அருள்வழியாக விளங்கி நிற்கின்றது.

திருப்பாவை தனிச்சிறப்பு வாய்ந்த நூல் என்பதில் சந்தேகமில்லை. அதன் உயர்வையும் பெருமையையும் நான் கூறமுடியுமோ? சொல்நயம் நிரம்பியது; அழகிய சித்திர வர்ணனை நிரம்பியது. இயற்கை வடிவில் ஆண்டாளுக்குக் காட்சியளிப்பதை, நேராகச் சித்திரத்தில் காண்பதுபோல் இந்நூலில் காண்கிறோம். பாவம் நிறைந்தது; உயர்ந்த எண்ணங்கள் நிறைந்தது. படிப்பவர்களுக்கு - அவர்கள் எம்மதத்தவராயினும் - ஒரு மகிழ்ச்சியும் பரவசமும் படித்த மாத்திரத்தில் ஏற்படும். தமிழ் இலக்கியத்தை ஒரு தோட்டமாகப் பாவித்தோமானால், அத்தோட்டத்தில் பூத்திருக்கும் அழகு வாய்ந்த பூ இந்தத் திருப்பாவை; அதன் நறுமணம் அன்றுதொட்டு வீசிக்கொண்டிருக்கின்றது.

வைணவர்களுக்குத் திருப்பாவை வேதத்திற்கு ஒப்பானது - ஒருகால் உயர்வாக எண்ணலாம். 'வேதம் அனைத்துக்கும் வித்து' என்று ஒரு பெரியவர் பாடியிருக்கின்றார். வேதத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் இதில் அடங்கியிருக்கின்றனவாம். ஆண்டாள் காலமுதல் இந்நூல் தெய்வபக்தியின் மூலமாக மக்களிடையே அன்பைப் பெருக்கி ஒற்றுமையை நிலைநாட்டி வந்திருக்கிறது. வைணவர்கள்

இந்தப் பிரபந்தத்தில் விசேஷ ஈடுபாடுகொண்டு மார்கழி மாதம் முழுவதும் ஓதுவதும், ஓதக் கேட்பதுமான வழக்கமே இதற்கு ஒரு சான்று. தவிர வைணவ மதத்தை இந்நாட்டில் பரப்பியருளிய ஸ்ரீ ராமாநுஜர் இந்தப் பிரபந்தத்தை வெகு சிறப்பாக மதித்து வழிபட்டு வந்தார். ஒரு நாளும் இதை ஓதாமல் இருப்பதில்லை. அதனாலேயே 'திருப்பாவை ஜீயர்' என்று அவருக்கு ஒரு பெயர்.

இந்தப் பிரபந்தத்திற்கு அனேகர் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். சிறப்பாகப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தைக் குறிப்பிடலாம். ஆனால் நம்மைப் போன்ற மக்கள் அதைப் படித்துத் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. திருப்பாவையில் பொதிந்து ஆழ்ந்து கிடக்கும் நுட்பங்களையும் கருத்துக்களையும் எல்லோரும் அறிந்து அனுபவிக்கும்படி எளிய நடையில் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

இந்த அவசியத்தை முடித்துவைக்க ஸ்ரீமான் பி. ஸ்ரீ. முன்வந்துள்ளார். இவரை அறியாதவர் யார்? அவர்கள் 'ஆனந்த விகடன்' போன்ற பத்திரிகைகளில் எழுதிவரும் கட்டுரைகளும், 'சுந்தர காண்டம்', 'பெரியாழ்வார்' போன்ற புத்தகங்களும் தமிழ் மக்களுக்குப் பெரும் பயன் அளித்து வருகின்றன. இவரது திருப்பாவைப் பதிப்பும் பெரும் பயன் அளிக்கும் என்பதிலும், இதைத் தமிழகம் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளும் என்பதிலும் ஐயமில்லை. இந்தப் பதிப்பின் மூலமாகத் தமிழ் மக்கள் யாவரும் திருப்பாவையை வாசித்துச் சுலபமாக இதன் அரும் பெரும் பொருள்களைத் தெரிந்து தங்களுடையதாக ஆக்கிக்கொள்ளலாம். பதவுரை – பொழிப்புரை - கருத்துரை – விளக்க உரை இவைகளால் எளிய நடையில் பி. ஸ்ரீ. திருப்பாவையை ஒளிப்படுத்தியிருக்கிறார்.

இத்தகைய அரியநூல்களை வெளியிட்டு வரும் 'அல்லயன்ஸ் கம்பெனி'யின் உரிமையாளராகிய ஸ்ரீ வி. குப்புசாமி ஐயர் அவர்களுக்கு நமது நன்றி உரியதாகும்.

இங்ஙனம்:

1—4—48 தி. மு. நாராயணசாமி.

ஓர் இசைத் தமிழ்ப் பூங்கொத்து

'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்று போற்றப் பெறும் ஆண்டாள், ஆண்டவனுக்குக் கந்தம் பொலியும் பூமாலையைச் சூடிக் கொடுத்தாள் என்றும், சந்தம் பொலியும் பாமாலையைப் பாடிக் கொடுத்தாள் என்றும் கூறுவர். 'கோதை' என்ற பெயருக்கே 'மாலை' என்றும், 'மாலைபோல் இனியள்' என்றும் பொருள் உண்டு.

ஆசாரியப் பிரதமரான ஸ்ரீ நாதமுனிகளின் பிரிய சீடரும், அவரை அடுத்து ஆசாரிய பீடத்தில் வீற்றிருந்தவருமான உய்யக்கொண்டார்,

> அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
> பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
> பாடிக் கொடுத்தாள், நற் பாமாலை பூமாலை
> சூடிக் கொடுத்தாளைச் சொல்

என்றும்,

> சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே ! தொல்பாவை
> பாடி யருளவல்ல பல்வளையாய் !

என்றும் பாடி, 'திருப்பாவைச் செல்வியார்' என்று பேரும் புகழும் பெற்றிருக்கும் ஆண்டாளைப் போற்று கிறார்.

ஆண்டாள் அருளிச் செய்த பாமாலைகளான இரண்டு திவ்யப்பிரபந்தங்களில் முதலாவது பிரபந்தம் திருப்பாவைதான். மற்றது நாச்சியார் திருமொழி. ஆண்டாளைக் கோதை நாச்சியார் என்று போற்றுவது பிரசித்தம். நாலாயிர திவ்யப் பிரபந்தத்துள் முதலாயிரத்தில் இரண்டாவது திவ்யப் பிரபந்தமாகத் திருப்பாவையைச் சேர்த்திருக்கிறார்கள்.

'பாவை' என்பதற்கு இங்கே 'நோன்பு' என்று பொருள். கண்ணனை நோக்கி நோன்பு நோற்ற கோபியரின் தன்மையை ஆண்டாளும் அடைந்து, 'நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்' என்று இரண்டாவது பாசுரத்தில் தானும் நோன்பு நோற்பதாகக் கூறுவதால், இந்த இசைத்தமிழுக்குத் 'திருப்பாவை' என்று பெயர் வந்ததென்பர். இந்நூலின் இருபத்தொன்பது பாட்டுக்களும் 'ஏலோ ரெம்பாவாய்' என்றும், இறுதிப்பாட்டு 'எம்பாவாய்' என்றும் முற்றுப் பெறுகின்றன. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில், 'திருவெம்பாவை' என்ற தலைப்பெயருடன் இருபது பாடல்கள் காணப்படுகின்றன. அவையெல்லாம் 'ஏலோரெம்பாவாய்' என்று முடிகின்றன.

திருப்பாவையின் முதற் பாட்டிலே வரும் மார்கழி நீராட்டத்தைத் திருவெம்பாவை இறுதிப் பாட்டிலே பிரஸ்தாபிக்கிறது. திருப்பாவையையும் திருவெம்பாவையையும் ஒப்பிட்டுப் படிக்கவேண்டும். திருப்பாவையின் பதினைந்தாம் பாட்டும், திருவெம்பாவையின் நான்காம் பாட்டும் பொருளின் போக்கில் பெரிதும் ஒத்திருக்கின்றன. 'பெண்களின் மழைப் பாட்டு' இரண்டு இசைத் தமிழ்களிலும் காணப்படு

கிறது. வைணவர்களும் சைவர்களும் முறையே திருப்பாவை, திருவெம்பாவை என்ற பிரபந்தங்களைப் பாராயணம் செய்து மார்கழி மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

பழைய வைணவ ஆசாரியர்கள் திருப்பாவைக்கு மணிப்பிரவாள நடையில் (வடமொழியும் தமிழும் கலந்த நடையில்) செய்திருக்கும் ஆறு வியாக்கியானங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படாத வேறு வியாக்கியானங்களும் உண்டு. இந்த வியாக்கியானங்களில் எல்லாம் மிகவும் பிரசித்தமானது பெரியவாச்சான் பிள்ளை என்ற வியாக்கியான சக்கிரவர்த்தியின் வியாக்கியானமே யாகும்.

இவர் தமது வியாக்கியானத்தின் முன்னுரையில் (அவதாரிகையில்) திருப்பாவையின் வரலாறு இன்னதென்று கூறியுள்ளார். ஆய்ப்பாடியிலுள்ள ஆயர்கள் மழை பெய்யாக் குறையை நீக்குவதற்காகத் தங்கள் பெண்களைக் கண்ணன் தலைமையில் மார்கழி நோன்பு நோற்கச் சொன்னார்கள். அதற்காக ஆய்ச்சியர் தோழிமார்களையும் கண்ணனையும் அதிகாலையில் துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டுபோய் யமுனா நதியில் மார்கழி நீராடினார்கள். நீராடி நோன்பு நோற்றுக் கண்ணனை நாயகனாகப் பெறும் தங்கள் மனோரதத்தை அடைந்தார்கள். இது பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து.

கோபியர்க்கும் கண்ணபிரானுக்கும் ஏற்பட்ட கூட்டுறவு ஆத்ம பரமாத்மாவைச் சார்ந்த பேரின்பத் தொடர்பு என்பர். அத்தொடர்பின் உட்பொருளை அறியாத ஆயர்கள் அப்பெண்களையும் கண்ணனையும் வேறுபடுத்தி வைக்க, அப்பிரிவால் அப்பெண்களுக்கு

ஏற்பட்ட மனநோய் வானமழையையும் தடுத்து விட்டதாம். அதனுல் நாடு வறண்டு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பிறகு ஆயர்கள் மழையை வேண்டிக் கண்ணனைத் தலைவனுகக்கொண்டு நோன்பு இழைக்குமாறு பெண்களை ஏவினர். அப்பெண்கள் நோன்பு நோற்றதால், நாடு செழிக்க மழை பெய்ததுடன் அவர்களும் கண்ணனை அடைந்து தாம் விரும்பிய பேறு பெற்றனர் என்பர்.

ஸ்ரீ பாகவத புராணத்தில் மார்கழி நோன்பு பற்றிய சில செய்திகள் காணப்படுகின்றன. கோகுலப் பெண்கள் மார்கழி மாதத்தில் காத்யாயனி தேவியின் பூஜையாகிய விரதத்தை நடத்தி வந்தார்கள். அருணேதயத்தில் எழுந்திருந்து யமுனையில் நீராடி ஈர மணலால் தேவிக்கு உருவம் அமைத்துப் பூஜித்து, 'எங்களுக்குக் கண்ணனை நாயகனுக அருள்வாயாக' என்று பிரார்த்தித்தார்கள். அப்படி ஒரு மாத காலம் நோன்பு நோற்ருர்கள். ஒரு நாள் கோபியர்கள் அருணேதயத்தில் எழுந்திருந்து தோழிமார்களையும் அழைத்துக் கைகோத்த வண்ணம் கிருஷ்ண சரிதங்களைப் பாடிக்கொண்டு யமுனை நீரில் விளையாடிக் கொண்டிருந்தனரென்றும், அப்போது யோகிகளுக்கும் யோகியான கண்ணன் அருள் செய்தானென்றும் பாகவதம் - தசம ஸ்கந்தம் - தெரிவிக்கிறது.

பாகவதத்திலுள்ள இவ் வரலாற்றை ஆதாரமாகவோ பிரமாணமாகவோ பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடவில்லை. பாகவத புராணம் ஆழ்வார்களின் காலத்திற்கும் பிற்பட்டுத் தோன்றியதென்று தற்கால ஆராய்ச்சியாளர் கருதுகின்ருர். அப்படியானுல், தமிழ்நாட்டிலே வழங்கிவந்து இவ்வரலாறு புராணம்

புகுந்திருக்க வேண்டும். இது எப்படி யிருந்தபோதிலும், நாடு செழிக்க மழை பெய்யவும், நல்ல கணவரை அடைந்து இம்மைநலம் பெறவும் கன்னியர் தேவியைக் குறித்து மார்கழி முழுதும் நோன்பு நோற்பது ஒரு பழைய வழக்கமாயிருந்ததென்று ஊகிக்கலாம்.

திருப்பாவைப் பாசுரங்களிலும், திருவெம்பாவைப் பாசுரங்களிலும் இறுதியில் வரும் 'எம் பாவாய்' என்ற தொடர், ஈரமணலால் செய்த தேவியின் உருவத்தைக் குறிப்பதாக ஊகிப்பதும் உண்டு. இந்த ஊகம் பொருத்தமானுல், 'பாவை' பெண் தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும் என்று பண்டித ஸ்ரீ. மு. இராகவையங்கார் கருதுகிருர். 'நம் பாவைக்கு' என்றும், 'பாவைக் களம் புக்கார்' என்றும் வரும் திருப்பாவைத் தொடர்களிலும் பிரதிமை ஒன்று வைத்து வணங்கும் குறிப்பு தோன்றுவதாக ஸ்ரீ மு. இராகவையங்கார் ஊகிக்கிருர். ஆனுல் தேவி விரதத்தை ஆண்டாள் அனுஷ்டித்ததாக - அதாவது தேவியைத் தொழுது கண்ணனை அடைந்ததாகக் கூறுவது வைணவ சம்பிரதாயத்திற்குப் பொருத்தமானதென்று தோன்றவில்லை.

திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பிரபந்தங்களைப் 'பாவைப் பாட்டு' என்று கூறுவதுண்டு. சைவ வைணவர்களைப்போல் ஜைன பௌத்தர்களும் 'பாவைப் பாட்டு'க்கள் பாடியதாகத் தெரிய வருகிறது. சங்க நூல்கள் வாயிலாகக் கிடைக்கும் சில செய்திகளை ஸ்ரீ. மு. இராகவையங்கார் 'மார்கழி நோன்பாகிய தைந்நீராடல்' என்ற ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் வெளியிட்டிருக்கிருர்.

சங்க காலத்திலே மார்கழி நோன்பு பிரசித்தமாக இருந்தது. மார்கழி நீராடலைத் ‘தைந்நீராடல்’ என்று சங்க நூல்கள் கூறுகின்றன. இது குறித்த விவரங்களை ஸ்ரீ இராகவையங்காரின் மேலே குறித்த கட்டுரையில் கண்டுகொள்ளலாம்.

‘இம்மைப்பயன் கருதிக் கன்னியரால் ஆதியில் நடத்தப் பெற்று வந்த மார்கழி நோன்பானது, மறுமை கருதி அடியார்களால் ஈசுவர பரமாகப் பாடப்பெறும் பெருமையை அடைந்தது’ என்பதற்குத் திருப்பாவையும் திருவெம்பாவையும் இரண்டு முக்கியமான சான்றுகள். பழைய நோன்பைத் தமிழ் நாடு மறந்துவிட்டபின், மார்கழி மாதத்தில் அருணோதயத்தில் நீராடி வைணவர்கள் திருப்பாவைப் பாடல்களையும், சைவர்கள் திருவெம்பாவைப் பாடல்களையும் ஓதி ஆராதனை நடத்துவது மத அனுஷ்டானமாகி விட்டது. நாளொன்றுக்கு ஒரு பாட்டாகத் திருப்பாவை முப்பது பாசுரங்களையும் மார்கழி மாதம் முழுதும் வைணவர்கள் ஓதுவது மரபு.

திருப்பாவை முதற்பாட்டில் நோன்பு நோற்கும் காலத்தையும், காரியத்தை நிறைவேற்றும் கண்ணனையும் கொண்டாடுகிறார்கள் ஆயர் சிறுமியர். இரண்டாம் பாட்டில் கன்னியர் நிகழ்த்திவந்த கிரியைகளும், மூன்றும் பாட்டில் நாட்டாருக்கு நலம் பெருகும் என்றும் சொல்லி, நான்காம் பாட்டில் மழைக்கடவுளை நாடெங்கும் மழைபெய்ய நியமிக்கிறார்கள். ஐந்தாம் பாட்டில் நோன்பிற்கு இடையூறுகளைப் போக்க எம்பெருமானைச் சிந்தித்துப் பாடவேண்டும் என்கிறார்கள். ஆறுவது பாட்டு முதல் பதினைந்தாம் பாட்டு வரையுள்ள பத்துப் பாசுரங்களால் ஒத்த பருவத்

தினரான தோழியரைத் துயிலுணர்த்துகிறார்கள். பதினாறு, பதினேழாம் பாடல்களில் நந்தகோபர் மாளிகை காப்பவரையும், நந்தகோபர் யசோதை கண்ணன் பலராமன் ஆகியவர்களையும் எழுப்புகிறார்கள். 18, 19, 20-ஆம் பாடல்களில் நப்பின்னைப் பிராட்டியையும் கண்ணபிரானையும் துயிலுணர்த்துகிறார்கள். 21, 22, 23-ஆம் பாடல்களில் தாங்கள் வந்த வகையை விண்ணப்பித்து, சிங்காதனத்தில் வீற்றிருந்து அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள். 24-ஆம் பாட்டில் கொலுவை வாழ்த்தி, 25-ல் தங்கள் விருப்பத்தை விண்ணப்பஞ் செய்கிறார்கள். 26-ல் நோன்புக்குரிய உபகரணங்களான வாத்தியங்களையும் விருதுகளையும் அபேட்சிக்கிறார்கள். 27-ல் நோன்பு முடிந்ததும் மகளிர் கொள்ளும் கோலத்தையும் விருந்தையும் சம்மானங்களாக அபேட்சிக்கிறார்கள். 28-ல் அவனோடுள்ள உறவை வற்புறுத்துகிறார்கள். 29-ல் தங்களுடைய நோக்கத்தை வெளிப்படையாகக் கூறுகிறார்கள். 30-வது பாட்டு, பிரபந்தத்தின் பயனைச் சொல்லும் இறுதிப் பாசுரம்.

திருப்பாவையின் முப்பது பாசுரங்களையும் தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் என்றும் வாடாது, தெய்வ மணங்கமழும் முப்பது மலர்களாலான ஓர் இசைத் தமிழ்ப் பூந்துணர் எனக் கூறலாம். பாவனா சக்தியின் முதிர்ச்சியால் கோதையின் காதலுள்ளம் காலவெள்ளத்திலே பின்னோக்கித் தாவிப்பாய்ந்து கண்ணன் வாழ்ந்த ஆய்ப்பாடியில் சென்று குடியேறுகிறது, கோபியருள் கோபியாக. அந்த ஆயச் சிறுமிகளின் இயல்பையும் மனப் போக்கையும், சொல்லையும் செயலையும் வெளியிடும் 'பேசும் படம்'போல்

ஓடிக்கொண்டிருக்கும் இச்சிறு பிரபந்தத்தினிடையே கோதை 'இடைநடையும் இடைமுடியும் இடைப் பேச்சும் முடை நாற்றமுமாய்'க் காட்சி வழங்குகிறாள் என்பர்.

திருப்பாவைமீது இராமானுஜருக்கு அளவற்ற பக்தி உண்டு. இதைக் 'கோதை தமிழ் முப்பது' என்றும், 'வேதம் அனைத்துக்கும் வித்து' என்றும் சொல்லுகிறார்கள்.

பாதகங்கள் தீர்க்கும், பரமன் அடிகாட்டும்,
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் ;
நீராடப் போதுவீர் ! போதுமினோ, நேரிழையீர் !
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேல்-கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்,
நாரா யணனே நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (1)

பதவுரை

மார்கழித் திங்கள் - மார்கழி மாதத்திலே (இந்நாள்),
மதி நிறைந்த - சந்திரன் கலை நிறைந்திருக்கின்ற ;
பூர்ண சந்திரோதயத்தையுடைய
நன்னாளால் - நல்ல (சுக்கிலபட்ச பௌர்ணமி)
நாளாக இருக்கிறது.
நீராடப் போதுவீர் - நீராடவேண்டும் என்ற
விருப்பம் உள்ளவர்களே !

போதுமின் - வாருங்கள், (ஓ - அசை)
நேரிழையீர் ! - அழகிய ஆபரணங்களை அணிந் திருக்கும் பெண்களே !
சீர் மல்கும் - சிறப்பு நிறைந்த
ஆய்ப்பாடி-ஆய்ப்பாடி அல்லது கோகுலத்தில் உள்ள
செல்வச் சிறுமீர்காள் ! - செல்வமான சிறுமியர்களே!
கூர்வேல் கொடுந் தொழிலன் - கூர்மையான வேலும் கொடுந்தொழிலும் உள்ளவன் (ஆகிய)
நந்தகோபன் குமரன் - நந்தகோபரது பிள்ளை,
ஏர்ஆர்ந்த கண்ணி யசோதை - அழகு நிறைந்த கண்களையுடைய யசோதையின்
இளஞ்சிங்கம் - சிங்கக்குட்டி போன்ற மகன்,
கார்மேனிச் செங்கண் - கரிய திருமேனியும் செந்தாமரைப்பூப் போன்ற கண்களும்
கதிர்மதியம் போல் முகத்தான் - சூரியனும் சந்திரனும் ஒத்த முகமும் உடையவன் (ஆகிய)
நாராயணனே நமக்கே - நாராயணன் தானே, (தன்னை நம்பிய) நமக்கே
பறை தருவான் - (நோன்பிற்கு வேண்டிய) பறையைக் கொடுப்பான்.
பாரோர் - இவ்வுலகத்தவர்
புகழப் படிந்து - புகழும்படி (நோன்பிலே) இறங்கி-
ஏலோர் எம்பாவாய் - பாவையென்ற பிரபந்தத்தில் ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் அடி நிறைக்க வந்த சொற்றொடர்.

பொழிப்புரை

அழகிய ஆபரணங்களை அணிந்தவர்களும், சீர் நிறைந்த ஆய்ப்பாடியில் உள்ளவர்களுமான செல்வச் சிறுமியர்களே ! இந்த நாள் மார்கழி மாதத்தில் சுக்கில பட்ச பௌர்ணமியாகிய மங்கள தினமாக நமக்கு

வாய்த்திருக்கிறது. உலகத்தவர் புகழும்படி இம் மார்கழி நோன்பு நோற்க உடன்பட்டு நீராட வரவேண்டும் என்ற விருப்பம் உடையவர்களே! வாருங்கள். ஏனெனில், வடித்துக் கூர்மையாக்கிய வேலாயுதத்தை யுடையவரும் தன் செல்வப் பிள்ளைக்குத் தீங்கு செய்வோரைக் கொடுமையாகத் தண்டிப்பவருமாகிய நந்தகோபருடைய புதல்வனுய், அழகு நிறைந்த கண்களையுடைய யசோதைப் பிராட்டியின் இளஞ்சிங்கமாய், காளமேகம் ஒத்த மேனியும் செந்தாமரை மலர்போன்ற கண்களும் சூரியசந்திரரை ஒத்த முகமண்டலமும் உடையவனுய் விளங்கும் நாராயணன் தானே, அவனையே நம்பி அவன் கை பார்த்திருக்கின்ற நமக்கே நமது விருப்பத்தை (நோன்பிற்கு வேண்டியதை) நிறைவேற்றச் சித்தமாயிருக்கிருன்.

விளக்கம்

'ஆய்ப்பாடியில் உள்ள சிறுமியர்களே! அழகனுன கண்ணன் நமது நோன்பிற்கு வேண்டியவற்றைத் தருவான், ஆகவே இம்மார்கழி நோன்பு நோற்க விருப்பமுடையவர்கள் எல்லோரும் வாருங்கள்' என்று ஆய்ப்பாடிக் கன்னிகைகளில் சிலர் மற்றைக் கன்னிமார்களை அழைக்கிருர்கள்.

பால், நெய் முதலியவற்ருல் சீர்மை பொருந்தியது ஆய்ப்பாடி; இங்கே கண்ணன் வந்து பிறந்த சிறப்பும் உண்டு. இங்குள்ள செல்வமான சிறுமியர்கள் கண்ணனுடைய அன்புச் செல்வத்திற்கு உரியவர்கள். பரம சாதுவாக இருந்த நந்தகோபர் தம் மகன்மீதுள்ள பேரன்பினுல் வேலும் கையுமாய்க் 'கொடுந்தொழில' ராகிவிடுகிருர். கண்ணனைப் பார்த்துப் பார்த்துக் களிக்கும் யசோதையின் அந்தக் களிப்பின் மிகுதியே, அந்த அழகிய கண்களில் மேன்மேலும் அழகை நிறைத்துவிடுகிறதாம்.

கண்ணனுடைய முகமண்டலத்தின் ஒளிக்குக் கதிரவனும், குளிர்ச்சிக்குச் சந்திரனும் உவமை. தாபங்கள் தீர்க்கும் மேனியைக் 'கார்மேனி' என்றும், 'காதலாகிக் கசிந்து' அருள் செய்யும் கண்களைச் 'செங்கண்' என்றும் இப்பெண்கள் கூறுவதாய்க் கருதலாம்.

'பறை' - நோன்பிற்கு வேண்டிய வாத்தியங்களில் ஒன்று. பறை என்பதை வியாஜமாகக் கொண்டு ஸ்ரீகிருஷ்ண கைங்கரியம் செய்வதே இவர்களது விருப்பம். 'பார்' என்பது உலகத்தின் ஒரு சிறு பகுதியாகிய ஆய்ப்பாடியையும் குறிக்கும். கண்ணனுடன் தோழமை கூடாதென்று தடுத்திருந்த ஆய்ப்பாடித் தலைவர்களே இப்போது இப்பெண்களுக்கு இந்த நோன்பு நோற்க அனுமதி கொடுத்துவிட்டார்களாம். நோன்பு நோற்றுக் கண்ணன் அருளால் மழை பெய்து நாடு செழித்தால், ஆய்க்குலத்து முதியவர்கள் புகழக்கூடுமல்லவா? நீராடுவதை வியாஜமாகக்கொண்டு இவர்கள் கண்ணனை அடைய விரும்புகிறார்கள்.

உள்ளுறை பொருள்

கைங்கரிய ருசியுள்ள பாகவதர்களைப் பணிசெய்ய அழைத்தல் இப்பாசுரத்தின் உட்பொருள் என்பர். குருவின் அருளினாலே இறைவனுடைய அங்கீகாரத்திற்குக் காரணமான சத்துவ குணம் மிகுந்த காலம் வாய்த்திருக்கிறது. 'இக்காலத்திலே, ஞான பக்தி வைராக்கியங்களை ஆத்மாவுக்கு ஆபரணமாய்க் கொண்டிருப்பவர்களே! வாருங்கள். இறைவன் ஸத்குருவுக்கு வசப்படுகிறான்; தாயாகிய திருமந்திரத்தில் விளங்குகிறான்; அடியார்க்கு அணுகத்தக்கவனாகவும், அல்லாதார்க்கு எட்ட முடியாதவனாகவும் இருக்கிறான். அவனிடத்திலேயே நாம் பேறு பெறக்

கடமைப்பட் டிருக்கிறோம், வேறொருவரிடத்திலும் அல்ல என்ற உணர்ச்சியுடன், நம்முடைய அபேட்சித மான பணியை நிறைவேற்றுவிப்பான் என்ற நம்பிக்கையுடன், கைங்கரிய விருப்பம் உள்ளவர்கள் எல்லோரும் வாருங்கள் - என்று உள்ளுறைபொருளை விரித்துக் கூறுகிறார்கள்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்கு,
செய்யும் கிரிசைகள் கேளீரோ: பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி,
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி,
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

பதவுரை

வையத்து - பூமியில்
வாழ்வீர்காள் - வாழும் பேறு பெற்றவர்களே!
நாமும் - ('அவனாலேதான் நமக்குப் பேறு' என்றிருக்கிற) நாமும்
நம் பாவைககு - நமது பாவை நோன்புக்கு;
செய்யும் கிரிசைகள் - (அங்கமாகச்) செய்யவேண்டிய கிரியைகள் அல்லது காரியங்களை
கேளீரோ - கேட்பீராக:
பாற்கடலுள் - திருப்பாற்கடலுள்
பையத் துயின்ற - மெல்லத் தூங்குகிற; யோக நித்திரை செய்கிற
பரமன் அடி பாடி - பரமபுருஷனுடைய திருவடிகளைப் புகழ்ந்துபாடி,

நெய் உண்ணோம் - நெய் உண்ணமாட்டோம் ;
பால் உண்ணோம் - பாலையும் பருகமாட்டோம் ;
நாள்காலே நீராடி - விடியற்காலத்திலேயே நீராடிய
பின்,
மை இட்டு எழுதோம் - (கண்களில்) மையிட்டு
அழகு செய்துகொள்ள மாடடோம் ;
மலர் இட்டு நாம் முடியோம் - கூந்தலில் பூச் சூட்டி
முடித்துக்கொள்ள மாட்டோம் ;
செய்யாதன செய்யோம் - (பெரியோர்) செய்யாத
வற்றைச் செய்யமாட்டோம்;
தீக்குறளை - கொடிய கோட்சொற்களை
சென்று (கண்ணனிடம்) போய்
ஓதோம் - சொல்லமாட்டோம்;
ஐயமும் பிச்சையும் - தானத்தையும் பிச்சையையும்
ஆம்தனையும் - ஆமளவும் ; இயன்றவரையிலும்
கைகாட்டி – 'நாம் கொடுத்தோம்' என்ற
செருக்கில்லாமல் கொடுத்து
உய்யுமாறு - பிழைக்கும் வழியை
எண்ணி - நினைத்துப் பார்த்து
உகந்து - மகிழ்ந்து -

பொழிப்புரை

இப்பூவுலகில், அதாவது கண்ணன் அவதரித்த இப் பூமியிலே இக்காலத்தில் வாழும் பேறுபெற்ற பெண்களே! 'அவனாலேதான் நமக்குப் பேறு கைகூடவேண்டும்' என்றிருக்கும் நாங்கள் உய்யும் வகையை எண்ணிப் பார்த்து மகிழ்ந்து நம்முடைய பாவை நோன்புக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள் ; அவை எவை யென்றால், நாங்கள் திருப்பாற்கடலில் மெல்ல யோகநித்திரை செய்கிற புருஷோத்தமனுடைய திருவடிகளைப் பாடிப் புகழ்ந்து விடியற் காலத்திலேயே

நீராடி, தானமும் பிச்சையும் கேட்பவர் திருப்தியடையும் அளவும் செருக்கில்லாமல் கொடுத்து, நெய்யும் பாலும் உண்ணுதவர்களா யிருப்போம்; கண்ணுக்கு மையிட்டுக் கூந்தலுக்குப் பூச் சூட்டி அலங்கரித்துக் கொள்ள மாட்டோம்; பெரியோர் செய்யாத காரியங்களைச் செய்யமாட்டோம்; கண்ணனிடம் போய்ப் பிறருக்குத் தீமை விளைக்கும் கோள் சொல்லமாட்டோம்.

விளக்கம்

பாவை நோன்பு நோற்பதற்குத் தாங்கள் மேற்கொண்டிருக்கும் நியமங்களைச் சில கோபியர்கள் மற்றைக் கன்னிமார்களிடம் தெரிவிக்கிருர்கள். அந்நியமங்களில் சில 'பிரவ்ருத்தி' ரூபமானவை; சில 'நிவ்ருத்தி' ரூபமானவை. அதாவது பற்றிக்கொள்வன சில, விடவேண்டியவை சில. எந்த விசேஷ காரியத்தில் ஈடுபட்டவர்களும் அக்காரியம் கைகூடும் வரையில் சிலவற்றை விடவேண்டுமென்றும், சிலவற்றைப் பற்றவேண்டுமென்றும் நியமம் கொள்வதுண்டு. அப்படியே இப்பெண்களும் சில நியமங்களைச் சங்கற்பித்துக் கொள்கிருர்கள்.

இந்நியமங்களில் (1) பரமனடி பாடுதல், (2) காலை நீராடுதல்; (3) ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கை காட்டுதல் — இம்மூன்றும் பிரவ்ருத்தி ரூபமானவை, அதாவது செய்யவேண்டியவை. இனி, (1) நெய்பால் உண்ணுதது; (2) மையாலும் மலராலும் அலங்கரித்துக் கொள்ளாதது; (3) செய்யாதன செய்யாமலிருப்பது; (4) கோள் சொல்லாமலிருப்பது ஆகிய சங்கற்பங்கள் 'விடும் கிரியைகளைக்' குறிப்பன. 'செய்யும் கிரியைகள்' என்று ஆண்டாள் கூறுவதில் 'விடும் கிரியை'களும் அடங்கியுள்ளன.

'ஐயம்' வேறு, 'பிச்சை' வேறு. ஐயம் - தகுதி வாய்ந்த பெரியோர்களுக்கு உரிய காலத்தில் வேண்டுமளவு மிகுதி

யாக உதவுதல். பிச்சை - பிரம்மசாரிகளுக்கும் துறவிகளுக்கும் பிட்சுக்களுக்கும் கொடுப்பது. 'கைகாட்டி' என்ற சொற்ருெடரின் நயம் கவனிக்கத்தக்கது: கை எவ்வளவு கொடுத்தாலும், நெஞ்சு 'நாம் என்ன கொடுத்துவிட்டோம்!' என்று நினைக்கவேண்டுமாம்.

உள்ளுறை பொருள்

'வையத்து வாழ்வீர்காள்!' என்பது கடவுளை அனுபவித்து வாழ்பவர்களைக் குறிக்கும். பாவை நோன்பிற்கு அங்கமானவை, பாகவதர்கள் மேற்கொண்டு ஒழுகும் 'பிரவ்ருத்தி மார்க்க'த்தின் உறுப்புக்களுக்கும் அறிகுறி. உய்யும் வகையை எண்ணி மகிழ்ந்து இறைவனையே சர்வ போக்யமாகக் (போக்யம் - அனுபவிக்கத் தக்கது) கொள்ளவேண்டும் என்பது குறிப்பு. இவ்வுள்ளுறை பொருளில் 'ஐயம்' பகவத் வைபவத்தைக் குறிக்குமென்றும், 'பிச்சை' பாகவத வைபவத்தைக் குறிக்குமென்றும் கூறுவர். இவை இரண்டையும் அறிந்தவரையில் பிறருக்கு உபதேசிக்கவேண்டும் என்பர். பகவானுடைய சந்நிதியில் பாகவத வைபவத்தையும், பாகவதர்கள் முன்னிலையில் பகவானுடைய வைபவத்தையும் இயன்றவரையில் கூறவேண்டும் என்பர். இவ்வைபவங்களைச் சிறிதும் கர்வமில்லாது பேசவேண்டும்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி,
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றுநீ ராடினல்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்(து)
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல்உகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல்-பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

பதவுரை

ஓங்கி உலகளந்த - ஓங்கி வளர்ந்து உலகங்களைத் திருவடிகளால் அளந்துகொண்ட
உத்தமன் பேர் - புருஷோத்தமனுடைய திருநாமங்களை,
பாடி - (அன்புடன்) பாடி;
நாங்கள் நம் பாவைக்கு - நாங்கள் தொடங்கியுள்ள பாவை நோன்புக்கு
சாற்றி - (அங்கமென்று) சொல்லி
நீராடினால் - ஸ்நானம் செய்தால் (அதன் பயனாக),
தீங்கு இன்றி - ஒரு தீங்கும் இல்லாமல்
நாடெல்லாம் - நாடு முழுவதும்
திங்கள் மும்மாரி பெய்து - மாதம் மூன்று மழை பெய்ய (அதனால்)
ஓங்கு பெருஞ் செந்நெலூடு - உயர்ந்து வளர்ந்து பருத்துள்ள செந்நெற் பயிர்களின் நடுவில்
கயல் உகள - கயல்மீன்கள் துள்ள,
பூங்குவளைப் போதில் - அழகிய குவளை மலர்களில்
பொறி வண்டு - புள்ளிகளையுடைய வண்டுகள்
கண் படுப்ப - (இனிது) உறங்க,
தேங்காதே - சலியாமல்
புக்கு - புகுந்து
இருந்து - பொருந்தியிருந்து
சீர்த்த முலைபற்றி - பசுக்களின் பருத்த மடிகளைப் பிடித்து

வாங்க - இழுக்க
குடம் நிறைக்கும் - (கறக்கக் கொண்டுபோயிருக்கும்) குடங்களை நிறைத்துவிடும்
வள்ளல் பெரும் பசுக்கள் - வள்ளல் தன்மையுள்ள பெரிய பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து - குறையாத செல்வம் நிறையும்படி-

பொழிப்புரை

ஓங்கி உலகளந்த புருஷோத்தமனுடைய திருநாமங்களைப் பக்தியுடன் பாடி, நாங்கள் தொடங்கியுள்ள பாவைநோன்புக்கென்று சங்கற்பித்து நீராடினால், அதன் பயனாக நாடெங்கும் க்ஷேமமாயிருக்கும்படி மாதம் மும்மாரி பெய்யும். அதனால் செந்நெற் பயிர்கள் ஓங்கி வளர்ந்து செழித்திருக்க, அவற்றினிடையே கயல்மீன்கள் களிப்பினால் துள்ளும். அழகிய நீலமலர்களில் புள்ளிகளையுடைய வண்டுகள் இனிதாக உறங்கும். நீங்காத செல்வம் நிறையும்படி வள்ளல்கள்போல் பெரும் பசுக்கள், தொழுவில் புகுந்து சலியாமல் இருந்து பருத்த மடிகளை ஆயர்கள் பற்றிக் கறக்க, குடங்குடமாகப் பால் நிறையச் செய்யும்.

விளக்கம்

வேறொரு பயனையும் கருதாமல் பகவந்நாம ஸங்கீர்த்தனத்தையே பயனாகக் கருதுகின்ற நாங்கள் நோன்புக்கு அங்கமாய் உலகளந்த உத்தமன் பேர் பாடி விடியற்காலத்தில் நீராடினால், அதன் பயனாக, நோயும் க்ஷாமமும் நீங்கி நாடு முழுவதும் மழை பெய்து க்ஷேமம் அடையும் என்கிறார்கள்.

மாதம் மும்மாரி பெய்வதால் நீர்வளம் ஏற்படும். நீர்வளத்தால் நெல்வளம் ஏற்படும். பயிர்களிடையே

மீன்கள் துள்ளுவது, நீரின் மிகுதியைக் காட்டுகிறது. நீர்ப்பூக்கள் மலர, அப்பூக்களில் மதுபானம் செய்த வண்டுகள் அப் 'பூமெத்தை' களிலேயே இனிது உறங்கும் என்பதும், நீர்வளத்திற்கும் செழிப்பிற்கும் அறிகுறி. நீர்வளத்தால் மக்களுக்குச் செந்நெல் ஏராளமாய்க் கிடைப்பது போல், மாடுகளுக்கும் நல்ல மேய்ச்சல் கிடைக்கிறது. அதனால் பசுக்கள் பாலை மிகுதியாகக் கறக்கும். பசுக்களும் பாலும் ஆயர்களின் பெருஞ்செல்வமல்லவா?

'தேங்காதே', 'வாங்க' என்ற சொற்களில் உள்ள நயம் கவனிக்கத்தக்கது. ஒருமுறை முலைக்காம்பை இழுத்துக் கைவாங்கின மாத்திரத்தில் குடம் நிறைந்துவிடுகிறதாம். எனவே, பால் கறக்கப் புகுந்தவர்கள், பெருகும் பால்வெள்ளத்தைக் கண்டு அஞ்சாமல், ஏங்காமல் இருக்கவேண்டுமென்பது குறிப்பு.

உள்ளுறை பொருள்

பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்து பகவானை அனுபவிக்கும்போது, உலகமே குறைகளில்லாமல் க்ஷேமம் அடையும். இம்மண்ணுலகிலும் ஆத்ம வர்க்கங்கள் களித்துத் துள்ளும் என்பது, மீன்கள் துள்ளும் என்பதன் உட்பொருள். வண்டு மலரில் இனிது உறங்குவது, ஞானிகளின் இதய மலரில் தெய்வ வண்டாகிய இறைவன் இனிது கண் வளர்வதற்கு ஒரு நினைவுக்குறி.

இப்பாட்டில் கடைசி மூன்றடிகளின் உட்பொருள் : சீடன் ஆசிரியரது திருவடியைப் பிடித்துக் கொண்டு பிரார்த்திக்க, அவனுக்குப் பரிபூர்ண ஞானத்தை ஆசிரியர் கொடுத்து இறைவனது அழகிய குணங்களை அனுபவிக்கச் செய்வர் என்பது. 'வாங்கக்

குடம் நிறைக்கும் வள்ளற் 'பெரும் பசுக்கள்' நல்லாசிரியர்களுக்கு அறிகுறி.

முதற்பாட்டு, 'நாராயணனே' என்று இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பரமபதநாதனைப் பிரஸ்தாபிக்கிறது. இரண்டாம் பாசுரம், 'பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்' என்று அந்த வியூகமூர்த்தியைச் சொல்லுகிறது. இம்மூன்றாம் பாசுரம், 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று திரிவிக்கிரமனாக வளர்ந்த வாமனாவதாரத்தைக் குறிப்பிடுகிறது.

கவி நயம்

இப்பாட்டின் கவிநயம் விசேஷமாய்க் கவனிக்கத் தக்கது. 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்ற எடுப்பிலேயே காம்பீர்யம் தொனிக்கிறது. இவ்வுத்தமனின் பக்தர்களும் ஓங்கி உலகளந்து உலகத்தைத் திருத்தும் மகாத்மாக்களாக விளங்கக்கூடும் என்பது குறிப்பு.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப'

என்ற மூன்று அடிகளும், இயற்கை யழகுகளுக்கும் நாட்டின் செழிப்பிற்கும் ஓர் அழகான பாட்டோவியம்.

வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்

என்பது, பசுக்கள் எப்படிப் பழைய தமிழகத்தின் செல்வமாக இருந்தன என்பதை எவ்வளவு அழகாக நினைப்பூட்டுகிறது!

இப்பாட்டு நீர்வள நிலவளங்களோடு ஆண்டாளின் சொல்வளத்திற்கும் ஒரு நல்ல சான்று.

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ-கைகரவேல்;
ஆழியுள் புக்கு முகந்துகொ(டு) ஆர்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்,
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

பதவுரை

ஆழி - கடல் (போல் கம்பீரமா யிருக்கும்)
மழைக்கண்ணா - மழைக்கடவுளே !
ஒன்றும் நீ - நீ ஒன்றையும்
கை கரவேல் - கையிருப்பாக ஒளித்து வைத்துக்கொள்ளாதே ;
ஆழியுள் புக்கு - கடலினுள் புகுந்து
முகந்து கொடு - அங்குள்ள நீரை முகந்துகொண்டு
ஆர்த்து - ஒலி செய்து, ஆரவாரம் செய்து
ஏறி - (வானவீதியில்) ஏறி,
ஊழி முதல்வன் - (எல்லாவற்றுக்கும்) முதற்காரணமாகிய பகவான்
உருவம்போல் - உருவத்தைப்போல
மெய்கறுத்து - மேனி கறுத்துத் தோன்றி,
பாழி அம் தோளுடை - வலிமை பொருந்திய அழகிய தோள்களையுடைய
பற்பநாபன் கையில் - பத்மநாபனது கையிலுள்ள
ஆழிபோல் - (வலப்புறமுள்ள) சக்கரம்போல்
மின்னி - ஒளிவீசி,

வலம்புரிபோல் - (இடப்பக்கமுள்ள) வலம்புரிச் சங்குபோல்

நின்று அதிர்ந்து - நிலையாக இடிகள் இடித்து,

தாழாதே - தாமதியாமல்

சார்ங்கம் - (பகவான் கையிலுள்ள) சார்ங்கம் என்னும் வில்

உதைத்த சரமழைபோல் - பொழிந்து தள்ளிய அம்பு-மழைபோல்

வாழ - (அனைவரும்) வாழும்படி; (அனைவருக்கும்) வாழ்வு உண்டாகும்படி

உலகினில் - உலகத்தில்

பெய்திடாய் - மழை பொழிவாயாக,

நாங்களும் - (நோன்பு நோற்கும்) நாங்களும்

மார்கழி நீராட - மார்கழி நீராட்டம் செய்ய

மகிழ்ந்து - மகிழ்ச்சியடைந்து -

பொழிப்புரை

கடல்போல் கம்பீரமா யிருக்கும் மழைக்கடவுளே! நீ உன் கொடையில் ஒன்றும் கையிருப்பாக வைத்துக் கொள்ளாதே! நடுக் கடலுள் புகுந்து அங்குள்ள நீரை யெல்லாம் மொண்டுகொண்டு உத்ஸாக ஆரவாரத்துடன் வானவீதியில் ஏறி வரவேண்டும். வந்து எம்பெருமான் திருமேனிபோலக் கறுத்துத் தோன்றி, அவன் வலது கையிலுள்ள சக்கரம்போல் மின்னி, இடது கையிலுள்ள வலம்புரிச் சங்குபோல் முழங்கி, உலகமெல்லாம் வாழும்படி, நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராடும்படி, காலதாமதம் செய்யாமல் சடக்கென்று மழை பொழிய வேண்டும். எம்பெருமானுடைய சார்ங்கமென்னும் வில் உதைத்துத் தள்ளும் அம்புமழைபோல் மழை பொழிவாயாக!

விளக்கம்

'மழையே, மழையே! வா, வா!' என்று சிறுமியர் பாடுவதுபோல், இந்த ஆய்ச் சிறுமியர் மழையின் அதிதேவதையைக் குறித்துப் பாடுகிறார்கள். இந்த இடைச் சிறுமியர் தாம் நோன்பு நோற்றால் நாட்டுக்கு விளையக் கூடிய நன்மைகளை (முன் பாட்டில் உள்ளதுபோல்) எண்ணிச் சொல்லிக்கொண் டிருக்கையில். 'பக்தைகளான இவர்களுக்கு நம்மால் இயன்ற உதவி செய்யவேண்டும்' என்று மழைக்கடவுள் இவர்களது நியமனத்தை எதிர் நோக்கி யிருக்கிறான். இவர்கள் அவனை நோக்கிப் பிரார்த்திக்கவில்லையாம்; அவனே பிரார்த்தித்து இவர்களது கட்டளையை எதிர்பார்க்கிறான். இந்நிலையில் ஆய்ச்சியர், 'மழையே! உலகமெல்லாம் க்ஷேமம் அடையும்படி. நீ பெய்யவேண்டும்' என்று கட்டளையிடுகிறார்களாம்.

'வாராய் மழைமேகமே! உன் கொடையை நீ சிறிதும் ஒளிக்கலாகாது; கடலின் நடுவிலே இறங்கி அங்குள்ள நீர் முழுவதையும் அப்படியே முகந்து, "வானத்தின் மீது வந்துவிட்டது கருங்கடல்!" என்று சொல்லும்படி வானத்தை மூடிவிட வேண்டும்' என்கிறார்கள். பக்தைகளானதால், மேகக் கருமைக்குத் தங்கள் காதலனுடைய மேனி நிறத்தையும், மின்னலுக்கு அவனது சக்கராயுதத்தின் ஒளியையும், இடிமுழக்கத்திற்கு அனுகூலர்கள் களிக்கும்படி முழங்கும், அந்தச் சங்கின் ஒலியையும், மழைத் தாரைகளுக்குப் பிரதிகூலர் ஒழிந்து அனுகூலர் செழிக்க அவன் கையில் பொழியும் அம்புமழைகளையும் ஒப்பிட்டு மகிழ்கிறார்கள்.

மழை, அனுகூலர் பிரதிகூலர் என்று பாராமல் உலகமெல்லாம் வாழ்விப்பதுபோல், 'சார்ங்கம் உதைத்த சரமழை'யும் அனுகூலர்களை வாழ்விப்பதுபோல்,

பிரதிகூலர்களையும் அவர்களது தீவினைப் போர்வையாகிய உடலைப் போக்கி வாழ்விக்கிறது என்பது குறிப்பு.

உள்ளுறை பொருள்

சமுதாயத்திற்குக் கருணை பொழிந்து உலகத்தை வாழவைத்த ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் மேகம் என்று கூறுவதுண்டு. இம்மேகம் பகவானுடைய அழகிய குணக்கடலில் புகுந்து அக்கடலை நன்ருக அனுபவித்து உள்ளடக்கிக் கொள்கிறதாம். இந்த அனுபவத்தினுல் இந்த ஆசிரியர்கள் குண வேறுபாடு மட்டுமல்ல, தேக காந்தியிலும் வேறுபாடு அடைந்தார்களாம்.

மேகமானது மழை பெய்து பிராணிகளைக் காப் பாற்ற வானப் பரப்பெங்கும் திரிவதுபோல் ஆசிரியர் களும் உலகம் உய்ய வழிகாட்ட எங்கும் சஞ்சரிக்கிருர் களாம். மேகம் மழையினுல் குளம் முதலியவற்றை நிறைப்பதுபோல், ஆசிரியர்களும் ஞானமாகிய மடுவைத் தாம் பொழியும் பகவத்குண தீர்த்தத்தினுல் நிறைத்து அனைவரும் உய்ய உபகரிக்கிருர்களாம்.

கவிநயம்

கோதை தமிழாகிய திருப்பாவையில் இந்த மழைப் பாட்டு மிகவும் அழகான பாடல்களில் ஒன்று. 'மழையே! ஒன்றும் நீ கையிருப்பாக உனக்கென்று ஒளித்துவைத்துக் கொள்ளாதே' என்று கூறுவது சிறுமியுள்ளத்தை உள்ளபடியே காட்டுகிறதல்லவா? மேகத்திற்கும் மின்ன லுக்கும் இடிக்கும்மழைத்தாரைகளுக்கும் கண்ணனுடைய மேனி, நிறம் முதலியவற்றை ஒப்பிடும் சிறுமியர், அந்த மழைபோல் கண்ணனுடைய அருளும் இறங்கி வந்து தங்களை வாழ்விக்கும் என்று உறுதியாக நம்புகிருர்கள்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தா மோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது,
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும், செப்பேலோ ரெம்பாவாய். (5)

பதவுரை

மாயனை - (மாயச் செயல்களையுடைய) கண்ணனை,
மன்னு - (கண்ணன் தொடர்பு) நிலைபெற்றிருக்கிற
வடமதுரை - வடமதுரையில் அவதரித்த
மைந்தனை - (இங்கே) வலிமை, அழகு முதலியவற்றை உடையவனை,
தூய - பரிசுத்தமான
பெருநீர் - மிக்க நீரையுடைய
யமுனைத் துறைவனை - யமுனாநதியின் துறையை உடைவனை ; யமுனாதீரவாசியை,
ஆயர் குலத்தினில் - இடையர் குலத்தில்; கோகுலத்தில்
தோன்றும் - தோன்றிய
அணிவிளக்கை - அழகான தீபமங்கள ஜோதியை,
தாயை - தாயாரை
குடல் விளக்கம் செய்த - வயிறு விளங்கச் செய்த ; (தன் பிறப்பினால்) அவ்வயிற்றுக்கு மேன்மையுண்டாக்கின
தாமோதரனை - (இங்கே) கண்ணனை,
தூயோமாய் - தூய்மை உடையவர்களாய்
வந்து நாம் - நாங்கள் வந்து அணுகி,
தூமலர் - தூய மலர்களை

தூவி - முறை பாராமல் போட்டு,
தொழுது - அஞ்சலி செய்து,
வாயினுல் பாடி - வாயாரப் பாடி ; வாய் படைத்த பயனுய்ப் பாடி,
மனத்தினுல் சிந்திக்க - நெஞ்சார நினைத்தால்,
போய பிழையும் - முன்னே செய்த பிழைகளும்,
புகுதருவான் நின்றனவும் - (இனிமேல் தன்னையறியாமல் ஒருவன்) செய்யக்கூடிய பிழைகளும்
தீயினில் தூசாகும் - தீயில் இட்ட பஞ்சுபோல் தீய்ந்து உருமாய்ந்து போகும்,
செப்பு - (எம்பெருமான் திரு நாமங்களைச்) சொல்வாயாக.

பொழிப்புரை

ஆச்சரியமான மாயச் செயல்களை உடையவனும், இறைவன் தொடர்பை நிலையாகப் பெற்றுள்ள வடமதுரையில் அவதரித்த வலிமை வாய்ந்த அழகனும், தூய பெருநீருடன் கூடிய யமுனையாற்றங்கரை வாசியும், தீப மங்கள ஜோதியாகத் தோன்றியவனும், அன்னையின் வயிறு விளங்க அவதரித்தவனும் ஆகிய கண்ணபிரானை, நாம் தூய்மையுடன் வந்து அணுகி, தூய மலர்களைத் தூவித் தொழுது வாயாரப் பாடி நெஞ்சார நினைத்தால். முன்னே செய்த பிழைகளும், இனிமேல் நம்மை அறியாமல் நேரிடக்கூடிய பிழைகளும், தீயிலிட்ட பஞ்சுபோல் உருமாய்ந்து ஒழிந்து போகும். ஆதலால் அந்தக் கண்ணபிரானின் திருநாமங்களைச் சொல்வாயாக.

விளக்கம்

திருப்பாவையில் இப்பாசுரத்திற்கு உள்ள தொடர்பு என்ன? நோன்பு நோற்கப் போகும் பெண்களில் ஒருத்தி,

"நாம் இந்நோன்பு நோற்கப் புகுந்தால் இம்மங்கள காரியத்திற்கு இடையூறு ஏற்படக் கூடுமல்லவா? நாம் நெடுநாளாகச் செய்திருக்கும் பிழைகள் பல இருக்கின்றனவே, அப்பிழைகளின் விளைவு இன்று செய்யக் கருதும் நற்காரியத்திற்கு இடையூறு ஆகாதா?' என்று கேட்பதாக வைத்துக்கொண்டு, அந்த ஐய வினாவுக்கு இப்பாசுரத்தை மற்றொருத்தி கூறும் விடையாகக் கருதலாம்.

'நாம் நோன்பை அனுஷ்டிக்கத் தொடங்கிப் பகவானை மன மெய் மொழிகளில் கொண்டாடினால், நமது விருப்பம் நிறைவேறுவதற்கு இடையூறான பாவங்களெல்லாம் தாமே நீங்கும். பழைய பாவங்கள் மட்டுமல்ல, இனிமேல் நம்மை அறியாமல் நேரக்கூடிய பாவங்களும் தீயில் விட்ட தூசாகும். ஆதலால் பகவந் நாம ஸங்கீர்த்தனம் செய்வாயாக' என்ற விடையால் முந்தியவளின் சந்தேகம் மறைந்திருக்க வேண்டும்.

பரமபத நாதனும் சர்வேசுவரனுமாகிய இறைவன் ஆய்ப்பாடியில் பிறந்து ஆயர்களுக்கும் பசுக்களுக்கும் எளியனாய், அறிஞர்களுக்கும் அரியனாய், வெண்ணெய் திருடியது, உள்ளங்களைத் திருடியது முதலான அளவற்ற ஆச்சரிய மாயச் செயல்களையெல்லாம் நினைப்பூட்டுகிறது, இப்பாசுரத் தொடக்கத்தில் அமைந்துள்ள 'மாயன்' என்னும் சொல்.

பகவானுக்கும் வடமதுரைக்கும் உள்ள தொடர்பு கிருஷ்ணாவதார காலத்திற்கும் முற்பட்டது என்பர். வாமனாவதார காலத்தில் வடமதுரையே சித்தாசிரமமாக இருந்ததாம். இராமாயணகாலத்தில் சத்துருக்னன் லவணாசுரன் என்ற பகைவனைக் கொன்று அரசாண்ட இடமாக இருந்ததாம். இப்படிப் பகவத்சம்பந்தம் பொருந்தி நிலைபெற்றிருக்கும் வடமதுரைக்கு 'மன்னு' என்ற அடைமொழி கொடுத்திருப்பது பொருத்தம் தானே.

கண்ணனுடைய தொடர்பினுல் யமுனையைத் 'தூய பெருநீர் யமுனை' என்ருர். பிறந்தவுடனே குழந்தைக் கண்ணனை வசுதேவர் எடுத்துக்கொண்டு வந்தபோது, யமுனையின் பெருநீர் (பெரு வெள்ளமாய்ப் பெருகிக் கொண்டிருந்த யமுனையாறு) முழந்தாள் அளவாக வற்றி நின்று வழிவிட்டதாம்.

மதுரையில் மறைந்து ஆய்க்குலத்தில் தோன்றிய ஜோதியை 'ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கு' என்ருர்.

'தூயமாய் வந்து நாம்' என்பதில், இறைவனை நோக்கி வருவதே தூய்மை தரும் என்பது குறிப்பு. 'தாமோதரன்'—தாம+உதரன்=கயிற்றுத் தழும்பை வயிற்றில் உடையவன். 'யசோதை கட்டிய கயிற்றுத் தழும்பை வயிற்றில் உடையவன்' என்று பொருள்படும் 'தாமோதரன்' என்ற நாமம் இறைவனுடைய எளிமைக்கு ஒரு நினைவுக்குறி.

'செப்பு' என்பது 'சொல்லு' என்ற பொருளில் ஒரு பெண்ணை முன்னிலைப் படுத்திக் கூறுகிறது. 'இன்று செய்யக் கருதிய நோன்பு—நற்கிரியை—இனிது நிறைவேறுமோ?' என்று கேட்டவளை முன்னிலைப் படுத்திக் கூறிய இப்பாசுர விடை, அனைவரையும் நோக்கிக் கூறியதாகவே கருதத் தக்கது.

உள்ளுறை பொருள்

உள்ளுறையாகிய ஸ்வாபதேசத்தில், 'ஆயர் குலம்' பாகவத குலத்திற்கு நினைவுக்குறி. பகவானைத் தவிர வேறு சாதனமில்லாமல், வேறு பயன் கருதாமல், 'ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை'யே பாகவதர்களும் உபாயமாகப் பற்றியிருக்கிருர்களல்லவா?

புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு, முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

பதவுரை

புள்ளும் - பறவைகளும்
சிலம்பினகாண் - கூவ ஆரம்பித்துவிட்டன;
புள் அரையன் - பறவைகளுக்கு அரசனான கருடனுக்கு
கோயிலில் - (இங்கே) 'கோ' அல்லது தலைவனான பகவானுடைய இல்லம் அல்லது சன்னிதியில்
வெள்ளை - வெண்ணிறமான
விளிசங்கின் - (எல்லோரையும் கூவி) அழைக்கிற சங்கின்
பேரரவம் - பேரொலி
கேட்டிலையோ - நீ கேட்கவில்லையோ?
பிள்ளாய் - (இங்கே) பெண்ணே! சிறுமியே!
எழுந்திராய் - எழுந்திரு,—
பேய்முலை நஞ்சு - பூதனை என்ற பேய்மகள் தடவிக் கொண்டு வந்த நஞ்சு
உண்டு - (அவள் உயிரோடும்) பருகி,
கள்ளச் சகடம் - வஞ்சனை பொருந்திய (அசுர ஆவேசம் பெற்ற) வண்டி
கலக்கு அழிய - கட்டுக் குலையும்படி
கால் ஓச்சி - காலால் ஓங்கி உதைத்து,

வெள்ளத்து - பாற்கடல் வெள்ளத்திலே
அரவில் - அனந்தன் என்ற ஆயிரந்தலைப் பாம்பின் மீது
துயில் அமர்ந்த - யோக நித்திரையில் அமர்ந்திருக்கும்
வித்தினை - எல்லாவற்றுக்கும் விதையாகிய பகவானை
உள்ளத்துக் கொண்டு - உள்ளத்திலே அமரச் செய்து கொண்டு,
முனிவர்களும் - (மனனசீலர்களான, அதாவது தியானம் செய்யும் தன்மையர்களான) ரிஷிகளும்
யோகிகளும் - யோகப் பயிற்சியில் ஊன்றி யிருப்பவர்களும்
மெள்ள எழுந்து - மெள்ள எழுந்திருந்து
அரியென்ற - 'ஹரி: ஹரி:' என்ற
பேரரவம் - பேரொலி
உள்ளம் புகுந்து - உன் உள்ளத்திற்குள் புகுந்து
குளிர்ந்து - குளிர-

பொழிப்புரை

சிறுமியே! பறவைகளும் கூவ ஆரம்பித்துவிட்டன: பெருமாள் கோவிலில் திருப்பள்ளி யெழுச்சிக்கு ஊதி எல்லாரையும் கூவியழைக்கின்ற வெண்சங்கின் பெரு முழக்கத்தையும் நீ கேட்கவில்லையோ? தாயுருவில் வந்த பேய்மகளை உயிர் பருகி, கள்ளச் சகடாசுரனையும் கட்டழிய உதைத்து முடித்து, பாற்கடலில் அனந்த சயனத்தில் யோக நித்திரை புரிகின்றானே உலகங்களுக்கெல்லாம் ஒரு வித்தாகிய பெருமான், அக்கடவுள்-வித்தினை உள்ளத்திலே கொண்டு முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்து 'ஹரி: ஹரி:' என்கிற அந்தப் பேரொலி உன் உள்ளத்திலும் புகுந்து குளிரச் செய்யும்படி எழுந்திராய்.

விளக்கம்

'இனியாவது எழுந்திரு' என்று ஒருத்தியைத் துயிலுணர்த்தும் பாசுரம் இது. முற்பட எழுந்தவர்கள் எழுந்திராதவர்களை இது முதல் பத்துப் பாசுரங்களில் ('எல்லே இளங்கிளியே!' என்ற பாட்டுவரை) எழுப்புகிறார்கள். நோன்பு என்ற வியாஜத்தால் கண்ணனை அடைய எழுப்புகிறார்கள். இப்பத்துப் பாசுரங்களையும் இத் திருப்பாவையிலுள்ள 'பள்ளியெழுச்சிப் பாடல்கள்' என்று கூறலாம்.

முற்பட எழுந்தவர்கள் முதன்முதல் ஒருத்தியை எழுப்ப, அவள் உறக்க மயக்கத்தால், 'என்ன, அதற்குள்ளே பொழுது விடிந்துவிட்டதா?' என்று கேட்கக் கூடும். அதற்கு விடையாகப் 'பறவைகள் கூவுகின்றன' என்றும், 'கோவிலில் ஊதும் சங்கொலி காதில் விழவில்லையா?' என்றும் எழுப்பியவர்கள் சொல்லுகிறார்கள். முனிவரும் யோகியரும் துயிலுணரும்போது 'ஹரி: ஹரி:' என்று சொல்வதால் எழுகின்ற ஒலியையும் அடையாளமாய்க் கூறுகிறார்கள்.

கிருஷ்ணாவதாரத்திற்குப் பின்பு ஆயர்களுடைய இல்லங்களையும் கொட்டில்களையும் சுற்றிக் கிடப்பர்களாம் முனிவர்களும் யோகிகளும்.

'பிள்ளாய்!' என்ற அழைப்பில் 'கிருஷ்ண பக்தியின் இனிமையை முற்றும் நீ அறியாதவள்' என்ற பொருள் தொனிக்கிறது என்பர்.

பெற்ற தாய்போல் வந்த பேய் மகள் தந்த விஷப் பாலுடன் அவளுடைய உயிரையும் உண்ட கதை, 'பக்த வேடம் பூண்டு இறைவனை ஏமாற்ற முடியாது' என்ற உண்மையை வற்புறுத்துகிறது. கள்ளச் சகடத்தைக் கட்டழித்த கதையும் 'கடவுளின் சன்னிதியில்

கள்ளம்போய் உள்ளது காணும்' என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது.

உள்ளுறை பொருள்

புள் அல்லது பறவை, ஞான கர்மங்களைச் சிறகுகளாகக் கொண்ட பாகவதர்களுக்கு அறிகுறி. 'புள்ளரையன் கோயில்' திருமந்திரத்தையும், 'சங்கு' பிரணவத்தையும் குறிக்குமென்பர். 'வெள்ளை' பிரணவத்தின் தூய்மையைக் குறிக்கும். உள்ளுறை அல்லது ஸ்வாபதேசத்தில், பகவத் விஷயத்திலே புதிதாக ருசி யுண்டாகப்பெற்ற சிடனுக்கு ஆசாரியன் செய்யும் உபதேசம் இப் பாசுரம் என்று கருதலாம்.

'முனிவர்கள்' பகவானுடைய குணானுபவத்தில் ஈடுபட்ட மனன சீலர்களான பாகவதர்கள். 'யோகிகள்' கைங்கரியத்தில் ஈடுபடும் பாகவதர்கள்.

இது முதல் பத்துப் பாசுரங்கள், முதலாழ்வார் முதல் ஆழ்வார் பதின்மரை உணர்த்துவதாகவும் உள்ளுறை கூறுவதுண்டு.

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தம்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து,
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய். (7)

பதவுரை

கீசு கீசு என்று—கீச்சுக் கிச்சென்று
எங்கும்—எல்லா இடங்களிலும்
ஆனைச்சாத்தம் - வலியன் குருவிகள்; கிராமவாசிகளால் 'கீச்சாங் குருவிகள்' என்றும், வடமொழியில் 'பரத்துவாஜ பட்சிகள்' என்றும் சொல்லப்படும் பட்சிகள்
கலந்து - (பேடையுடன்) சேர்ந்து
பேசின - பேசுகின்ற, கத்துகின்ற
பேச்சு அரவம் - குரலின் ஒலியை
கேட்டிலையோ - கேட்கவில்லையோ?
பேய்ப் பெண்ணே - அறிவுகெட்ட பெண்ணே!
காசும் - (கழுத்தில் அணிந்துகொள்ளும்) காசுமாலை என்ற அச்சுத் தாலியும்
பிறப்பும் - 'ஆமைத்தாலி' என்ற ஆபரணமும்
கலகலப்ப - கலகலவென்று சப்திக்க,
கைபேர்த்து - கைகளை முன்பின்னாக மாறி மாறி அசைத்து,
வாச நறுங்குழல் - பரிமள வஸ்துக்களினால் நறுமணம் கமழும் கூந்தலையுடைய
ஆய்ச்சியர் - இடைச்சியர்
மத்தினால் ஓசை படுத்த - கடையும் மத்தினால் ஓசை படுத்திய
தயிர் அரவம் - தயிர் கடையும் ஓசை
கேட்டிலையோ - கேட்கவில்லையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! - பெண்களுக்கு நாயகமாய் இருப்பவளே!
நாராயணன் மூர்த்தி கேசவனை - நாராயண மூர்த்தியின் அவதாரமான கண்ணனை
பாடவும் - நாங்கள் பாடுகையிலும்,

நீ கேட்டே கிடத்தியோ - நீ கேட்டுக்கொண்டே
படுத்துக் கிடக்கிருயோ?
தேசம் - தேஜஸ் அல்லது ஒளியை
உடையாய்! - உடையவளே!
திற - (கதவைத்) திறப்பாயாக.

பொழிப்புரை

வலியன் குருவிகள் ஒன்ருேடொன்று கூடிக் 'கீசுகீசு' என்று எல்லாத் திசைகளிலும் விடிவுக்கு அடையாளமாகக் கூவுகின்றனவே, அக்குரலைக் கேட்கவில்லையா? அறிவுகெட்ட பெண்ணே! கூந்தலுக்குப் பரிமளம் ஊட்டிக்கொண்டு ஆய்ச்சியர் கழுத்திலுள்ள ஆபரணங்கள் கலகலவென்று சப்திக்கக் கைசலிக்க மத்தால் தயிர் கடையும் ஓசையும் உன் காதில் விழவில்லையோ? பெண்களின் நாயகமே! நாராயண மூர்த்தியின் அவதாரமான கண்ணனை நாங்கள் எழுந்துவந்து பாடவும் (நீ தாலாட்டுக் கேட்பதுபோல்) பாட்டைக் கேட்டுக்கொண்டே படுத்துக் கிடந்து உறங்குகிருயா? மிக்க ஒளி வாய்ந்த பெண் மணியே! நீ எழுந்துவந்து கதவைத் திறப்பாயாக.

விளக்கம்

எழுப்பி எழுப்பிப் பெண்களைத் திரட்டிக்கொண்டு மற்ருெருத்தியின் மாளிகை வாசலில் ஆய்ச்சியர் வந்து நிற்கிருர்கள். 'பெண்ணே! பொழுது விடிந்தது, எழுந்துவா' என்று அவர்கள் சொல்ல, அவள் விடிந்ததற்கு அடையாளம் கேட்டாளாம். அதற்குத்தான் எழுப்புகிற பெண்கள் விடையாகச் சிறிது ஆத்திரத்துடன், 'பேய்ப் பெண்ணே! கீச்சாங்குருவிகள் கீச்சுக்கீச் என்று தங்கள் பாஷையில் பேசிக் கொள்ளும் பேச்சரவம் காதில் விழவில்லையா?' என்று கேட்கிருர்களாம்.

அவள் பேசாமல் கிடக்க அவர்கள், 'இவ்வூரில் ஆய்ச்சிகள் எழுந்து தயிர் கடையும் ஓசைகூடச் செவிப்படவில்லையோ ?' என்று கேட்கிருர்களாம்.

'காசு' பொன்னை அச்சிலிட்டுச் செய்த உருக்கள் கோத்த காசுமாலை. 'பிறப்பு' — பலவகை வடிவமாய்ச் செய்த உருக்கள் கோத்த மாலை. 'காசு' அச்சுத்தாலி யென்றும், 'பிறப்பு' ஆமைத்தாலி யென்றும், முளைத்தாலி யென்றும் கூறுவதும் உண்டு.

தயிர் கடையும்போது, வாசம் ஊட்டிய கூந்தல் கட்டவிழ்ந்து தொங்கித் தயிரின் முடை நாற்றத்துடன் போட்டி போடுவதுபோல் பரிமளிப்பதால், 'வாசநறுங் குழல்' என்று அக்கூந்தலைக் குறிப்பிடுகிருர்.

'பேய்ப் பெண்ணே !' என்று முதன்முதல் கூப்பிட்டவர்கள், பிறகு 'பெண்களின் நாயகமே!' என்று பாராட்டுவதுபோல் ஏசியதாகவும் கருதலாம். கடைசியாகத் 'தேஜஸ் உடையவளே!' என்று அழைக்கிருர்கள். அவளை அன்புடன் ஏசியோ, முகஸ்துதி செய்தோ, காரியசித்தி பெறவேண்டும் என்பது அவர்களது நோக்கம். 'பேய்ப் பெண்ணே ! எங்கள் கூட்டத்திற்குத் தலைவியாகிய நீ எங்களையெல்லாம் திரட்டிக் கொண்டுபோய் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டாமா ? உறக்கத்திற்குத் தானோ உன் தலைமைப் பதவி ? உன் ஒளிமிக்க முகத்தை வெளியே கொண்டுவந்து காட்டு, பார்க்கலாம்' என்று கொஞ்சிப் பரிகசித்துக் காரியசித்தி பெறுவதாய் ஊகிக்கலாம். 'தேஜஸ் உடையவளே!' என்ற அழைப்பிலே, 'உன்னைக் காணுமல், பொழுது விடிந்தும் இருண்டு கிடக்கின்றன எங்கள் முகங்களெல்லாம் ! இந்த இருள் தீர உன் ஒளி வாய்ந்த செல்வ முகத்தைக் கதவு திறந்து காட்டாயோ ?' என்று கொஞ்சும் தோழமையைக் குறிப்பாய்க் காணலாம்.

உள்ளுறை பொருள்

வலியன் குருவிகள் ஆணும் பெண்ணுமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் பேச்சரவம், பக்தர்கள் ஒருவரை யொருவர் பிரியும்போது பிரிவுத்துயர் தோன்றப் பேசுவதை நினைப்பூட்டுகிறது என்பர். மகிழ்ச்சியுடன் கலந்து பகவதநுபவம் செய்யும் பரம ரஸிகர்கள் பாகவதர்கள் என்பது குறிப்பு. 'இத்தகைய அனுபவத்தின் மேன்மையை அறிந்த நீங்கள் சொந்த அனுபவமே பெரிதென்று செருக்கியிராமல் பிற பாகவதர்களும் உங்கள் சிறந்த அனுபவத்தை உணரும்படியாக வெளிப்பட்டு வரவேண்டும்; உங்கள் ஞான ஒளியை ஒளித்து வைக்காமல் பிரகாசப் படுத்த வேண்டும்' என்று, சங்கோசத்துடன் தனித்திருக்கும் பரமபாகவதர் ஒருவரைப் பக்தர்கூட்டம் அழைப்பதாக உள்ளுறை கூறுவதுண்டு. நம்மைப் போலவே அனைவரும் நன்மை பெறவேண்டும். 'பகவத் ஸம்பந்தம் மெய்யானல்', தன் குழந்தையின் நன்மையை விரும்புவதுபோல் அனைவருடைய நன்மையையும் உகக்க வேண்டும்' என்பது பக்தர் கொள்கை.

கீழ்வானம் வெள்ளென்(று), எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண். மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்(து)உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம். கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய். பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய் (8)

பதவுரை

கீழ்வானம் - வானத்தில் கிழக்குப் பக்கம்
வெள்ளென்று - வெளுத்திருக்க,
எருமை - எருமைகள்
சிறுவீடு - சிறிது (நேரம் மேய) விடும்போது
மேய்வான் - (பனிப்புல்) மேய்வதற்காக
பரந்தனகாண் - (நாலு பக்கமும்) பரவிச் சென்றன.
மிக்கு உள்ள பிள்ளைகளும் - மிகுதியாக உள்ள பெண் பிள்ளைகளையும்
போவான் போகின்றாரை - (நோன்பிற்கு நீராடப்) போகப் புறப்பட்டவர்களை
போகாமல் - (முன்னமே) போகாதபடி
காத்து - தடுத்து,
உன்னைக் கூவுவான் - உன்னைக் கூப்பிடும் பொருட்டு
வந்து நின்றோம் - (நாங்கள் உன் வாசலில்) வந்து நிற்கிறோம்.
கோதுகல முடைய - (கண்ணனால்) கொண்டாடுதலையுடைய; மிகவும் விரும்பத்தக்க
பாவாய் - பதுமை போன்ற அழகிய பெண்ணே!
எழுந்திராய் - எழுந்திருப்பாயாக.
பாடி - (கண்ணன் குணங்களைப்) பாடி,
பறை கொண்டு - (நோன்பிற்கு அவனிடம்) பறையை அல்லது சாதனத்தை வேண்டிப் பெற்றுக் கொண்டு,
மாவாய் பிளந்தானை - 'கேசி' என்ற குதிரை வடிவமான அசுரனுடைய வாயைப் பிளந்து எறிந்தவனும்;
மல்லரை மாட்டிய - மல்லர்களை மாளச் செய்தவனுமான
தேவாதி தேவனை - தேவ தேவனை

சென்று நாம் சேவித்தால் - நாம் அணுகி அடிபணிந்தால் (அவன் நம் விருப்பத்தை இனிது நிறைவேற்றுவான் ஆகையால்)
ஆஆ என்று - 'ஐயோ!' என்று விரைவாக
ஆராய்ந்தருள் - ஆராய்ந்து புறப்படுவாயாக.

பொழிப்புரை

கிழக்குத் திசையில் வானம் வெளுத்தது. பனிப்புல் மேயும்படி எருமைகளைச் சிறிது நேரம் அவிழ்த்துவிட, அவை நாலு பக்கமும் பரவி மேய்ந்துகொண்டிருக்கின்றன. நோன்பிற்கு முன்னமே நீராடப் புறப்பட்ட பெண்களின் கூட்டத்தைப் போகாதபடி தடுத்து நிறுத்தி, உன்னையும் அழைத்துக்கொண்டுதான் போகவேண்டுமென்று உன் வீட்டு வாசலில் நாங்கள் வந்து காத்துநிற்கிறோம். கண்ணனால் கொண்டாடப் பெறும் பெண்ணே! படுக்கை விட்டு எழுந்திருந்து எங்களுடன் வா. குதிரை வடிவத்துடன் வந்த கேசி என்ற அசுரனையும், துஷ்ட மல்லர்களையும் அழித்த தேவாதி தேவனாகிய கண்ணனை நாம் அணுகிப் பாடிப் பறைகொண்டு சேவித்தால், அவன் நமது விருப்பத்தை இனிது நிறைவேற்றியருள்வான். ஆகையால் விரைந்து, நாங்கள் சொல்வதை ஆராய்ந்து புறப்படுவாயாக.

விளக்கம்

கண்ணபிரானின் அருளுக்கு மிகவும் தகுதி வாய்ந்த ஒருத்தியை நோக்கிப் பொழுது விடிந்த அடையாளங்கள் சொல்லி, எழுந்தபின்பு செய்ய வேண்டியவற்றையும் அவற்றால் ஏற்படும் நன்மைகளையும் சொல்லி, அவளைத் துயிலெழுப்பும் பாசுரம் இது.

சிறுவீடு மேய்கை என்றால், ஊர்மாடுகளுடன் போய் வெளியிடங்களில் மேய்வதற்கு முன்னே, எருமைகளின்

சொந்தக்காரர்கள் அவை மிகுதியாகப் பால் கறக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் சிறு தோட்டங்களில் அவற்றைப் பனிப்புல் மேய விடுவது. கிழக்கு வெளுக்கையில் கறப்பதற்குமுன், இப்படி ஒருதரம் நல்ல பசும்புல் நிறைந்த தோட்டங்களில் சிறிது நேரம் மேய விடுவது 'சிறு வீடு' என்று சொல்லப்படுகிறது. மாடு கறந்த பின்பு பகலெல்லாம் மேயும்படி வெளியே விடுவது என்பதாக ஒன்று இருப்பதை உத்தேசித்துத்தான், 'சிறு வீடு' என்று பனிப்புல் மேய்கைக்குப் பெயர்வந்தது.

'கோதுகலம்' 'கௌதூஹலம்' என்ற வடசொல்லின் விகாரம். கௌதூஹலம் - ஆசை. மல்லரை மாட்டிய்து : கம்ஸன் கண்ணன்மீது ஏவிய துஷ்டப் பெருமல்லர்களையும், துரியோதனன் கண்ணனுக்குப் படுகுழி தோண்டி மறைத்து வைத்திருந்த துஷ்ட மல்லர்களையும் அழித்த பாகவத கதையும் பாரத கதையும். மல்லர்கள் ஆயுத உதவியின்றிச் சரீர வலிமை கொண்டு போர்செய்வார்கள். இவர்கள் செய்யும் போர் மற்போர்.

உள்ளுறை பொருள்

பாகவதரிடம் பேரன்புடைமையால் பகவானுடைய அபிமானத்திற்கு மிகவும் தகுதி வாய்ந்தவராக இருக்கும் பக்தர் ஒருவரைக் 'கோதுகலமுடைய பாவாய்!' என்ற சொற்றொடர் நினைப்பூட்டுகிறது. இத்தகைய பாகவதரை முன்னிட்டுக்கொண்டு பகவானை அணுகுவது எளிது. அதற்கு ஏற்ற காலம் வந்தது என்று எழுப்புகிறார்கள்.

'கிழக்கு வெளுத்தது' இருளாகிய தமோகுணம் விலகி, ஸத்வகுணம் பிரகாசிப்பதற்கு அறிகுறி.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்.
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

பதவுரை

தூமணி மாடத்து - பரிசுத்தமான இரத்தினங்கள் இழைத்துச் செய்த மாளிகையிலே
சுற்றும் - சுற்றிலும், நாலுபுறமும்
விளக்கு எரிய - விளக்குகள் எரியவும்,
தூபம் கமழ - (அகில் முதலியவற்றின்) வாசனைப் புகைகள் மணம் வீசவும்,
துயில் அணைமேல் - உறங்குவதற்கு உரிய மென்மையான படுக்கையின்மேல்
கண் வளரும் - உறங்குகின்ற
மாமான் மகளே! - மாமன் பெண்ணே!
மணிக் கதவம் - மணிகளால் ஆகிய கதவின்
தாள் திறவாய் - தாழ்ப்பாளைத் திறப்பாய்.
மாமீர்! - மாமிமார்களே!
அவளை எழுப்பீரோ? - (உள்ளே உறங்குகிற உமது) அந்தப் பெண்ணை எழுப்பமாட்டீரோ ?
உம்மகள் தான் - உமது பெண்தான்
ஊமையோ ? அன்றிச் செவிடோ ? - ஊமையா? அல்லாமல், செவிடா ?
அனந்தலோ - சோர்வோ ?
ஏமம் - காவல் (எழுந்திராதபடி காவலைச் செய்யும்)

பெருந்துயில் மந்திரப்பட்டாளோ - பெருந் தூக்கத்தில் அகப்பட்டுக் கொண்டாளா? அல்லாமல் ஏதோ மந்திரவாதத்திஞல் கட்டுப்பட்டுக் கிடக்கிருளா ?

மாமாயன் - மிகவும் ஆச்சரியமான குணமும் செயல்களும் உடையவன்,

மாதவன் - திருமகள் நாயகன்,

வைகுந்தன் - வைகுண்ட நாதன்

என்று என்று - என்று பலதடவையும் சொல்லி

நாமம் பலவும் - (பகவானுடைய பல திருநாமங்களையும்)

நவின்று - சொல்வதால் (இனியாவது உம்மகள் துயிலுணரலாகாதா ?)

பொழிப்புரை

தூய மணிகள் இழைத்துச் செய்த மாளிகையில் நாலு பக்கமும் மங்கள விளக்குகள் பிரகாசிக்க, அகில் முதலியவற்றின் நறும்புகை மணம்வீச, எப்போது படுத்தாலும் நித்திரை விளைக்கும் மென்மையான பஞ்சுப் படுக்கையில் உறங்குகின்ற அம்மான் பெண்ணே ! மணிக்கதவின் தாள் திறவாய். அம்மாமி ! அவளை எழுப்பமாட்டீரா ? உம் மகள்தான் ஊமையா, செவிடா ? சோர்ந்து அல்லது சோம்பி உறங்கிக்கொண் டிருக்கிருளா? படுக்கையிலேயே காவலிடப்பட்டாளா ? மந்திரத்திலே கட்டுப்பட்டு வசிய மந்திர நித்திரைக்கு உட்பட்டிருக்கிருளா ? 'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்றெல்லாம் பல தடவை அவனுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லுகிறோமே, இனியாவது உம் மகள் எழுந்திருக்கலாகாதா ? எழுப்ப மாட்டீரா ?

விளக்கம்

சுற்றும் விளக்குகள் விளங்கத் தூபங்கள் கமழ, நன்மணி மாடத்தில் மெல்லணைமேல் கண்துயிலும் அம்மான் மகளை நோக்கி, 'மணிக்கதவம் தாள் திற வாய்' என்று வெளியே நிற்கிறவர்கள் சொல்லுகிறார்கள். அந்த அம்மான் மகளோ கேட்டும் மறுமொழி கூறாமல் படுக்கையிலே கிடக்கிறாள். அப்போது அவள் தாய், சாளரத்தின் வழியாக வெளியே பார்த்துவிட்டு, 'அத்தனை பெண்கள் வாசலில் நின்றுகொண்டு உன்னை எழுப்ப, நீ இப்படி உறங்கலாமோ?' என்று கேட்கிறாளாம். அதற்கும் மகள் எழுந்திருக்கவில்லை. இதை வெளியே நிற்கும் ஆய்ச்சிகள் கண்டு, 'மாமீ! உம் மகளை எப்படி யாவது எழுப்பமாட்டீரோ? அவள் ஊமையா, செவிடா?......' என்றெல்லாம் அன்பும் பரிகாசமும் கலக்கப் பேசுகிறார்கள்.

'மாமீர்!' ஒருவரை மரியாதையாகக் கூறும் பன்மை. 'மாமா' 'மாமன்' என்பதன் விகாரம். 'நாங்கள் இரவென்று பாராமல் எழுந்து நோன்பு குறித்து வீடு வீடாக வந்து கொண்டிருக்க, நீயோ உள்ளே சுகமாய் உறங்கிக் கொண்டிருக்கிறாய் - உன் பாக்கியமே பாக்கியம்!' என்று குத்தலாய்ப் பேசுவதும், பிறகு நகைச் சுவையுடன் பேசுவதும் எவ்வளவு ரஸமாய் இருக்கின்றன!

உள்ளுறை பொருள்

சுற்றும் எரியும் விளக்கு ஞான விளக்கின் அறிகுறி. தூபம் - ஞான தூபம். அது கமழ்வது அனுஷ்டானத்திலே.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால். பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

பதவுரை

நோன்பு - நோன்பு நோற்று,
சுவர்க்கம் - (இங்கே) சுக அனுபவம்
புகுகின்ற - (இங்கே) அனுபவிக்கிற
அம்மனாய் - அம்மே! தலைவியே!
மாற்றமும் - (ஒரு) மறுமொழியும்
தாராரோ - தரமாட்டாரோ,
வாசல் - (இங்கே) வாசற் கதவை
திறவாதார் - திறவாதவர்கள்?
நாற்றத் துழாய் - நறுமணமுள்ள துளசியை
முடி நாராயணன் - முடியில் அணிந்த நாராயணன்,
நம்மால் போற்ற - நாமாகத் தோத்திரம் செய்ய
பறை தரும் - நோன்புக்கு வேண்டிய பறையைத் தரக்கூடிய
புண்ணியன் - புண்ணிய மூர்த்தியாவான்.
பண்டு ஒரு நாள் - முன்னொரு காலத்திலே
கூற்றத்தின் வாய் வீழ்ந்த - யமன் வாயிலே விழுந்த; இறந்துபோன
கும்ப கரணனும் - கும்ப கருணனும்
தோற்றும் உனக்கே - உனக்குத் தோற்றுப்போய்,
பெருந்துயில்தான் - (தன்) பேருறக்கத்தை
தந்தானோ - (உனக்கேதான்) தந்துவிட்டானோ?

ஆற்ற - மிகவும்
அனந்தல் உடையாய் - சோம்பலை உடையவளே;
உறக்கத்தை உடையவளே!
அருங்கலமே - (கிடைத்தற்கு) அரிய ஆபரணம் போன்றவளே!
தேற்றமாய் வந்து - தெளிவுடன் வந்து
திற - கதவைத் திறப்பாயாக.

பொழிப்புரை

முற்பிறப்பில் நோன்பு நோற்றுச் சொர்க்க போகத்தை இவ்வுலகிலே இடைவிடாது அனுபவிக்கும் தலைவியே! வாசற் கதவைத் திறவாதிருப்பவர் ஒரு மறு மொழியாவது சொல்லமாட்டாரா? முன்னொரு காலத்திலே யமன்வாயில் இரையாக விழுந்தொழிந்த கும்பகருணனும் உனக்குத் தோற்றுப்போய்த் தன் பேருறக்கத்தையும் உனக்கேதான் கொடுத்துவிட்டானோ? நறுமணம் கமழும் திருத்துழாய் மாலையை அணிந்து, எங்கும் வியாபித்து, எல்லாருக்கும் இரட்சகனாகவுள்ள கண்ணன் நாம் போற்ற நமது விருப்பத்தை நிறைவேற்றியருளும் புண்ணிய மூர்த்தியாக இருக்கிறான். ஆதலால், மிக்க சோம்பலை உடைய்வளே! பெண்களாகிய எங்களுக்கு அருமையான ஆபரணம் போன்றவளே! உறக்க மயக்கத்தை உதறிவிட்டுத் தெளிந்து வந்து கதவைத் திறப்பாயாக.

விளக்கம்

'கண்ணன் காதல்' என்ற சொர்க்கத்தில் இருக்கும் ஒருத்தியை எழுப்புகிறார்கள். 'எங்கள் செவி குளிர நீ மறுமொழி சொல்லாவிட்டாலும், உன்னைக் கண்குளிர நாங்கள் பார்க்கும்படியாவது கதவைத் திறக்கலாகாதா?' என்று கொஞ்சுகிறார்கள். 'நாராயணன்' என்ற சொல்

லுக்கு எங்கும் வியாபித்திருக்கும் கடவுள் என்பது பொருள்.

'மாற்றமும் தாராரோ?' என்று சொல்லியும், 'நாராயணன் நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன்' என்று சொல்லியும், அவள் கதவு திறவாததால், வெளியே இருக்கும் பெண்கள், 'அம்மா! கும்பகருணனும் உனக்குத் தோற்றுத் தன் பேருறக்கத்தை உனக்கே கொடுத்து விட்டானோ?' என்று பரிகசிக்கிறார்கள். கும்பகரணன் மரணம் என்ற முடிவில்லா உறக்கத்தால், தனக்குப் பிரியமான 'கும்பகர்ண நித்திரை' என்று சொல்லத்தக்க தன்உறக்கத்தையும்விட நேர்ந்ததாம். அவன் விட்ட அந்த உறக்கத்தை இவள் அப்படியே பற்றிக் கொண்டாளாம். தோற்றவர் பொருளை வென்றவர் பற்றிக்கொள்வது போல் அந்த உறக்கத்தைப் பற்றிக்கொண்டாளாம்.

இவள் வெளிப்பட்டு வந்து தங்கள் கூட்டத்திலே கலந்துகொண்டால், நவரத்தின மாலையில் நாயக ரத்தினம் சோபிப்பதுபோல் அந்தக் கூட்டத்திற்கே ஒரு சோபை வந்துவிடுமாம். இது 'அருங்கலமே!' என்பதில் உள்ள குறிப்பு.

உறக்க மயக்கத்துடன் எழுந்து தடுமாறிக்கொண்டே வராமல், தெளிந்து வந்து கதவு திறக்கவேண்டும் என்ற வேண்டுகோளிலும் ஹாஸ்யம் தொனிக்கிறது.

கவி நயம்

இப்பாட்டிலுள்ள நகைச்சுவை கவனிக்கத்தக்கது.

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?

என்ற அடிகளிலுள்ள ஹாஸ்யம், தமிழ்நாட்டிலே நகரங்களிலும் கிராமங்களிலும் ஒருங்கே பிரசித்தமானது.

உள்ளுறை பொருள்

தவஞ்செய்து 'கண்ணன் காதல்' என்றசொர்க்கத்தை அனுபவிக்கும் பெண்மணி, பகவானையே உபாயமாகப் பற்றியிருக்கும் பாகவதருக்கு அறிகுறி. அத்தகைய பாகவதருக்குப் 'பெருந்துயில்' என்பது பிற விஷயங்கள் ஒன்றையும் கவனியாமல் தம்முடைய அனுபவத்திலேயே மூழ்கிக் கிடப்பது.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்.
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து,நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்,
சிற்றாதே, பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய் (11)

பதவுரை

கற்றுக் கறவை - கன்றுகளோடு கூடிய கறவைப் பசுக்களின்
கணங்கள் பல கறந்து - பல கூட்டங்களைக் கறந்து.
செற்றார் - பகைவர்களுடைய
திறல் அழிய - வலிமை அழியும்படி
சென்று - (தாமே படையெடுத்துச்) சென்று
செருச் செய்யும் - போர் செய்யும்
குற்றம் ஒன்றில்லாத-ஒருவகைக் குற்றமும் இல்லாத
கோவலர் தம் - கோபாலர்கள் அல்லது ஆயர்களுடைய
பொன்கொடியே - பொன்கொடி போன்றவளே!
புற்றரவு அல்குல் - புற்றிலுள்ள படம் போன்ற அல்குலையுடைய

புன மயிலே - காட்டில் வாழும் மயில் போன்ற சாயலையுடையவளே!

போதராய் - எழுந்து வருவாய்.

சுற்றத்து - பந்துவர்க்கத்தைச் சார்ந்த

தோழிமார் எல்லாரும் - தோழிகள் யாவரும்

வந்து நின் முற்றம் புகுந்து - வந்து உன்னுடைய முன்வாசலை அடைந்து,

முகில் வண்ணன் பேர்பாட - கார்மேக வண்ணனை கண்ணன் திருநாமங்களைப் பாடவும்,

சிற்றாதே - உடம்பு அசையாமலே,

பேசாதே - ஒன்றும் பேசாமலே,

செல்வப் பெண்டாட்டி - செல்வத்தையுடைய பெண்மையை ஆள்கின்றவளே !

நீ எற்றுக்கு - நீ எதற்காக

உறங்கும் பொருள் - உறங்குகின்ற செயல் ?

பொழிப்புரை

கன்றுகளோடு கூடின பல பசுக்கூட்டங்களைக் கறப்பவர்களாய், பகைவர் வலிமை அழியச் சென்று போர் செய்பவர்களாய், ஒருவகைக் குற்றமும் இல்லாதவர்களாய் உள்ள கோபாலர் குடியில் பிறந்த பொற்கொடியே ! காட்டில் இஷ்டப்படி திரியும் மயில்போன்ற சாயல் உடையவளே ! செல்வப் பெண்ணே ! எழுந்து வா. உறவு முறையுள்ள உன் தோழிகளான நாங்கள் எல்லாரும் திரண்டு வந்து உன் முற்றம் புகுந்து கார்மேக வண்ணனின் திருநாமங்களைப் பாடவும், நீ மட்டும் உடம்பு அசையாமல், ஒன்றும் பேசாமல் உறங்குவது என்ன பயன் பெறுவதற்காகவோ ? அறியோம்.

விளக்கம்

எல்லா வகையிலும் மேன்மைபெற்று விளங்கும் செல்வி ஒருத்தியைத் துயில் உணர்த்தும் பாசுரம் இது. இவளைப் 'பொற்கொடி' என்றும், 'புனமயில்' என்றும், 'செல்வப் பெண்டாட்டி' என்றும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. கண்ணன் அழகனாகவும் செல்வனாக வும் கோவலர்களின் திலகமாகவும் விளங்குவது போல், இவள் செல்வியாகவும் அழகியாகவும் கோவலர் பொற் கொடியாகவும் விளங்குகிருளாம்.

கோவலர், பசுக்களோடு பொழுது போக்குகிறவர்கள்; குற்றம் செய்யத் தெரியாத சாதுக்கள்; எனினும் வீரர் கள். கண்ணனுடைய மேன்மையைப் பொருதவர்களைப் பகைவர்களாய்க் கருதி அவர்கள்மீது படையெடுப்பர் என்பது குறிப்பு.

'புனமயிலே!' என்று அழைத்து, முகில்வண்ணன் பேர் பாடவும் இவள் உறங்குவதாய்க் கூறுவது ரஸமாய் இருக்கிறது: மேகம் என்ருல் களித்து மயில் கூத்தாட வேண்டும் அல்லவா?

உள்ளுறை பொருள்

'கோவலர்தம் பொற்கொடி' பாகவதர்களில் மேன்மைபெற்ற உத்தமருக்கு அறிகுறி. கன்றுக ளோடு கூடின கறவைப் பசுக்களைக் கறப்பது குடும்பத் தோடு வந்த சிடர்களுக்கு ஞானோபதேசம் செய்வ தைக் குறிக்கும்.

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேருக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்

சினத்தினுல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய் !
இனித்தான் எழுந்திராய். ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். (12)

பதவுரை

கனைத்து - கனைத்துக்கொண்டு
இளங் கற்றெருமை - இளங்கன்றுகளை யுடைய எருமைகள்
கன்றுக்கு இரங்கி - கன்றுகளிடம் மனமிரங்கி
நினைத்து - (கன்றை) நினைப்பதால்,
முலை வழியே - முலைக்காம்பு வழியாய்
நின்று பால்சோர - நிலையாகப் பால் சொரிய (அதனுல்)
நனைத்து இல்லம் - வீட்டை நனைத்து,
சேருக்கும் - சேருகச் செய்யும்
நற்செல்வன் - நல்ல செல்வத்தை உடையவனது
தங்காய் - தங்கையே !
பனித் தலைவீழ - பனியானது எங்கள் தலைமேல் வீழ
நின் வாசற்கடை பற்றி - உன் தலைவாசலைப் பற்றிக் கொண்டு,
சினத்தினுல் - (இங்கே) தரும ஆவேசத்தினுல்
தென் இலங்கைக் கோமானை - தென் திசையிலுள்ள இலங்கையரசனுகிய இராவணனை
செற்ற - கொன்றெழித்த
மனத்துக்கு இனியானை - (நினைக்கிற) மனத்துக்கு இனியவனுன இராமனை
பாடவும் - நாங்கள் பாடும்போதும்,
நீ வாய் திறவாய் - நீ வாய்திறந்து பெசாமல் இருக்கிருய்!
இனித்தான் - இனியாவது
எழுந்திராய் - எழுந்திரு.

ஈதென்ன பேருறக்கம் - இது என்ன, ஓயாத உறக்கம்,
அனைத்து இல்லத்தாரும் - எல்லா வீட்டில், இருப்பவர்களும்
அறிந்து - துயில் உணர்ந்த பின்பும்!

பொழிப்புரை

இளங் கன்றுகளையுடைய எருமைகள், கறப்பார் இல்லாமையால் முலைகடுத்துக் கதறிக்கொண்டு தங்கள் கன்றுகளை நினைத்து மனம் இரங்கிப் பால் இடைவிடாது சொரிய, அப்பெருக்கினால் இல்லத்தை நனைத்துத் துகைத்துச் சேருக்கும் நற்செல்வனுடைய தங்கையே! நாங்கள் எங்கள் தலையில் பனிவிழ உன்வீட்டுத் தலைவாசலைப் பற்றிக்கொண்டு, தருமாவேசம் என்ற சீற்றத்தினால் லங்கேசனான இராவணனை வதைத்தவனும் மனத்துக்கு இனியனுமாகிய இராமபிரானை நாங்கள் பாடும்போதும், நீ வாய்திறந்து பேசாமல் இருக்கிறாய்! ஊரார் எல்லாரும் துயிலுணர்ந்த பின்பும் இது என்ன பெருந் தூக்கம்! இனியாவது எழுந்திருப்பாய்.

விளக்கம்

நற்செல்வன் ஒருவன் தங்கையைத் துயில் உணர்த்தும் பாசுரம் இது. எருமைகளைச் செல்வமாக வுடைய இவன் கண்ணனை விட்டுப் பிரியாமல் இருக்கும் கைங்கரியச் செல்வத்தையும் பெற்றவன் என்பது ஊகம். இராமனோடு திரிந்த இலட்சுமணனைப் போல் கண்ணனோடு இவன் திரிந்து கொண்டே இருப்பதால் கறவைகளைக் காலம் தவறாது கறப்பதில்லை யென்பது குறிப்பு.

கவிநயம்

'கோதனம்' என்று பசுச் செல்வத்தைக் குறிப்பதுண்டு. இங்கே எருமைச் செல்வத்தைக் குறிக்கின்றன முதல் மூன்று அடிகளும். இவையும், 'பனித்தலை வீழ நின் வாசற்கடை பற்றி' அப் பெண்மணிகள் உள்ளேயிருக்கும் பெண் எழுந்து வருவதை எதிர் நோக்கிப் பாடிக் கொண்டிருப்பதாக வரும் அடிகளும், அழகான இயற்கைக் கவிதை.

உள்ளுறை பொருள்

பால் கறப்பார் இல்லாமல் குமுறிக் கதறும் எருமைகள் பொதுவாக வள்ளல்களையும், சிறப்பாக ஞான வள்ளல்களான பக்தர்களையும் நினைப்பூட்டலாம். கன்றை நினைத்துப் பால் சொரிவது, ஒருவரும் கேட்க வராவிட்டாலும் கற்றுணர்ந்த ரஸிகர் பகவத் விஷயமான பொருள்களை எடுத்துரைப்பதற்கு அறிகுறி. பாகவத அபிமானத்தில் சிரத்தை உடையவராய், பகவத் அனுபவம் பெற்ற ஒரு பாகவதரைக் கூவி அழைத்துப் பயன்பெற முயல்வது இப்பாட்டின் திரண்ட உள்ளுறை பொருள்.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்.
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று.
புள்ளும் சிலம்பினகாண். போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

பதவுரை

புள்ளின் வாய் - பறவையுருவம் பூண்டு வந்த அசுரனுடைய வாயை
கீண்டானை - பிளந்தானை,
பொல்லா அரக்கனை - பொல்லாத இராவணனை
கிள்ளிக் களைந்தானை - மிகவும் எளிதாக வேரோடு வம்ச நாசம் செய்தவனை,
கீர்த்திமை - கீர்த்தி கூறும் வீர சரிதங்களை
பாடிப்போய் - பாடிக்கொண்டு போய்,
பிள்ளைகள் எல்லாரும் - எல்லாப் பெண்பிள்ளைகளும்,
பாவைக் களம் புக்கார் - நோன்பு நோற்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.
வெள்ளி எழுந்து - சுக்கிரன் உதயமாகி,
வியாழம் உறங்கிற்று - பிரகஸ்பதி என்னும் கிரகம் அஸ்தமித்துவிட்டது.
புள்ளும் - பறவைகளும்
சிலம்பின - ஒலித்தன.
போது அரிக் கண்ணினாய் - பூவையும் மானையும் ஒத்த கண்களை உடையவளே !
குள்ளக் குளிரக் - உடம்பு மிகக் குளிர்ந்து போக
குடைந்து - துளைந்து விளையாடும்படி
நீராடாதே - நீராடாமல்,
பள்ளிக் கிடத்தியோ - படுக்கையில் கிடப்பாயோ ?
பாவாய் - பதுமை போன்றவளே !
நீ நன்னாளால் - நீ நல்ல நாளில்
கள்ளம் தவிர்ந்து - கபடத்தை விட்டு
கலந்து - (எங்களோடு) கலந்து—

பொழிப்புரை

பறவை யுருக்கொண்டு வந்த பகாசுரனை வாய்பிளந்து அழித்தவனும், பொல்லாத இராவணனை வேரோடு அநாயாசமாய்க் களைந்தவனும் ஆகிய பெருமானது வீர சரிதங்களைப் பாடிக்கொண்டு பெண்கள் எல்லாரும் நோன்பு நோற்கக் குறித்த இடம் போய்ச் சேர்ந்தார்கள்.

சுக்கிரோதயம் ஆகி வியாழனும் அஸ்தமித்தான். அன்றியும் பறவைகள் கூவிக்கொண்டு இரை தேடப் புறப்பட்டு விட்டன. பூவையும் மானையும் ஒத்த கண்ணழகு வாய்ந்தவளே! பதுமை போன்றவளே! கண்ணனை அடையும் பேறு பெறும் இந் நன்னாளிலே அவனுடைய குணங்களை நினைத்துக்கொண்டு தனியே கிடக்கும் உன் கபடத்தை விட்டு எங்களோடு கலந்து உடல் குளிரத் துளைந்து நீந்தி, விளையாடி நீராடாமல் படுக்கையில் கிடப்பாயோ? இது தகுதியன்று, எழுந்திராய்.

விளக்கம்

தன் கண்ணழகை நினைத்துக்கொண்டு, 'நான் இருந்த இடம் நோக்கி அனைவரும் வரவேண்டும், கண்ணனும் வரவேண்டும்' என்று கிடப்பதுபோல், அப்பெருமானுடைய குணாதிசயங்களைத் தியானித்தபடியே படுத்திருக்கும் ஒருத்தியைத் துயிலுணர்த்தும் பாசுரம் இது.

'பாவைக்களம்'- பெண்கள் கூடும் இடம்; பாவை நோன்பு நோற்பதற்காகக் கூடும் இடம்; காத்தியாயனியின் உருவத்தை மணல்கொண்டு செய்துவைக்கும் இடம்.

'சுக்கிரன் எழுந்தான்; குரு என்ற வியாழன் அஸ்தமித்தான்' என்கிறார்கள் எழுப்பவந்த பெண்கள். வெள்ளி எழுதலே பொழுது விடிந்ததற்கு அடையாளம். ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் வெள்ளி எழுந்ததோடு

வியாழன் அஸ்தமிப்பதும் நிகழ்ந்ததென்றும், ஆகவே அதையும் சேர்த்துக் குறுப்பிடுகிறுர் என்றும் கூறுவர்.

'போது அரிக் கண்ணினுய்!' என்பது 'தாமரைப் பூவில் வண்டு படிந்தாற்போன்ற கண்ணையுடையவளே !' என்றும், 'பூவின் அழகைக் கொள்ளை கொண்ட கண்ணழகு வாய்ந்தவளே !' என்றும் பொருள்படும். 'போது' பொதுவாக மலரையும், சிறப்பாகத் தாமரையையும் நீல மலரையும் குறிக்கும்.

'குள்ளக்குளிர' என்பது 'செக்கச் சிவந்து' 'கன்னங்கறுத்து' என்பவை போன்ற சொற்றொடர். மார்கழி மாதத்தில் அதிகாலையில் நீராடினுல் 'குள்ளக் குளிரும்' அனுபவம் கிடைக்கும் — 'உடம்பு மிகவும் வவ்வலிடும்படி' என்பர்.

உள்ளுறை பொருள்

'நம்க்குப் பக்குவம் இருந்தால் பகவான் தானே வருகிறுன் !' என்று தனியே பகவானுடைய குண சரிதங்களைத் தியானித்துக்கொண்டிருக்கும் பாகவதருக்கு, 'போதரிக் கண்ணினுய் ! பாவாய் !' என்று குறிக்கப்பெறும் பெண் ஓர் அறிகுறி. கண்ணழகு ஞான ஒளிக்கும், பதுமை போன்ற அழகு ஞான சௌந்தரியத்திற்கும் அறிகுறி.

அத்தகைய பாகவதரை நோக்கி, 'நீர் அப்படித் தனியே இறைவனைக் கவர்ந்து கொள்ளலாமா ? எங்களுடன் நெஞ்சு குளிரக் கலந்து பகவத் அனுபவம் அடைய வரவேண்டாமா ?' என்று உணர்த்துவது இப்பாசுரத்தின் திரண்ட உள்ளுறை பொருள்.

'பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்த'து, அகப்பற்று, புறப்பற்று முதலிய விரோதிகளை ஒழித்தருளிய குறிப்பு.

பாவைக்களம் - ‘பகவத் விஷயமான சொற்பொழிவுகள் கேட்கப் பாகவதர்கள் கூடும் இடத்தைக் குறிக்கும். ‘வியாழம் உறங்கியது’ தாமஸ புத்தி தலைசாய்ந்ததையும், ‘வெள்ளி எழுந்தது’ ஸாத்விகம் தலையெடுப்பதையும் குறிக்கும்.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து, ஆம்பல்வாய் கூம்பின
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர், [காண்.
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்.
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் ! எழுந்திராய், நாணாதாய் ! நாவுடையாய் !
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

பதவுரை

உங்கள் புழைக்கடை - உங்கள் வீட்டுப் புழைக்கடை அல்லது புறங்கடையிலுள்ள
தோட்டத்து வாவியுள் - தோட்டத்துத் தடாகத்திலே
செங்கழு நீர் - செங்கழுநீர்ப் பூக்கள்
வாய் நெகிழ்ந்து - மலர்ந்து,
ஆம்பல் - ஆம்பல் மலர்கள்
வாய் கூம்பின - வாய் குவிந்தன.
செங்கல் பொடிக் கூறை - காவிப் பொடியில் தோய்த்த காஷாய வஸ்திரத்தையும்
வெண்பல் - வெண்ணிறமான பற்களையும் உடைய
தவத்தவர் - துறவிகள்
தங்கள் திருக்கோயில் - தங்களுடைய கோயில்களில்
சங்கு இடுவான் - சங்கு ஊதும்பொருட்டு
போதந்தார் - போகிறார்கள்.

எங்களை முன்னம் எழுப்புவான் - முன்னே வந்து எங்களை எழுப்பும்பொருட்டு

வாய் பேசும் நங்காய்! - டம்பமாகப் பேசிப்போன நங்கையே!

எழுந்திராய் - எழுந்திரு.

நாணாதாய் - நாணம் அற்றவளே!

நாவுடையாய் - (இனிய பேச்சுப் பேசும்) நாவைப் படைத்தவளே!

சங்கொடு சக்கரம் ஏந்தும் - சங்கு சக்கரங்களை ஏந்திக்கொண்டிருக்கும்

தடக்கையன் - பெரிய கைகளை உடையவனும்

பங்கயக் கண்ணனை - தாமரைபோன்ற கண்களை யுடையவனுமான கண்ணபிரான்

பாட - பாடுகைக்கு—

பொழிப்புரை

உங்கள் வீட்டுப் புழைக்கடைத் தோட்டத்திலுள்ள வாவியில் செங்கழுநீர் மலர ஆம்பல்கள் குவிந்திருக்கின்றன. அன்றியும், காவிப் பொடியில் தோய்த்த காஷாய ஆடை தரித்தவர்களும், தாம்பூலம் தரியாததால் வெளுத்த பற்களை யுடையவர்களுமான துறவிகள், தங்கள் கோயில்களில் ஆராதனம் செய்யப் போகிறார்கள். எங்களை முந்தி வந்து எழுப்புவதாக டம்பமாய்ச் சொல்லிவிட்டு இப்போது வாய் பேசாது படுக்கையில் கிடக்கும் நங்கையே! 'சொன்னபடி செய்யத் தவறிவிட்டோமே!' என்ற நாணமும் இல்லாதவளே!' இனிமையாகப் பேசும் நாவைப் படைத்தவளே! சங்கு சக்கரங்களை ஏந்திய தாமரைக் கண்ணனைப் பாட எழுந்திரு.

விளக்கம்

'நான் எல்லாருக்கும் முன்னே எழுந்து வந்து உங்களை யெல்லாம் துயிலுணர்த்துவேன்' என்று ஆய்ச்சியர் கூட்டத்திற்கெல்லாம் தலைவியாகப் பேசிவிட்டு, உறக்கத்திலே மறந்து கிடக்கும் பெண்ணைத் துயிலுணர்த்தும் பாசுரம் இது.

'பொழுது விடிந்ததற்கு அடையாளமென்ன?' என்று அவள் கேட்க அவர்கள், 'நீ வெகுதூரம் போக வேண்டியதில்லை; உங்கள் வீட்டுப் புழைக்கடையில் செங்கழுநீர் மலர, ஆம்பல் குவிந்திருக்கிறதே' என்கிறார்களாம்.

'காஷாயம் தரித்த பண்டாரங்கள் தங்கள் கோயிலில் பூஜைக்குச் சங்கு ஊதப் போவதைக் குறிப்பிடுவதாகவும் கருதலாம். அப்படியானால் வேறு சமயிகளின் கோயில்களைத் 'தங்கள் திருக் கோயில்' என்று ஆண்டாள் கௌரவிப்பதாய்க் கருதலாம். இத் துறவிகளை வைணவத் துறவிகளாகவும் கருதலாம். அப்படியானால் 'சங்கிடுவது' 'கதவைத் திறக்கும்' பொருளில் வந்ததென்று கருதவேண்டும். கோவில்களில் கதவைத் திறக்கும் போது மங்கள வாத்தியம் முழங்குவதுண்டு. சங்கு இடுதல் - மங்களச் சங்கு ஊதுதல்; பின்பு நிகழும் பூஜை அல்லது ஆராதனத்திற்கும் உபலட்சணம். 'சங்கு' என்பதற்கே 'திறவுகோல்' என்று பொருள் கூறுவதும் உண்டு.

உள்ளுறை பொருள்

பாகவத சமுதாயத்திற்கெல்லாம் முக்கிய மானவராய்ப் பலருக்கும் பகவத் சம்பந்தத்தை உண்டாக்க வல்ல ஞானபக்தி வைராக்கியங்களை உடைய பெரியோரை எழுப்புவது இப்பாட்டின் உள்ளுறை பொருள்.

‘எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?’
‘சில்லென்றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்.’
‘வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!’
‘வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!’
‘ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை? [கொள்!
‘எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந் தெண்ணிக்
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை’ மாயனைப் பாடே,லோ ரெம்பாவாய். (15)

பதவுரை

‘எல்லே - என்னே!
இளங்கிளியே - இளமையான கிளிபோன்றவளே!
இன்னம் உறங்குதியோ - இன்னமும் உறங்குகின்றாயோ?’ (என்று எழுப்ப வந்தவர்கள் கேட்க,)
‘சில்லென்று - சிலுசிலென்று,
அழையேன்மின் - கூப்பிடாதேயுங்கள்,
நங்கைமீர் - பெண்களில் சிறந்தவர்களே!
போதர்கின்றேன் - (இதோ) வருகிறேன்’ (என்று எழுப்பப் பெற்றவள் சொல்ல,)
‘வல்லை - (எழுப்புகிறவர்கள் மறுபடியும்) நீ வல்லமை உடையவள்,
உன் கட்டுரைகள் - நீ கட்டிச் சொல்லும் வார்த்தைகளினால் (தெரிகிறது),
பண்டே - முன்னமே
உன் வாய் அறிதும் - உன் வாயை அறிவோம்’ (என்று சொல்ல,)
‘வல்லீர்கள் நீங்களே - (எழுப்பப் பெற்றவள்) நீங்களே சாமர்த்தியசாலிகள்,
நானே தான் ஆயிடுக - நானே சாமர்த்தியசாலியாக இருந்தாலும் இருக்கட்டும்’ (என்று சொல்ல,)

'ஒல்லை - (மீண்டும் எழுப்புகிறவர்கள்) விரைவில்
நீ போதாய் - நீ எழுந்து வா;
உனக்கு என்ன வேறு உடையை - உனக்கு மட்டும் தனியே வேறு என்ன அதிசயத்தை உடையவளாய் இருக்கிருய்?' (என்று துயிலுணர்த்த வந்தவர்கள் சொல்ல,)
'எல்லாரும் போந்தாரோ? - (உள்ளேயிருப்பவள்) எல்லாரும் வந்துவிட்டார்களோ?' (என்று வினவ,)
'போந்தார் - (வெளியே யிருப்பவர்கள்) வந்து விட்டார்கள்,
போந்து எண்ணிக்கொள் - நீ எழுந்து வந்து எண்ணிப் பார்த்துக்கொள்.
வல்ஆனை கொன்ருனை - வலிய குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றவனை,
மாற்ருரை - சத்துருக்களை
மாறு அழிக்க வல்லானை - எதிராக நின்று அழிக்க வல்லவனை,
மாயனை - மாயனுகிய கண்ணனை
பாட - பாடுவதற்காக (விரைவாக நீ எழுந்து வா' என்று அழைக்கிருர்கள்)

பொழிப்புரை

'இளமை தங்கிய கிளிமொழியாளே! நாங்கள் திரண்டுவந்து நிற்கிருேமே, நீ இன்னம் உறங்குகிருயே?' என்று எழுப்ப வந்தவர்கள் கேட்கிருர்கள். அதற்கு உள்ளேயிருப்பவள், 'நங்கைமார்களே! சிலுசிலுவென்று கூப்பிடாதேயுங்கள், இதோ வருகிறேன்' என்று விடை கூறுகிருள். அவர்கள், 'நீ சொற்களைக் கட்டிச் சொல்வதில் வல்லமையுடையவள்; அந்தக் கட்டுரைவன்மையோடு

கூடிய வாயை நாங்கள் முன்னமே அறிவோம்' என்கிறார்கள். அவளோ, 'நீங்களே அத்தகைய வல்லமை வாய்ந்தவர்கள்!' நானே தான் அப்படியிருந்தாலும் இருக்கட்டும். உங்களுக்கு நான் செய்ய வேண்டிய தென்ன?' என்று கேட்கிறாள். அவர்கள், 'நீ சடக்கென்று வந்து எங்களோடு கலந்துகொள்ள வேண்டும். உனக்கு மட்டும் வேறு என்ன பயனை அதிசயமாக அடையப் போகிறாய்?' என்று வினவுகிறார்கள், அதற்கு விடையாக உள்ளேயிருக்கும் பெண், 'பெண்கள் அனைவரும் வந்துவிட்டார்களோ?' என்று வினவுகிறாள். 'வந்துவிட்டார்கள்; நீயே வந்து எண்ணிப் பார்த்துக்கொள்' என்று விடை தருகிறார்கள். அப்பால் அவர்கள் அவளை எதற்காக அழைக்கிறோம் என்பதைக் கூறத் தொடங்கி, 'குவலயா பீடம் என்னும் துஷ்ட யானையைக் கொன்றவனும், "நம்மை வெல்லவல்லார் இல்லை!" என்ற செருக்குடன் இருந்த கம்ஸன் போன்ற சத்துருக்களின் அந்த மிடுக்கை அழிக்க வல்லவனும், அற்புதனும் ஆகிய கண்ணனைப் பாடும் பொருட்டு நீ விரைவாக எழுந்து வா என்கிறார்கள்.

விளக்கம்

இப்பாசுரம் முழுமையும் சம்பாஷணை ரூபத்தில் அமைந்திருக்கிறது. சைவசமய ஆசாரியர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம்பாவையிலும் நான்காம் பாட்டு இத்தகைய சம்பாஷணை ரூபத்தில் அமைந்திருக்கிறது.

'எல்லே' — பொழுது விடிந்த பின்பும் உறங்குவது குறித்த அதிசயம். நீராடுதல்போல் பங்கயக் கண்ணனைப் பாடுவதும் நோன்பிற்கு அங்கமாகும். உள்ளுறையில் நீராடுவது என்பதே கிருஷ்ண பக்திதான், கிருஷ்ணானுபவம்தான்.

உள்ளுறை பொருள்

'நானே தான் ஆயிடுக' என்பதில் பிறருக்கு உரிய குற்றமும் தன்னிடத்தே உள்ளதாக உள்ளேயிருந்த பெண்மணி இசைந்து பேசுகிறாள் அல்லவா? இது ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம் என்பர். பாகவதர்களால் ஏதேனும் ஒரு வகையில் குற்றம் சாட்டப் பெற்ற வைஷ்ணவர், அவர்களுடைய அடிகளில் தலை சாய்த்து, 'அக் குற்றம் அடியேனுடையதுதான், பொறுத்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமாம். ஆகவே இப்பாட்டு விசேஷமானது என்பர். வைஷ்ணவர்களோடு பங்கிட்டுக் கொள்ளாமல் தனியே பற்றி நிற்கும் பகவத் விஷயமும் பயனற்றது என்ற ஒரு கருத்தும் இப்பாசுரத்தில் காணப்படுகிறது.

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்.
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்.
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

பதவுரை

நாயகனாய் நின்ற - தலைவராயிருக்கிற
நந்தகோபனுடைய கோயில் - நந்தகோபருடைய அரண்மனையை

காப்பானே - காப்பவனே!
கொடி தோன்றும் - துவஜங்கள் விளங்குகிற
தோரண வாயில் - தோரண வாசலை
காப்பானே - காப்பவனே!
மணிக்கதவம் - அழகிய கதவின்; மணிகள் கட்டிய கதவின்
தாள் திறவாய் - தாளைத் திறப்பாயாக.
ஆயர் சிறுமியரோமுக்கு - இடைச் சிறுமியரான எங்களுக்காக
அறை பறை - சப்திக்கின்ற பறையைக் (கொடுப்பதாக)
மாயன் மணிவண்ணன் - மாயச் செயல்களை உடையவனும், நீல ரத்தினம் போன்ற நிறம் உள்ளவனுமான கண்ணன்
நென்னலே - நேற்றே
வாய் நேர்ந்தான் - வாக்களித்தான்.
தூயோமாய் வந்தோம் - தூய்மையுள்ளவர்களாக வந்துள்ளோம்,
துயிலெழப் பாடுவான் - (எம்பெருமான்) துயில் எழும்படி பாடும்பொருட்டு.
வாயால் - வாயினால்
முன்னமுன்னம் - முதன் முதலில்
மாற்றாதே - தடுக்காதே
அம்மா - (இங்கே) சுவாமீ!
நீ நேசநிலைக்கதவம் - நீ (ஒன்றோடொன்று) நேசமாய்ச் சேர்ந்திருக்கும் தன்மையுள்ள கதவை
நீக்கு - திறப்பாயாக.

பொழிப்புரை

எங்களுக்குத் தலைவராயிருக்கும் ஸ்ரீ நந்தகோபருடைய அரண்மனையைக் காப்பவனே! துகிற் கொடிகள்

விளங்கும் தோரணங்கள் கட்டியிருக்கிற வாசலைக் காப்பவனே! அழகிய கதவின் தாழ்ப்பாளைத் திறந்து எங்களை உள்ளே புகவிட வேண்டும். ஆயர் சிறுமியரான எங்களுக்கு, மாயனும் நீல மணிவண்ணனுமான கண்ணபிரான் நேற்றே ஒலி செய்யும் பறையைக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறான். அப்பெருமான் துயிலினின்றும் எழுந்திருக்கும்படி திருப்பள்ளியெழுச்சி பாட நாங்கள் பரிசுத்தர்களாக வந்திருக்கிறோம். சுவாமீ! முதல்முதலில் உனது வாயினால் தடுக்காமல் ஒன்றோடொன்று இசைத்திருக்கும் நிலைக்கதவைத் திறப்பாயாக.

விளக்கம்

சிறுமியர் எல்லோரும் திரண்ட பின்பு கண்ணனை எழுப்ப விரும்பிய கோபியர், நந்தகோபர் மாளிகைக்குச் சென்று கோயில் காப்பானை எழுப்பிப் பின்பு வாயில் காப்பானையும் எழுப்பி, 'திருவாசல் திறக்க வேண்டும்' என்று வேண்டிக்கொள்கிறார்கள், இப்பாசுரத்திலே.

கீழே பத்துப் பாடல்களினால் பத்துப் பெண்களைத் துயிலுணர்த்தினார்கள். இதுமுதல் ஏழு பாசுரங்களில் சிறுமியர் கண்ணனையும் அங்கு உள்ளவர்களையும் துயிலெழுப்புகிறார்கள்.

வெளிப்புற வாசலைக் காப்பவன் கோயில் காப்பான்; உட்புற வாசலைக் காப்பவன் வாசல் காப்பான். 'நாயகனாய் நின்ற' என்ற அடைமொழி நந்தகோபனுக்குப் பொருந்துவதுபோல் கோயில் காப்பானுக்கும் பொருந்தும். தங்களுக்கு உபகரிப்பவனாதலால் இவ் ஆயர்மாதர் கோயில் காப்பானையும் 'நாயகன்' என்று உபசரிப்பார்கள். கண்ணனுக்கு வழிகாட்டியல்லவா?

கண்ணனே நாயகன் அல்லது தலைவனாக இருந்தும் இப் பெண்கள் நந்தகோபனையும் கோயில் காப்பானையும் 'நாயகனாய் நின்ற' என்ற அடைமொழியினால் சிறப்பிக்

கிருர்கள். இரத்தினம் ஒன்றின் சிறப்பை அறிய அறிய, அதை அளித்தவர்களிடம் பெருநன்றி பெருகுவதுபோல், இவர்களுக்கும் நந்தகோபரிடத்திலும் கோயில் காப்பா னிடத்திலும் நன்றி ஏற்படுகிறது.

கோயில் காப்பானைப் புகழ்ந்து விளித்ததும், அவன் உளம் குளிர்ந்து 'உள்ளே செல்லுங்கள்' என்று கண் ணுல் ஜாடை காட்ட, அவ்வாசலால் சிறுமியர்கள் புகுந்து போய், தோரணவாசல் காப்பவனை அடைகிருர்கள். அடைந்தோரைக் காப்பதற்காக நந்தகோபர் கொடிகட் டித் தோரணமும் நாட்டியுள்ளார் என்பது குறிப்பு. 'கோயில் காப்பானே!' 'வாசல் காப்பானே!' என்று அழைப்பது அறியாச் சிறுவருக்குப் பொருத்தமானது. 'ஆயர் சிறுமியரோம்; தூயோமாய் வந்தோம்' என்ப தில் 'கள்ளங் கவடற்ற சிறுமியர் நாங்கள்; எங்களால் உங்களுக்காவது கண்ணனுக்காவது உபத்திரவம் ஒன்றும் ஏற்படாது' என்ற குறிப்பை உய்த்துணர்ந்து கொள்ள லாம்.

உள்ளுறை பொருள்

பாகவதர்கள் எல்லாரும் திரண்டு ஆசாரியனை அணுகிச் சென்று அந்தத் தொடர்பை உண்டாக்கு வதற்கு வழிகாட்டிகளாய் இருப்பவர்களை உணர்த்து தல் இப்பாட்டின் உள்ளுறை பொருள். 'கோயில் காப்பான்' திருமந்திரத்தைக் காப்பவன்.

பாகவதர்களை முன்னிட்டுக்கொண்டு பகவானை அடையவேண்டும் என்பது குறிப்பு.

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்.
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்.

அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்.
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

பதவுரை

அம்பரமே - ஆடைகளையே
தண்ணீரே - தண்ணீரையே
சோறே - சோற்றையே
அறம் செய்யும் - தருமமாக அளிக்கின்ற
எம்பெருமான் - எமது தலைவனே!
நந்தகோபாலா - நந்தகோபனே!
எழுந்திராய் - எழுந்திருப்பாயாக.
கொம்பு அனார்க்கு எல்லாம் - பூங்கொம்பு போன்ற மாதர்களுக்கெல்லாம்
கொழுந்தே - கொழுந்து போன்றவளே!
குல விளக்கே - இக்குலத்திற்கு மங்கள தீபமாயிருப்பவளே!
எம்பெருமாட்டி - எமது தலைவியே!
யசோதாய் - யசோதையே!
அறிவுறாய் - எழுந்திராய்.
அம்பரம் ஊடு அறுத்து - ஆகாயத்தை இடம் அறச் செய்து
ஓங்கி உலகளந்த - ஓங்கி உலகங்களை அளந்து கொண்ட
உம்பர் கோமானே - தேவர்களுக்குத் தலைவனே!
உறங்காது எழுந்திராய் - உறங்காமல் எழுந்திருப்பாயாக.
செம்பொற் கழல் அடி - செம்பொன்னால் ஆகிய வீரக்கழல் அணிந்த அடிகளையுடைய
செல்வா - ஸ்ரீமானே!

பலதேவா - பலதேவனே !
உம்பியும் நீயும் - உன் தம்பியும் நீயுமாக,
உறங்கேல் - உறங்காமல் எழுந்திரு.

பொழிப்புரை

ஆடைகளையே, குளிர்ந்த நீரையே, அன்னத்தையே, ஒரு பயனும் கருதாது தருமமாக அளிக்கின்ற எங்களுக்குத் தலைவரான ஸ்ரீ நந்தகோபரே ! எழுந்திருக்க வேண்டும். பூங்கொம்பை ஒத்த மாதர்களுக்கெல்லாம் முதன்மையானவளே! நந்த குலத்துக்கு மங்களதீபமே ! எங்கள் தலைவியே! யசோதைப் பிராட்டியே! நீ துயிலுணர்ந்து எழுந்திரு. ஆகாயத்தை ஊடறுத்து ஓங்கி வளர்ந்து உலகளந்த தேவதேவனே! இனி உறங்காமல் எழுந்திரு. செம்பொன்னால் செய்த வீரக்கழலை அணிந்த அடிகளையுடைய செல்வனே ! பலதேவனே ! உன் தம்பியும் நீயுமாக உறங்காமல் எழுந்திரு.

விளக்கம்

இப்பாசுரத்தில் நந்தகோபர், யசோதை, கண்ணன், பலராமன் என்ற இவர்களை எழுப்புகிறார்கள், காவலர்களின் அனுமதி கொண்டு உள்ளே புகுந்த ஆய்ச்சியர். முதற் கட்டில் நந்தகோபரும், இரண்டாங் கட்டில் யசோதைப் பிராட்டியும், மூன்றும் கட்டில் கண்ணனும், நாலாம் கட்டில் பலதேவரும் பள்ளிகொள்வது முறை என்பர்.

முதல் இரண்டு அடிகளில் நந்தகோபரைத் துயிலுணர்த்தும்போது, முதல் அடி அவரது கொடைச் சிறப்பைக் கூறும். ஆடை முதலியவற்றுள், வேண்டுவார் வேண்டியதை வேண்டுமட்டும் கொடுப்பாராம் நந்தகோபர். புகழைப் பயனாகக் கருதாமல் கொடையையே பயனாகக் கருதிக் கொடுப்பாராம்.

'ஆடையையே கொடுக்கிருர்' என்று அந்தக் கொடையைப் பார்ப்பவர்களும் பெறுகிறவர்களும் பிரமித்துப் பேசுகிருர்கள். இப்படியே மற்றக் கொடைகளைக் குறித்தும் பேசிக் கொள்கிருர்களாம். இப்படிக் கொடை கொடுக்கும் நந்தகோபர் அச்சிறுமியருக்கு அம்பரமும் தண்ணீரும் சோறுமாயுள்ள கண்ணபிரானைத் தந்தருள் வார் என்பது குறிப்பு.

யசோதையைப் பெண்களுக்கெல்லாம் கொழுந்து என்று கூறுவதில், 'எந்த ஆய்ச்சிக்குத் துன்பம் நேரிட்டா லும் முதன்முதலில் வாடுவது இந்தக் கொழுந்துதான்!' என்பது குறிப்பு. செடிக்கு அல்லது மரத்திற்கு ஒரு தீங்கு நேர்ந்தால் முதலில் வாட்டம் அடைவது கொழுந்து தானே?

உள்ளுறை பொருள்

'அம்பரம்' — ஆத்மா பெற வேண்டிய இறைவனது முகமலர்ச்சிக்கு அறிகுறி. இதை வளர்க்க வல்ல மனநிலை 'தண்ணீர்'. 'சோறு' இதனுல் வரும் கைங்கரியம். இம்மூன்றையும் அளிக்கும் ஆசாரியனுக்கு நந்தகோபன் அறிகுறி. ஆசாரியனைப் பற்றிக் கொண்டு, திருமந்திரத்தின் பொருளை உணர்ந்து பகவானுக்கு அந்தரங்கமானவர்களை முன்னிட்டுப் பகவானைத் துயிலுணர்த்துதல் இப் பாட்டின் உள்ளுறை பொருள்.

உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன், மருமகளே! நப்பின்னய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்

பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண் :
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தலோ ரெம்பாவாய். (18)

பதவுரை

உந்துமத களிற்றன் - மதம் உந்து களிற்றன், மத நீரைப் பெருக்குகின்ற யானைகளையுடையவனும்,
ஓடாத தோள்வலியன் - (போரில்) பின்னிடாத புயவலிமை வாய்ந்தவனுமான,
நந்தகோபாலன் மருமகளே ! - நந்தகோபரது மருமகளே !
நப்பினாய் - நப்பின்னையே !
கந்தம் கமழும் - நறுமணம் வீசும்
குழலீ - கூந்தலையுடையவளே !
கடைதிறவாய் - கதவைத் திறவாய் !
வந்து எங்கும் கோழி - கோழிகள் எப்புறத்திலும் வந்து,
அழைத்தன காண் - கூவின ;
மாதவிப் பந்தல்மேல் - குருக்கத்திக் கொடிகளால் ஆகிய பந்தலின்மேல்,
பல்கால் - பல தடவை
குயிலினங்கள் - குயிலின் கூட்டங்கள்
கூவின காண் - கூவின :
பந்து ஆர் விரலி ! - பந்து பொருந்திய கைவிரல்களை உடையவளே !
உன் மைத்துனன் - உன் கணவனான கண்ணன்,
பேர்பாட - திருநாமங்களைப் பாடும்படியாக,
செந்தாமரைக் கையால் - செந்தாமரைப் பூப்போன்ற உன் கையால்,

சீர் ஆர் வளை ஒலிப்ப - சிறப்புப் பொருந்திய உன் கை வளைகள் குலுங்கும்படி

வந்து திறவாய் மகிழ்ந்து - மகிழ்ந்து வந்து கதவு திறப்பாயாக.

பொழிப்புரை

மதநீரைப் பெருக்கும் யானைகளை உடையவரும், போரில் பின்னிடாத புயவலிமை வாய்ந்தவருமான நந்த கோபருடைய மருமகளே! நப்பின்னைப் பிராட்டியே! மணம் கமழும் கூந்தலை உடையவளே! கதவு திறவாய். கோழிகள் நாற்புறமும் வந்து சூழ்ந்து கொண்டு கூவி அழைக்கின்றன. மாதவிக் கொடிப் பந்தலின்மேல் குயில் கள் கூட்டங் கூட்டமாகப் பலதடவையும் கூவுகின்றன. பந்து பொருந்திய விரல்களை உடையவளே! உன்னுடன் நாங்களும் உன் கணவன் பேர் பாடும்படி உன் வளைக்கை குலுங்க வந்து செந்தாமரை மலர்போன்ற அக்கைகளால் மகிழ்ச்சியுடன் கதவைத் திறப்பாயாக.

விளக்கம்

நப்பின்னைப் பிராட்டியைத் துயிலுணர்த்தும் பாசுரம் இது. கண்ணன் கதைகளில் வடநாட்டார் ராதைக்கு அளித்திருக்கும் பதவியைத் தமிழர் நப்பின்னைக்கு அளித் திருக்கிறார்கள். இத்தகைய பிராட்டியை முன்னிட்டுப் பகவானைப் பற்றவேண்டும் என்ற கருத்துடன் ஆய்ப் பெண்டிர் நப்பின்னையை உணர்த்துகிறார்கள். நப்பின்னை யின் தயவில்லாமல் வாயில் காப்பான், நந்தகோபன், பல தேவன் முதலியோரை மட்டும் பற்றுவது, 'கன்னிகை யின்றிக் கல்யாணம் கோடிப்பது' போலத்தான் என் பதை ஆய்ச்சியர் அறிவர்.

இப்பாட்டின் முதல் அடி நந்தகோபரின் வலிமையைச் சிறப்பிக்கிறது. இவரது வலிமையை உணர்ந்துதான்

கம்ஸனும் நேரில் வந்து தீங்குசெய்யாமல் பூதனை, சகடா சுரன் முதலானவர்களைத் தந்திரமாகக் கண்ணனைக் கொல்லும்படி ஏவினான் என்று கருதலாம்.

மாதவிப் பந்தல் குயில்களுக்கு வாய்த்த படுக்கை யாகும் என்பர். 'மைத்துனன்' - அத்தை மைந்தனைக் குறிக்கும். மாமன் மகளை மணக்கும் முறை கருதிக் கணவனை 'மைத்துனன்' என்று கூறுவதும் உண்டு.

'பந்து ஆர் விரலி' என்பதில் பந்தடித்து விளையாடி மகிழும் இளம் பருவம் குறிக்கப்படுகிறது. கண்ணனுடன் நப்பின்னை பந்தடித்து விளையாடுவது உண்டு என்பர். அந்தப் பந்து விளையாட்டில் கண்ணன் தோற்றதாகவும், நப்பின்னை தனக்கு வெற்றியளித்த பந்தைக் கையால் அணைத்துக்கொண்டே உறங்கியதாகவும், அதைச் சாளர வாசலால் பார்த்துவிட்ட ஆய்ச்சிகள் அவளைப் 'பந்தார் விரலி' என்று அழைப்பதாகவும் கற்பனை செய்வ துண்டு.

'உன் கையில் வளை குலுங்க வந்து அந்த அழகிய பந்து பிடித்த மலர்க் கரங்களால் நீ கதவைத் திறக்க வேண்டும். அப்போதுதான் எங்கள் நெஞ்சு குளிரும். நாங்கள் கண்ணனால் பேறு பெற உன் கைபார்த் திருக்கிறோம்' என்பது இப்பாசுரத்தின் இறுதி மூன்று அடிகளின் குறிப்பு.

இப்பாசுரம் ஸ்ரீவைஷ்ணவ மதஸ்தாபன ஆசாரிய ரான இராமாநுஜருக்கு மிகவும் பிரியமான பாட்டு என்பர். இராமாநுஜர் ஒரு சமயம் பிட்சைக்காக (துறவி கள் பிட்சை கொண்டு பசி தீர்த்துக் கொள்வர் என்பது மரபு)ப் புறப்பட்டுத் திருப்பாவைப் பாடல்களைப் பாடிக் கொண்டே போனாராம். தமது ஆசாரியரான பெரிய நம்பியின் மாளிகை வாசலுக்குச் சென்றதும், கதவு தாளிட் டிருந்ததைக் கண்டார். அவ்வாசலில் நின்று 'உந்து மதி களிற்றன்' என்று தொடங்கும் பாசுரத்தைப் பாடினார்.

பெரிய நம்பியின் மகளான அத்துழாய் உள்ளே யிருந்து வந்து கதவைத் திறந்தாள். அதே சமயத்தில், ‘செந்தா மரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப - வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்’ என்ற கடைசி அடிகளை அனுசஸந்திக்க நேர்ந்ததாம். அத்துழாய் கதவைத் திறந்து கொண்டு வந்ததும் அவளை நப்பின்னைப் பிராட்டியாகவே கருதி வணங்கினராம்.

கவிநயம்

திருப்பாவையில் விசேஷமான கவிநயமுள்ள பாடல்களில் இதுவும் ஒன்று.

வந்தெங்கும் கோழி, அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்

என்ற அடிகள் இயற்கை யழகை இயற்கையாக வருணிக்கும் கவிதை. இறுதி இரண்டு அடிகளும் இராமாநுஜரின் மனோபாவத்தை வசீகரித்ததுபோல் நமது மனோபாவத்தையும் வசீகரிக்கும் கவிச்சுவை வாய்ந்தனவாக, இந்த அழகிய பாசுரத்திற்கு அழகுச் சிகரமாய் அமைந்துள்ளன.

உள்ளுறை பொருள்

பிராட்டியை முன்னிட்டு - அதாவது புருஷகாரமாகக் கொண்டுதான் - பகவானை அடைய முடியும் என்பது இதன் திரண்ட உள்ளுறை.

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்.

மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் !
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

பதவுரை

குத்து விளக்கு எரிய - குத்து விளக்கு எரிந்து கொண்டிருக்க,
கோட்டுக்கால் கட்டில்மேல் - யானைத் தந்தங்களால் செய்த கால்களையுடைய கட்டிலில்
மெத்தென்ற - மெத்தென்று இருக்கிற
பஞ்ச சயனத்தின் மேல் ஏறி - பஞ்சினாலாகிய மெத்தையின் மேல் ஏறி,
கொத்து அலர் - கொத்தாக மலர்கின்ற
பூங்குழல் - பூக்களை அணிந்த கூந்தலை உடைய
நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த - நப்பின்னையை அணைத்துக்கொண்டு தூங்குகிற
மலர் மார்பா ! - மலர்ந்த, அதாவது பரந்த, மார்பையுடைய கண்ணனே !
வாய் திறவாய் - வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்வாய்.
மைத்தடங் கண்ணினாய் - மை தீட்டிய விசாலமான கண்களையுடைய
நப்பின்னாய்! - நப்பின்னையே !
நீ உன் மணாளனை - நீ உன் கணவனை
எத்தனை போதும் - எவ்வளவு நேரமானாலும்
துயில் எழ ஒட்டாய் காண் - துயில் உணர்ந்து எழுந்திருக்கச் சம்மதியாமல் இருக்கிறாய்.
எத்தனை ஏலும் - ஒரு நிமிஷ காலம் என்றாலும்

பிரிவு ஆற்றகில்லாய் - பிரிவைப் பொறுக்கும் வல்லமையற்று இருக்கிருய்!
தத்துவம் - (இது உனக்கு) உண்மையாக
தகவு அன்று - தகுதியன்று.

பொழிப்புரை

குத்து விளக்கு எரிந்துகொண்டிருக்க, தந்தங்களால் இழைத்த கால்களையுடைய கட்டிலில் பஞ்ச சயன மெத்தையில் ஏறி, கொத்துக்கொத்தாக மலர்களை அணிந்திருக்கும் கூந்தலையுடைய நப்பின்னைப் பிராட்டியை அணைத்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகின்ற மலர்ந்த மார்பையுடைய பெருமானே! வாய்திறந்து ஒரு வார்த்தை அருளிச்செய்ய வேண்டும். அஞ்சனம் தீட்டிய அகன்ற கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டியே! உன்கணவனை கண்ணபிரானை எவ்வளவு நேரமானுலும் துயில் எழ நீ சம்மதிப்பதில்லை! ஒரு கணமானுலும் பிரிந்திருப்பதையும் சகித்திருக்க மாட்டாய்! உண்மையாக இது உனக்குத் தகுதியன்று.

விளக்கம்

முந்திய பாட்டில் நப்பின்னையை எழுப்பினுர்கள். அவள் கதவு திறக்கப் புறப்பட, அப்போது கண்ணன் அவளை முற்படப் போகாமல் தடுத்து விடுகிருனும். அதற்காகக் கண்ணனை ஆய்ச்சியர் மீண்டும் எழுப்புகிருர்கள். இப்போது கண்ணன் அவள் விருப்பத்திற்கு இணங்கி வாய் திறவாமல் இருக்கிருனும். ஆகவே மீண்டும் கண்ணனை எழுப்புமாறு நப்பின்னையை எழுப்புகிருர்கள். இது இப்பாசுரத்தின் கருத்து என்பர்.

'குத்து விளக்கு' விரும்பிய இடங்களில் எடுத்து வைப்பதற்கு உரிய விளக்கு. 'பஞ்ச சயனம்' அழகு, குளிர்ச்சி, மென்மை, பரிமளம், வெண்மை யென்ற ஐந்து குணங்களை

யும் உடைய படுக்கை என்பர். தளிர், மலர், பஞ்சு, பட்டு, மென்மையான கம்பளம் என்ற ஐந்து பொருள்களால் ஆன சயனம் என்றும் கூறுவர். 'பஞ்ச' பஞ்சை உடைய ; பஞ்சுகளினுல் ஆகிய-என்றும் பொருள்படும்.

'தத்துவம் அன்று தகவு' இதற்கு, 'தத்துவம் அன்று ; தகவு அன்று' என்றும் பொருள் கூறுவதுண்டு. அதாவது, 'நீ இப்படி இருப்பது உன் சொரூபத்திற்கும் பொருந்தாது, உன் சுபாவத்திற்கும் பொருந்தாது' என்பர். இறைவனிடத்தில் 'சிபார்சு' செய்யவேண்டிய பிராட்டி கண்ணனை எழுப்பாமல் இருப்பது அவளுடைய சுபாவத்திற்கும் பொருத்தம் அன்று ; கருணை வடிவமான அந்தக் குணத்திற்கும் தகுதியன்று என்பது பொருள்.

உள்ளுறை பொருள்

இப்பாசுரத்தில், 'நான் முந்தி, நான் முந்தி' என்று அடியார்களுக்காகப் பிராட்டியும் பெருமானும் போட்டி போட்டுக் கருணை புரிவர் என்ற கருத்து ஒருவாறு உள்ளுறையாகக் கிடக்கிறது. பிராட்டியின் அன்பிற்கு வசப்பட்டு அவள் சொல்லியபடி இறைவன் நடந்துகொள்வான் என்ற குறிப்பும் இதில் காணப்படுகிறது.

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்.
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்ருர்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்.
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்!
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய். (20)

பதவுரை

முப்பத்துமூவர் அமரர்க்கு - முப்பத்துமூன்று பேரை முக்கியமாகவுடைய முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு
முன்சென்று - முன்னே போய்
கப்பம் - நடுக்கத்தை
தவிர்க்கும் - போக்குகிற
கலியே - மிடுக்கனான கண்ணனே !
துயில் எழாய் - நித்திரை நீங்கி எழுந்திருப்பாய்.
செப்பம் உடையாய் - செம்மை உடையவனே !
திறல் உடையாய் - வலிமை வாய்ந்தவனே !
செற்றார்க்கு - பகைத்தவர்களுக்கு
வெப்பம் - (பயமாகிய) ஜ்வரம்
கொடுக்கும் - கொடுக்கிற
விமலா - குற்றமற்றவனே !
துயில் எழாய் - உறக்கம் நீங்கி எழுந்திராய்.
செப்பு அன்ன - பொற்கலசம் போன்ற
மென்முலை - மென்மையான ஸ்தனங்களும்
செவ்வாய் - சிவந்த வாயும்
சிறுமருங்குல் - நுண்ணிய இடையும் உள்ள
நப்பின்னை நங்காய் - நப்பின்னைப் பிராட்டியே !
திருவே - லட்சுமி போன்றவளே !
துயில் எழாய் - உறக்கம் நீங்கி எழுந்திருப்பாய்.
உக்கமும் - (நோன்பிற்கு வேண்டிய) விசிறியையும்
தட்டொளியும் - கண்ணாடியையும்
தந்து - (எங்களுக்குத் தந்து)
உன் மணாளனை - உன்னுடைய கணவனையும் (கொடுத்தருளி)
இப்போதே எம்மை - இப்பொழுதே எங்களை
நீராட்டு - நீராடச் செய்.

பொழிப்புரை

முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு ஆபத்து வருவதற்கு முன்னமே அவர்கள் நினைத்த இடத்திற்குச் சென்று அவர்களுடைய நடுக்கத்தை நீக்கியருளவல்ல மிடுக்குடையவனே! துயிலுணர்ந்து எழுந்தருளவேண்டும். தொண்டர்களைக் காக்கவல்ல செம்மையுடையவனே! தொண்டர்களின் பகைவர்களை அழிக்கும் வலிமை வாய்ந்தவனே! பகைத்தவர்களுக்குப் பயஜ்வரத்தைக் கொடுக்கவல்ல விமலனே! துயிலெழுந்து வரவேண்டும். பொற்கலசம் போன்ற மெல்லிய ஸ்தனங்களும், பவளம் போல் சிவந்த வாயும், நுண்ணிய இடையும் உடைய நப்பின்னை நங்கையே! மகாலட்சுமி போன்றவளே! துயிலெழுந்து வந்து எங்கள் நோன்பிற்கு வேண்டிய விசிறியும் கண்ணாடியும் கொடுத்து, உன் மணவாளனை கண்ணபிரானை எங்களுக்குத் தந்தருளி, இப்போதே எங்களை நீராடச் செய்வாயாக.

விளக்கம்

முந்திய பாட்டில் ' தத்துவம் அன்று தகவு ' என்று ஆய்ச்சிகள் தங்கள் வருத்தம் தோன்ற நப்பின்னைப் பிராட்டியைக் குறித்துக் கூறினார்கள் அல்லவா? எனினும் அவள் அதனால் சிறிதும் வருத்தமின்றி இறைவன் திருவுள்ளம் அறிந்து விண்ணப்பம் செய்வோமென்று பேசாதே பள்ளி கொண்டிருக்கிறாளாம். எனவே, ஆய்ச்சிகள் மீண்டும் கண்ணனையே எழுப்பிப் பார்ப்போமென்று அவனுடைய துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனப் பெருமைகளைப் பேசித் துயிலெழுப்புகிறார்கள். அவனும் வாய் திறவாமல் இருக்க, ஆய்ச்சிகள், ' நாம் நப்பின்னை விஷயமாய்க் கூறியது கண்ணனுக்கும் வெறுப்பை விளைவித்திருக்கக் கூடும் ' என்று நினைத்து மறுபடியும் அப்பிராட்

டியையே புகழ்ந்து அவள் மூலமாகவே தங்கள் இஷ்டத்தைப் பெற விரும்பி அவனைத் துயிலுணர்த்துகிறார்கள், இந்தப் பாசுரத்தில்.

'முப்பத்துமூவர் அமரர்' முப்பத்துமூன்று வகுப்பினரான தேவர்கள். வகுப்பு ஒன்றுக்கு ஒரு கோடியாக முப்பத்து முக்கோடி தேவர்கள் என்பர். முப்பத்து மூவருக்கு விவரம்: அஷ்ட வஸுக்கள் என்ற எட்டுப்பேர், ஏகாதச ருத்திரர் என்ற பதினொருவர், துவாதசாதித்தியர் என்ற பன்னிருவர், அசுவினி தேவதைகள் என்ற இருவர்.

விசிறியும் கண்ணாடியும் வேண்டியது, வேண்டிய எல்லாவற்றையும் அபேட்சித்ததற்கு உபலட்சணம்.

உள்ளுறை பொருள்

முதல் இரண்டு அடிகளில் வரும் அமரர்கள், ஞானிகளின் கூட்டத்திற்கு அறிகுறி. ஆபத்து வருவதற்கு முன்னமே தேவர்களைக் காப்பாற்றுவது, அஞ்ஞானம் உண்டாவதற்கு முன்னமே ஞானிகளுக்கு அந்த அஞ்ஞானத்தை வரவொட்டாது தடுப்பதைக் குறிக்கும். ஆலவட்டம் (உக்கம்) என்ற விசிறி, அகப்பற்று, புறப்பற்று ஆகியவற்றை விசிறித் தள்ளி விளக்குவதைக் குறிக்கும். 'கண்ணாடி' ஸ்வரூப ஞானஒளி. உலக அன்னையான பிராட்டியை நோக்கி, 'இறைவனை எங்களோடு சேர்ப்பிக்க வேண்டும்' என்று மன்றாடுவது இப்பாசுரத்தின் உள்ளுறை.

—

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்!
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்

தோற்றமாய் நின்ற சுடரே ! துயிலெழாய் !
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

பதவுரை

ஏற்ற - (பாலைக் கறக்கும்படி) கொண்ட ; (கறந்த பாலை) ஏற்றுக்கொண்ட
கலங்கள் - பாத்திரங்கள்
எதிர்பொங்கி - நிறைந்து எதிராகப் பொங்கி
மீது அளிப்ப - மேலே வழியும்படியாக
மாற்றாதே - இடைவிடாமல்
பால்சொரியும் - பாலைச் சொரிந்து தருகிற
வள்ளல் பெரும் பசுக்கள் - வள்ளல்களின் வண்மைக் குணம் உடைய பெரிய பசுக்களை
ஆற்றப் படைத்தான் - மிகுதியாக உடைய நந்த கோபரது
மகனே - பிள்ளையான கண்ணனே !
அறிவுறாய் - துயிலுணர்ந்து எழுந்திருப்பாய்.
ஊற்றம் உடையாய் - (அடியாரைக் காப்பதில்) சிரத்தை உடையவனே !
பெரியாய் - பெரியவனே !
உலகினில் தோற்றமாய் நின்ற - இவ்வுலகத்திலே தோன்றி அல்லது அவதரித்து நின்ற
சுடரே - ஒளி வடிவானவனே !
துயில் எழாய் - துயிலுணர்ந்து எழுந்திருப்பாய்.
மாற்றார் - பகைவர்கள்
உனக்கு வலி தொலைந்து - உனக்கு எதிரே வலிமை ஒழிந்து
உன் வாசல் கண் - உன் மாளிகை வாசலில்
ஆற்றாது வந்து - கதியற்று வந்து

உன் அடி பணியுமா போலே - உன் அடிகளைப் பணியும் விதம்போல; உன் அடிகளில் சரணாகதி செய்து கிடப்பதுபோல.

போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து - நாங்களும் உன்னைப் புகழ்ந்து 'போற்றி, போற்றி' யென்று பல்லாண்டு பாடி வந்துசேர்ந்தோம்.

பொழிப்புரை

சொரிந்த பாலை ஏற்றுக்கொண்ட கலங்கள் எல்லாம் எதிர்பொங்கி மேலே வழியும்படியாக இடைவிடாமல் பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்களை மிகுதியாக வுடைய நந்தகோபரின் பிள்ளையே! எழுந்திருப்பாய். உறுதியை உடையவனே! பெரியவனே! இவ்வுலகில் அவதரித்துநின்ற சுடரொளியே! துயிலுணர்ந்து வந்தருள வேண்டும். சத்துருக்கள் உன் வலிமை கண்டு தங்கள் வலி தொலைந்து, ஆற்றாது உன் வாசலில் வந்து உன் திருவடிகளில் சரணாகதி செய்து கிடப்பதுபோல், நாங்களும் உன்னைப் புகழ்ந்து போற்றி உனக்குப் பல்லாண்டு பாடி வந்தோம்.

விளக்கம்

முந்திய பாட்டில் சொல்லியபடி நப்பின்னைப் பிராட்டியை எழுப்பியபின் அவள் எழுந்து வந்து இப்பெண்களை நோக்கி, 'தோழிகளே! நானும் உங்களில் ஒருத்தியன்றோ? நீங்கள் சிறிதும் வருந்த வேண்டாம். உங்கள் காரியத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நாமெல்லாரும் கண்ணனை வேண்டிக் கொள்வோம், வாருங்கள்' என்று சொல்லுகிறாளாம். ஆகவே, நப்பின்னை உள்ளிட்ட அனைவரும் கூடிக் கண்ணனது வீரத்தைப் புகழ்ந்து அவனைத் துயிலுணர்த்தும் பாசுரம் இது.

இப்பாட்டில் முதல் இரண்டரை அடிகளால் நந்த கோபருடைய கறவைச் செல்வத்தைப் புகழ்கிருர்கள். ஏற்கெனவே நந்தகோபருடைய அறநெறித் தலைமையை யும், தோள்வலிச் சிறப்பையும் புகழ்ந்திருக்கிருர்கள்.

'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக் கள்' என்று ஏற்கெனவே பசுக்களை வருணித்திருப்பதை இங்கே நினைப்பூட்டிக் கொள்ளலாம். 'ஊற்றம்' — ஊன்றியிருத்தல் ; அடியார் விஷயத்தில் கருத்து ஊன்றி யிருத்தல்.

பகைவர்கள் கண்ணனுடைய வலிமைக்குத் தோற் றுக் காலில் விழுவதுபோல இந்த ஆய்ச்சிகள் கண்ண னுடைய வடிவழகிற்கும் குண அழகிற்கும் தோற்று வந்து சரணுகதி செய்கிருர்களாம்.

உள்ளுறை பொருள்

இறைவனுடைய சௌந்தரியமும் குணங்களும் ஆகர்ஷிக்க, ஆற்ருமை இருந்த இடத்தில் இருக்க வொட்டாது பிடர் பிடித்துத் தள்ள வந்து சேருகிருர் களாம் அடியார்கள், இறைவனுடைய சன்னிதியிலே. வந்து சரணுகதி செய்கிருர்களாம் அவன் திருவடி களிலே. இத்தகைய அடியார்களுக்குப் பட்சபாதமாக இருக்கிருனும் இறைவன். இந்தப் பட்சபாதம் அவதாரத்தில் வெளியிடப்பெறும் என்பர்.

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்ருதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்,

ஞானப்பால் சொரியும் ஆசாரியர்களுக்கு அறி குறி. 'ஏற்ற கலங்கள்' சிஷ்யர்கள் ; உபதேசத்திற் குப் பாத்திரமானவர்கள். ஏற்ற கலங்கள் எதிர்

பொங்கி மேல்நோக்கி மடுவுக்கே பால் அளிப்பது போலத் தோன்றுகின்றனவாம்; அப்படியே சீடர்களும் ஆசாரிய உபதேசத்தால் பரிபூர்ண ஞானம் பெற்றவர்களாய், கலங்கள் பாலால் நிறைவதுபோல் ஞானத்தால் நிறைந்தவர்களாய் இருக்கிறார்களாம்; பால் கலங்களிலிருந்து மேல் நோக்கிப் பொங்குவது போல் இச்சீடர்களின் ஞானமும் பொங்கி, ஆசாரியருக்கும் யுக்தி சொல்ல வல்லமை பெறுகிறதாம்.

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல், வந்து தலைப்பெய்தோம்.
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல், [யேல்
அங்கண் இரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதி
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். (22)

பதவுரை

அங்கண்மா ஞாலத்து - அழகிய இடம் அகன்ற பெரிய பூமியில்
அரசர் - (ஆட்சி செலுத்திய) அரசர்கள்
அபிமான பங்கமாய்வந்து - அகங்காரம் அடங்கிவந்து
நின் பள்ளிக் கட்டில் கீழே - நீ பள்ளிகொண் டிருக்கிற கட்டிலுக்குப் பக்கத்தில்
சங்கம் - கூட்டங் கூட்டமாக
இருப்பார் போல் - இருப்பவர்போலே,

வந்து தலைப் பெய்தோம் - வந்து (உன்னை) அணுகப் பெற்றோம்.
கிங்கிணி வாய்ச் செய்த - கிண்கிணியின் வாய்போல் சிறிதே மலர்ந்த
தாமரைப்பூப் போல - தாமரைப் பூவைப்போல,
செங்கண் - செம்மையான கண்கள்
சிறுச்சிறிதே - சிறிது சிறிதாக
எம்மேல் - எங்கள்மேல்
விழியாவோ - விழித்தலாகாதோ ?
திங்களும் - சந்திரனும்
ஆதித்தியனும் - சூரியனும்
எழுந்தாற்போல் - (ஒருசேர) உதயம் செய்தாற்போல்,
அங்கண் இரண்டும் கொண்டு - அழகிய கண்கள் இரண்டையும் கொண்டு
எங்கள்மேல் நோக்குதியேல் - எங்களைக் கடாட்சிப்பாயானால்
எங்கள்மேல் சாபம் - எங்களிடமுள்ள பாவம்
இழிந்து - கழிந்து போகும்படி.

பொழிப்புரை

அழகிய விசாலமான பெரிய பூமியை ஆண்ட மன்னர்கள் தங்கள் அகங்காரம் அடங்கிவந்து உன் பள்ளிக் கட்டிலுக்குப் பக்கத்தில் திரள் திரளாக வந்திருப்பது போல் நாங்களும் உன்னைத் தேடி வந்து அணுகப் பெற்றோம். கிண்கிணியின் வாய்போல் சிறிது மலர்ந்த செந்தாமரைப் பூப்போன்ற செம்மையான அன்புக் கண்கள், கொஞ்சங் கொஞ்சமாக எங்கள்மீது விழிக்கலாகாதா ? சந்திர சூரியர் ஏககாலத்திலே உதித்தாற்போல் குளிர்ந்த அருளும் தருமாவேசமும் ஒருங்கே கொண்ட அழகிய இரண்டு கண்களையும் கொண்டு எங்கள் பாவம் கழிந்து போகும்படி எங்களை நோக்கியருள்வாயாக.

விளக்கம்

கண்ணபிரானை முன்பு எழுப்பிய ஆயச் சிறுமியர், தங்கள் பாவமெல்லாம் தீரும்படி அப்பெருமான் தன் திருக்கண்களால் மெல்ல மெல்லக் கடாட்சிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள், இப் பாசுரத்திலே.

'அபிமான பங்கமாய்' — 'ஒரு நாயகமாய் உலகம் ஆளுகின்றோம்; இந்த ராஜ்யமெல்லாம் நம்முடையது; குடிகளெல்லாம் நம் குடிகள்!' என்றிருக்கும் அபிமானம் நீங்கப் பெற்றவர்களாய். இந்த அபிமானத்தை 'அகங்காரம்' என்று சொல்வதைக் காட்டிலும் 'மமகாரம்' என்று குறிப்பது பொருந்தும். 'அகங்காரம்'— 'நான்' என்ற அகப்பற்று; 'மமகாரம்' 'எனது' என்ற புறப் பற்று. இப்பற்றுகள் ஒழிந்தால் தத்துவ ஞானம் தலையெடுக்கும் என்பர்.

கண்ணனது துஷ்ட நிக்கிரக சக்திக்குத் தோற்ற அரசர்கள் வேறு போக்கு இல்லாமல் அபிமான பங்கமாய் வந்து சரணம் அடைவதுபோல், ஆய்ச்சியர் கிருஷ்ண சௌந்தரியத்திற்கும், அன்புப் பெருங்குணத்திற்கும் தோற்று, ஸ்ரீ கிருஷ்ண கைங்கரியத்திற்காக வருகிறார்கள்—என்பது குறிப்பு.

'பள்ளிக் கட்டில்'—தூங்கு மஞ்சம்; சிங்காதனம் என்றும் இங்கே பொருள் கூறலாம். 'கிங்கிணி'—வாய்ப் பக்கம் கொஞ்சம் திறந்த ஒருவகைச் சதங்கை. அதன் வாய்போல் சிறிது மலர்ந்த தாமரையைக் 'கிங்கிணி வாய்ச் செய்த தாமரை' என்கிறார்.

'செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?'— 'முழு நோக்கு அல்லது பூர்ண கடாட்சம் செய்தருளினால் அந்தப் பேரொளியைத் தாங்கமுடியாது, அது கூசச் செய்துவிடும்!' என்று கருதியவர்கள்போல் பொறுக்கப் பொறுக்கக் கடாட்சிக்க வேண்டும் என்கிறார்கள். 'கோடை

வெதுப்பிய பயிரிலே சிறிது மழை பெய்யாதோ?' என்பதுபோல் 'எம்மேல் விழியாவோ?' என்கிறார்கள்.

'திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்'—'கதிர் மதியம் போல் முகத்தான்' என்று ஏற்கெனவே கூறியதை நினைப்பூட்டுகிறது. அன்பரிடம் குளிர்ந்த நல்லருளும்; தீயோரிடம் சீற்றமும் ஒருங்கே தோன்றும் கண்கள் என்பது சாதாரணப் பொருள். ஏக காலத்தில் ஞாயிறும் திங்களும் உதித்தால் தாமரை மலர் பாதி மூடியும் பாதி மலர்ந்தும் இருப்பதுபோல், கண்ணனுடைய செந்தாமரைக் கண்களும் அன்பர்களுடைய குற்றங் குறைகளை நினைத்துப் பாதி மூடியும், அவர்களுடைய இதய அலறலைக் கேட்டுப் பாதி திறந்தும் இருக்கும் என்று நுட்பமாக ஒரு பொருள் கூறுவதும் உண்டு.

'சாபம்' — சாபம்போல் கொடுமையை விளைக்கும் பாவம்; அனுபவித்தே தீரவேண்டியதாக நேர்ந்த பிரிவுத் துயரத்தை இங்கே குறிப்பிடுகிறது எனலாம்.

உள்ளுறை பொருள்

'எங்களுடைய அகப்பற்று, புறப்பற்றுகளைப் போக்கி, இறைவனுகிய நீயே உபாயம் என்னும் ஞானத்தைப் பிறப்பித்து நீ உவந்த கைங்கரியத்தில் எங்களை ஈடுபடச் செய்ய வேண்டும். அதற்கு உன் கருணை நோக்கம் சிறிது சிறிதாக எங்கள்மீது விழ வேண்டும்' என்று பாகவதர்கள் செய்துகொள்ளும் பிரார்த்தனை இப்பாசுரத்தின் உள்ளுறை பொருள்.

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

போதருமா போலே, நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (23)

பதவுரை

மாரி - மழைக் காலத்தில்
மலை முழைஞ்சில் - மலைக் குகையில்
மன்னி - பொருந்தி
கிடந்து - படுத்து
உறங்கும் - உறங்குகிற
சீரிய சிங்கம் - சிறப்பு வாய்ந்த சிங்கம்
அறிவுற்று - உறக்கம் தெளிந்து
தீ விழித்து - (பசியினால்) தீப்பொறி பறக்கக் கண் விழித்து
வேரி மயிர் - (ஒரு வகை) மணமுள்ள உளை மயிர்கள்
பொங்க - சிலும்ப
எப்பாடும் - எப்பக்கமும்; நாலுபக்கமும்
பேர்ந்து - புடைபெயர்ந்து; அசைந்து கொடுத்து
உதறி - (உடம்பை) உதறிக்கொண்டு
மூரி நிமிர்ந்து - சோம்பல் முறித்து
முழங்கி - கர்ஜனை செய்து
புறப்பட்டு - (குகையிலிருந்து) வெளிப்பட்டு
போதருமா போல - வருகிறது போல,
நீ பூவைப்பூ வண்ணா - காயாம்பூவைப் போன்ற நீல நிறமுள்ளவனாகிய நீ
உன் கோயில் நின்று - உன் இருப்பிடத்திலிருந்து
இங்ஙனே - இவ்விடத்தில்
போந்தருளி - அருளுடன் வந்து
கோப்புடைய - (அழகிய வேலைப்பாடுகள்) பொருந்தியிருக்கும்

சீரிய சிங்காசனத்திருந்து - சிறந்த சிங்காதனத்தில் வீற்றிருந்து,
யாம் வந்த காரியம் - நாங்கள் வந்த காரியத்தை
ஆராய்ந்து அருள் - விசாரித்து ஆலோசித்து அருள் செய்வாயாக.

பொழிப்புரை

மழைக் காலத்தில் மலைக்குகையில் பொருந்திக் கிடந்து உறங்கும் இராஜ சிங்கம் துயிலுணர்ந்து எழுந்து தீ விழித்து, ஒருவகை மணம் வீசும் உளைமயிர் பொங்க நாலுபுறமும் அசைந்து கொடுத்து உடம்பை உதறிச் சோம்பல் முறித்துக் கர்ஜனை செய்துகொண்டு குகையிலிருந்து வெளிக்கிளம்பி வருவது போல், காயாம்பூ நிறத்தை யுடையவனே! நீ உன் இருப்பிடத்திலிருந்து இங்கே, இந்த ஆஸ்தான மணிமண்டபத்திற்கு எழுந்தருளி, பலவகையான அழகிய வேலைப்பாடுகள் அமைந்திருக்கும் சிறந்த சிங்காதனத்தின்மீது வீற்றிருந்து நாங்கள் வந்த காரியத்தை ஆராய்ந்து அருள்புரிவாயாக.

விளக்கம்

கண்ணனை எழுப்பிக் கருணைபுரிய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்ட ஆயச்சிறுமியர், 'உங்களுக்கு நான் செய்ய வேண்டியதென்ன?' என்று கேட்ட கண்ணன் கேள்விக்கு விடையிறுப்பதுபோல் அமைந்துள்ளது இப்பாசுரம். 'பெருமானே! எங்கள் மனோரதம் இரகசியமாக விண்ணப்பம் செய்யக் கூடியதன்று; ஆஸ்தான மண்டபத்திலே சிங்காதனத்தில் தேவ தேவனாகிய நீ ராஜாதி ராஜனாக வீற்றிருந்து எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருள வேணும்' என்று 'யசோதை இளஞ்சிங்க'மாகிய கண்ணனை நோக்கிப் பிரார்த்திக்கிறார்கள்.

'வேரிமயிர் பொங்க'—கிடந்துறங்கும் போது நெருக்குண்டு அமுங்கிக் கிடந்த ரோமம் பொங்கும்படி. மூரி நிமிர்ந்து' — சோம்பல் தீரப் பெருமை தோன்ற உடல் நிமிர்ந்து.

கவிநயம்

இப்பாட்டில் சிங்கத்தின் கம்பீரமான வருகை விசேஷமான கவிச் சுவையுடன் வருணிக்கப் படுகிறது. 'யசோதை இளஞ்சிங்கம்' சிங்கம்போல் கம்பீரமாக வந்து சிங்காதனத்தில் வீற்றிருந்து தாங்கள் வந்த காரியத்தை ஆராய்ந்தருள வேண்டும் என்ற சிறுமியர் பிரார்த்தனை எவ்வளவு ரசமாக அமைந்திருக்கிறது!

உள்ளுறை பொருள்

'இறைவனே உபாயம்' என்று அதிதீவிர நிலையில் உள்ள பாகவதர்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறைவன் கம்பீரமாகத் தானே முந்தி வந்தருள்வான் என்பது பொருள்.

'அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி.
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல்போற்றி.
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி.
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி.
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி.
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். (24)

பதவுரை

'அன்று - (மகாபலி உலகங்களை யெல்லாம் கவர்ந்து கொண்ட) அக்காலத்தில்
இவ்வுலகம் அளந்தாய் - இந்த உலகங்களை யெல்லாம் (இரண்டடியால்) அளந்தருளியவனே!
அடிபோற்றி - உன் திருவடிகள் வாழ்க.
சென்று அங்கு - (இராவணன் உள்ள) அந்த இடத்திலே போய்,
தென் இலங்கை செற்றாய் - தென் திசையில் உள்ள இலங்கையர்களை அழித்தவனே!
திறல் போற்றி - (அந்த உன்) சக்தி வாழ்க.
பொன்றச் சகடம் - சகடாசுரன் அழியும்படி
உதைத்தாய் - உதைத்தருளியவனே!
புகழ்போற்றி - (அந்த உன்) புகழ் வாழ்க.
கன்று - கன்றாக உருவெடுத்துவந்த வத்ஸாஸுரனை
குணிலா - எறி தடியாக (க்கொண்டு)
எறிந்தாய் - (விளங்கனி வடிவாகத் தொங்கிய கபித்தாஸுரன்மீது) எறிந்தருளியவனே!
கழல் போற்றி - உன் திருவடிகள் வாழ்க.
குன்று குடையா - கோவர்த்தன மலையைக் குடையாக
எடுத்தாய் - எடுத்தருளியவனே!
குணம் போற்றி - (அந்த உன்) குணம் வாழ்க.
வென்று பகை கெடுக்கும் - பகைவர்களை வென்று அழிக்கிற,
நின் கையில் - உன் கையிலுள்ள
வேல் போற்றி - வேலாயுதம் வாழ்க.
என்று என்று - என்று இப்படிப் பலவாறாக வாழ்த்தி,
உன் சேவகமே - உன் வீர சரித்திரத்தையே
ஏத்தி - துதித்து

பறை கொள்வான் - நோன்புக்கு வேண்டிய பறையைப் பெற்றுக்கொள்ள,
இன்று யாம் வந்தோம் - இன்று நாங்கள் வந்தோம்,
என்று இரங்கேல் - என்று மனமிரங்குவாய்.

பொழிப்புரை

'உன் உடைமையாகிய உலகங்களை மகாபலிச் சக்கிரவர்த்தி அபகரித்துக்கொள்ள அமரர்கள் தவித்து நின்ற அந்நாளில், இந்த உலகங்களை யெல்லாம் அந்த அசுர சக்கிரவர்த்தியிடம் இரந்து இரண்டடியால் அளந்துகொண்டவனே! அந்த உன் திருவடிகள் வாழ்க பல்லாண்டு. இராட்சஸ சக்கிரவர்த்தியான இராவணன் இருக்குமிடம் போய் இலங்கை யரக்கர்களை அழித்தருளினவனே! அந்த உன் தோள்வலி வாழ்க பல்லாண்டு. சகடாசுரன் கட்டுக் குலைந்து உருமாய்ந்து அழியும்படி உதைத்தருளினவனே! அந்த உன் திருப்புகழ் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க. கன்று வடிவாக வந்த அசுரனை எறிதடியாகக் கொண்டு விளாவின் வடிவாகநின்ற அசுரன்மீது எறிந்தருளியவனே! அந்த உன் அருளுக்கு மங்களம். கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்தவனே! அந்த உபகார குணத்திற்கு மங்களம். 'விரோதிகளை வென்றொழிக்கும் திருக்கை வேல் வாழ்க' என்று என்று இப்படியே பலவாறாக வாழ்த்தி உன் வீர சரிதத்தைப் புகழ்ந்து உன்னை அனுபவிக்க, அடியோங்கள் இப்போது எங்கள் ஆற்றாமையால் வந்தோம். இரங்கி அருள்புரிவாய்.

விளக்கம்

ஆயச்சிறுமியர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கண்ணன் புறப்பட்டுப் பள்ளிக்கட்டிலி லிருந்து சிங்காசனத்திற்கு வருகிறான். அதுகண்ட ஆய்ச்சிகள், வந்த காரியத்தையும் மறந்து கண்ணனைப் புகழத் தொடங்கு

கிருர்கள். இராமாயண காலத்திலே தண்டகாரணிய வாசிகளான முனிவர்கள் — ராமனிடம் அரக்கர்களால் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களைச் சொல்லி முறையிட வேண்டு மென்று தீர்மானித்திருந்தவர்கள்—ராமனைக் கண்டதும் தங்கள் மனோரதங்களை மறந்து அந்த வடிவழகிலே ஈடுபட்டு வாழ்த்தத் தொடங்கினுர்களாம். அப்படியே இப் பெண்களும், கண்ணன் தன் அழகும் சீலமும் விளங்க அடியெடுத்து வைத்துச் சிறிது தூரம் நடந்து வந்தது கண்டு, தங்கள் காரியத்தை மறந்து அவனிடம் பரிவுகொண்டு வாழ்த்துகிருர்கள் இப்பாசுரத்திலே.

'இம் மலரடிகளைக் கொண்டோ இவனை நாம் நடக்க வைப்பது?' என்று நெஞ்சு நினைக்க, 'அம்மலரடிகளை எடுத்து முடிமேல் புனைந்து கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டும்' என்று ஆசை துடிக்க, அன்று உலகம் அளந்து இன்று சகடம் உதைத்த திருவடிகளுக்கு ஒரு தீங்கும் நேராதிருக்க வேண்டும் என்று வாழ்த்துகிருர்களாம். தங்களுடைய நன்மைகளைப் பிரார்த்திக்க வேண்டியிருக்க, அவனுடைய மங்களங்களைப் பிரார்த்திக்கிருர்களாம். பக்தி பரவசத்தால், அன்புப் பெருக்கினுல், அவனுடைய சக்தியையும் மறந்து, 'அன்பனுக்குக் குறையில்லாமல் இருப்பதே நமக்கும் குறையில்லாமை' என்று எண்ணியிருப்பது, இப்போது இவர்கள் மனநிலை.

கன்று வடிவமாக வந்த அசுரனை, விளாவின் வடிவமாக நின்ற அசுரன்மீது எறிந்து இரண்டு துஷ்டர்களையும் ஒருங்கே மாய்த்த கதை, முள்ளைக்கொண்டே முள்ளைக் களைவதுபோல் தீமையை ஒழிக்கும் இறைவனது பேராற்றலுக்கு ஒரு நினைவுக்குறி.

கவிநயம்

'அடி போற்றி, திறல் போற்றி, புகழ் போற்றி, கழல் போற்றி, குணம் போற்றி, வேல் போற்றி!' என்ற இந்த

அறுவகை வாழ்த்தும் இந்த அன்புச் சிறுமியர்கள் நாவிலே அறுசுவை போல் இனிக்கும் என்பர். இந்த அறுசுவையை நாமும் கவிச்சுவையாக இப்பாட்டில் அனுபவிக்கலாம்.

உள்ளுறை பொருள்

புருஷார்த்தமாகிய கைங்கரியமும், கைங்கரிய ருசியும் கைங்கரியத்துக்குச் சாதனமான கருணையும் இப்பாசுரத்தின் உள்ளுறை.

ஒருத்தி மகனாய்ப் பிறந்(து), ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்,
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி,
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

பதவுரை

ஒருத்தி மகனாய்ப் பிறந்து - (தேவகி என்ற) ஒருத்திக்கு மகனாய்ப் பிறந்து,
ஓர் இரவில் - அந்த ஓரே இரவில்
ஒருத்தி மகனாய் - வேறொருத்தியாகிய யசோதைக்கு மகனாய்
ஒளித்து வளர - மறைந்து வளர,
தரிக்கிலானாகி-(அப்படி வளருவதைப்) பொறுதவனாய்,
தான் தீங்கு நினைந்த - தானே (உனக்குத்) தீமையை நினைத்த
கருத்தைப் பிழைப்பித்து - (எண்ணத்தைத்) தவறச் செய்து

கஞ்சன் வயிற்றில் - கம்ஸனுடைய வயிற்றிலே
நெருப்பு என்ன நின்ற - நெருப்புப்போல் இருந்த
நெடுமாலே - (அன்பர்களிடம்) பேரன்பும் பெருங் கருணையும் உள்ளவனே!
உன்னை அருத்தித்து வந்தோம் - உன்னிடம் யாசித்து வந்தோம்;
பறை தருதியாகில் - (எங்கள்) மனோரதத்தை நிறை வேற்றுவாயானால்,
திருத்தக்க செல்வமும் - மகாலட்சுமி விரும்பும் உன் செல்வத்தையும்
சேவகமும் - வீர பராக்கிரமத்தையும்
யாம் பாடி - நாங்கள் பாடி,
வருத்தமும் தீர்ந்து - (உன்னைப் பிரிந்து படும்) வருத்தம் நீங்கி
மகிழ்ந்து - மகிழ்ச்சி யடைந்து—

பொழிப்புரை

ஒரே இரவில் ஒருத்தி மகனாய்ப் பிறந்து வேறொருத்தி மகனாய் நீ ஒளிந்து வளர, அது கேட்டுப் பொறுதவனாய் எப்படியாவது உன்னைக் கொல்லவேண்டும் என்று தீங்கு நினைத்திருந்த கம்ஸனுடைய எண்ணத்தை வீணாக்கி அவன் அடிவயிற்றில் நெருப்புப்போல் பீதியை உண்டாக்கி, அன்பர்களுக்குப் பெரும் பித்தனாக இருக்கும் பெருமானே! உன்னிடம் புருஷார்த்தத்தை யாசித்து வந்தோம். எங்கள் மனோரதத்தை நிறைவேற்றித் தருவாயானால், ஜகன்மாதாவாகிய பிராட்டியும் விரும்பும் உன் செல்வத்தையும், அதைக் காக்கும் வீரத்தையும் நாங்கள் உவந்து பாடி, உன்னைப் பிரிந்து படும் துயரம் நீங்கி மகிழ்ச்சியடைவோம்.

விளக்கம்

முந்திய பாட்டில் தன்னை வாழ்த்திய பெண்களை நோக்கிக் கண்ணன், 'எனக்குப் பல்லாண்டு பாடினீர்கள். அது கிடக்க, இக்குளிரிலே வருந்திவந்தீர்களே, நீங்கள் வேண்டுவது என்ன?' என்று கேட்டானும். அதற்கு விடையாகப் பெண்கள், 'உன்னுடைய குணங்களை நாங்கள் பாடிக்கொண்டு வந்ததால், குளிர் தெரியாமல் சுகமாகவே வந்துசேர்ந்தோம் "பறை" என்ற வியாஜத்தில் உன்னைக் காணவே வந்தோம்' என்கிருர்கள் இந்தப் பாசுரத்திலே.

இப்பாசுரத்தின் முதல் ஐந்து அடிகளிலும், அரிய தொழில்களையும் எளிதாகச் செய்து முடிக்கும் கண்ணனுடைய திறமை வற்புறுத்தப் படுகிறது. அத்தகைய சாமர்த்தியசாலிக்குத் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுவது மிகவும் எளிது என்பது குறிப்பு.

கவிநயம்

முதல் ஐந்து அடிகளிலும் கண்ணனுடைய துஷ்ட நிக்கிரக சக்தி, கவிச் சுவையுடன் அமைந்திருக்கிறது. கொடிய துஷ்டர்களின் பயத்தால் அடியார் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போல் பயந்து கொண்டிருந்தார்களாம். அந்தப் பயநெருப்பைக் கம்ஸன் வயிற்றில் கொளுத்தியதாகக் கூறுவது எவ்வளவு ரஸமாயிருக்கிறது!

உள்ளுறை பொருள்

பகவான் அடியார்களுடைய பயத்தைப் போக்க அவதரிக்கிருன் என்பதும், அந்தப் பயத்தை அடியார்களின் விரோதிகளுக்கு மாற்றிவிடுகிருன் என்பதும்,

'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற ரீதியில் உலகத்திற்குக் கேடு சூழும் தீமை, தன்னைத் தானே அழித்துக்கொள்கிறது என்பதும் உள்ளுறை.

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்:
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள், போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே விதானமே
ஆலின் இலையாய், அருளேலோ ரெம்பாவாய். (26)

பதவுரை

மாலே - (அடியாரிடம்) ஆசைப் பெருக்கு உள்ளவனே!
மணிவண்ணா - நீலமணிபோன்ற நிறம் உள்ளவனே!
மார்கழி நீராடுவான் - மார்கழி நீர் ஆடுவதற்கு
மேலையார் செய்வனகள் - பெரியோர் அனுஷ்டிக்கும் முறைகளில்
வேண்டுவன - வேண்டியவற்றை
கேட்டியேல் - கேட்பாயானால் (சொல்லுகிறோம்)
ஞாலத்தை எல்லாம் - (இங்கே) சத்துரு ஜனங்களையெல்லாம்
நடுங்க முரல்வன - நடுங்கும்படி ஒலிக்கின்றனவும்,
பால் அன்ன வண்ணத்து - பால் போன்ற நிறம் உடைய
உன் பாஞ்ச சன்னியமே - உன்னுடைய பாஞ்சஜன்யத்தை

போல்வன - ஒத்தனவும் ஆன
சங்கங்கள் - சங்குகளும்,
போய்ப்பாடு உடையன - பேரோசை உடைய
சாலப் பெரும் பறையே - மிகவும் பெரிய பறைகளும்,
பல்லாண்டு இசைப்பாரே - பல்லாண்டு பாடுகிறவர்களும்,
கோல விளக்கே - அழகிய தீபங்களும்,
கொடியே - கொடிகளும்,
விதானமே - மேற்கட்டிகளும் (ஆகிய இவற்றை)
ஆலின் இலையாய்! - ஆலிலைமேல் பள்ளி கொள்பவனே!
அருள் - தந்தருள்வாய்.

பொழிப்புரை

அடியார்மீது ஆசைப் பெருக்குள்ளவனே! நீலமணி வண்ணா! பெரியோர் அனுஷ்டித்தவற்றிலே சேர்ந்த மார்கழி நீராட்டம் செய்வதற்கு வேண்டுவன கேட்பாயானால் சொல்லுகிறோம்: பகைவர் நடுங்கும்படி ஒலிப்பனவாய், பால்போன்ற நிறத்தையுடையனவாய், உன் பாஞ்சஜன்யத்தை ஒத்தனவான சங்குகளையும், பேரோசையுடையனவும் மிகவும் பெரியனவுமான வாத்தியங்களையும், பல்லாண்டு பாடுகிறவர்களையும், மங்கள தீபங்களையும், கொடிகளையும், மேற்கட்டிகளையும் ஆகிய இவற்றை, பிரளய காலத்தில் ஆலிலையில் கண்வளர்பவனே! கருணைகூர்ந்து அளித்தருள்வாயாக.

விளக்கம்

கண்ணன் சிங்காதனத்தில் வீற்றிருந்து, 'பெண்களே! நீங்கள் நம்மை வேண்டாது வேறொன்றை விரும்புவது போல், "பறை தரவேண்டும்" என்கிறீர்களே! நீங்கள் சொல்வது என்ன? அதற்கு மூலம் என்ன? அனுஷ்டிக்க

வேண்டுவன எவை? அவற்றை விரிவாகச் சொல்லுங்கள்' என்று கேட்டருள, அதற்கு விவரமான விடையாக அமைந்திருக்கிறது இப்பாசுரம்.

'பெருமாளே! உன்னைக் கண்டு உன் திருநாமங்களை வாயாரச் சொல்ல ஏதுவாய் இருக்கும் நோன்பை ஆயர் பிரஸ்தாபிக்க, நாங்கள் அதில் இறங்கினோம். அதற்கு வேண்டும் உபகரணங்கள் இவை. அவற்றையும் தந்தருள வேண்டும்' என்று வேண்டிக்கொள்ளும் பாசுரம் இது.

பள்ளியெழுச்சிக்குச் சங்குகள் வேண்டும்; புறப்பாடு கொட்டப் பெரும் பறை வேண்டும்; கொட்டிப் புறப்படும் போது எதிரே நின்று பல்லாண்டு பாடுகிறவர்கள் வேண்டும்; ஒருவருக்கொருவர் முகம் தெரிய மங்கள தீபங்கள் வேண்டும்; தூரத்திலேயே எங்கள் கூட்டம் தெரியக் கொடி வேண்டும்; பனி தலைமேல் விழாதபடி காக்க ஒரு மேற்கட்டி வேண்டும்—இந்த உபகரணங்களையெல்லாம் கண்ணன் தந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள்.

உள்ளுறை பொருள்

பகவானை அடைவதற்கு வேண்டும் சாதனங்களையும் அவனையே வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும். சங்கின் ஓசைக்கு உட்பொருள் பிரணவமாகிய 'ஓங்காரம்' என்பர். பல்லாண்டு இசைப்பவர்கள் என்பது ஸாத்விக சகவாசத்தைக் குறிக்கும். 'கொடி' கைங்கரியக் கொடி.

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்:
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே

பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம் ;
ஆடை உடுப்போம் ; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

பதவுரை

கூடாரை - பகைவரை
வெல்லும் சீர் - வெல்லுகின்ற குணங்களையுடைய
கோவிந்தா - கண்ணபிரானே !
உன் தன்னை - உன்னை
பாடி - புகழ்ந்து பாடி,
பறை கொண்டு - (நாங்கள் வேண்டுகின்ற) பறையைப் பெற்று
யாம் பெறு சம்மானம் - நாங்கள் அடைய விரும்பிய சம்மானமாவது :
நாடு புகழும் பரிசினல் - நாட்டார் புகழும்படியாக
நன்ருக - இனிதாய்,
சூடகமே - (கையில் அணியும்) சூடகங்களும்
தோள் வளையே - தோள் வளைகளும்
தோடே - காதுக்கு இடும் தோடும்
செவிப்பூவே - கர்ணப் பூவும்
பாடகமே - பாத கடகமும்
என்று அனைய - என்று சொல்லப்படும் இவ்வாபரணங்கள் போன்ற
பல்கலனும் - பல ஆபரணங்களும்
யாம் அணிவோம் - நாங்கள் அணிந்துகொள்வோம் ;
ஆடை உடுப்போம் - பட்டாடைகளை உடுத்துக் கொள்வோம் ;
அதன் பின்னே - அதற்குப் பின்பு
பால் சோறு - க்ஷீரான்னம் என்ற பாற்சோற்றை
மூட நெய் பெய்து - மறைக்கும்படியாக நெய் வார்த்து

முழங்கை வழிவார - முழங்கையால் வழியும்படியாக (அச்சோற்றை)
கூடி இருந்து - (நீயும் நாங்களும்) சேர்ந்திருந்து
குளிர்ந்து - மனம் குளிர்ந்து—

பொழிப்புரை

தன் அடிபணியாத பகைவர்களை வெல்லுகின்ற குணங்களையுடைய கோவிந்தனே! உன்னை வாயாரப் பாடி எங்கள் விருப்பத்தைப் பெற்று விரதத்தை அனுஷ்டித்து முடித்துப் பின்னும் நாங்கள் பெறும் சம்மானமாவது: நாட்டார் புகழும்படியாகக் கையில் அணியும் சூடகங்களும், தோள்வளைகளும், காதுக்கு இடும் தோடும் கர்ணப்பூவும், காலுக்கு இடும் பாடகமும் இவை போன்ற வேறு பல அணிகளும் நீயும் நப்பின்னையுமாக இருந்து பூட்ட, நாங்கள் இனிதாக அணிவோம். அதன்பின் பட்டாடைகளை உடுத்துக்கொள்வோம். பின்பு பாற்சோற்றை மூடும்படி நெய் பரிமாறி அது முழங்கையால் வழிய, உண்டு, பிரிந்துபட்ட துயரமெல்லாம் தீரும்படி நீயும் நாங்களுமாகக் கூடியிருந்து குளிர்ந்து மகிழவேண்டும்.

விளக்கம்

முந்திய பாட்டில் சங்கு, பறை, பல்லாண்டு இசைப்பார் ஆதிய உபகரணங்களை அருள வேண்டுமென்று அபேட்சித்த ஆயச் சிறுமியரை நோக்கிக் கண்ணன், 'பெண்களே! நீங்கள் நோன்புக்கு வேண்டியதைக் கேட்கிறீர்கள், தருவோம்; நோற்ற பின்பு அடையும் பேறு யாது?' என்று கேட்டானும். அதற்கு அவர்கள், 'நாங்கள் விரத தினங்களில் நெய் பால் உண்ணாமலும், மலரிட்டு முடித்தல் முதலிய அலங்காரங்களைச் செய்துகொள்ளாமலும் இருந்தோம்; விடியும் முன்பே துயிலுணர்ந்து பனிதுளிக்க வீதியில் வந்து வருந்தினோம்; ஒருவரை

ஒருவர் எழுப்பியும், உன்னைத் துயிலெழுப்பியும் சிரமப்பட்டோம். அந்த வருத்தங்களெல்லாம் தீர, நீயும் நப்பின்னைப் பிராட்டியுமாக எங்களை உண்பிக்க வேண்டும்; அலங்கரிக்க வேண்டும். இவையே நாங்கள் பெறும் சம்மானம்' என்கிறார்கள் இப்பாசுரத்திலே.

'கூடாரை வெல்லும் சீர்' என்பதில், 'கூடினவர்களுக்குத் தோற்று நிற்கும் சீரும்' குறிக்கப்படும். ஆயச் சிறுமியர்களின் ஆயார்ப் புன்சொற்களுக்கும் தோற்று அவர்கள் வேண்டினபடியே பறை முதலியவற்றையெல்லாம் தந்தருளுகிறானல்லவா? கூடுவாரைச் சௌந்தரியத்தாலும், கூடாதாரைச் சௌரியத்தாலும் வெல்லுகிறதாம் இறைவன் சீர்.

'நாடு புகழும் பரிசினால்': நாட்டின் புகழ்ச்சியைப் பெறுவதில் இவர்களுக்கு மகிழ்ச்சி யில்லை. நாட்டார் அதனால் உய்ந்து போவதைத்தான் இவர்கள் தங்களுக்குப் பரிசாக நினைக்கிறார்கள்.

உள்ளுறை பொருள்

'தோடு'—பிரணவத்தை வடிவினால் குறித்துத் திருமந்திரத்திற்கு அறிகுறியாம் என்பர். சேஷத்துவ ஞானத்தை நன்றாகப் பெற்று இறைவனோடு ஒன்றுபட்டு, பிரிந்திருந்த வருத்தமெல்லாம் தீரப் பெறுவது அடியார்கள் பெறும் சம்மானம் என்பர்.

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்;
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்(து) உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்!
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோ(டு)

உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே,
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)

பதவுரை

கறவைகள் பின்சென்று - கறவைகளின் பின்னே (அவைகளை ஓட்டிக்கொண்டு) போய்,
கானம் சேர்ந்து - காடு சேர்ந்து
உண்போம் - உடம்பை வளர்க்க உண்போம்;
அறிவு ஒன்றும் இல்லாத - சிறிதளவும் அறிவு இல்லாத
ஆய்க்குலத்து - ஆயர் குலத்திலே
உன்தன்னை - உன்னை
பிறவி பெறும் தனை - (எங்களுடைய) பிறவியாகப் பிறக்கும் அளவு
புண்ணியம் யாம் உடையோம் - நாங்கள் புண்ணியம் உடையவர்களா யிருக்கிறோம்!
குறை ஒன்றும் இல்லாத - ஒரு குறைவும் இல்லாத
கோவிந்தா - கோவிந்தனே!
உன்தன்னோடு - உன்னோடு
உறவேல் நமக்கு - எங்களுக்கு உள்ள உறவோ என்றால்,
இங்கு ஒழிக்க ஒழியாது - இப்போது ஒழிப்பதானால் ஒழியாது; உன்னாலும் எம்மாலும் ஒழிக்கவும் ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் - (லோக மரியாதை) அறியாத சிறுபெண்களான நாங்கள்
அன்பினால் உன்தன்னை - அன்பால் உன்னை
சிறுபேர் அழைத்தனவும் - சிறிய பேராய் (நாங்கள்) அழைத்ததைக் குறித்தும்

சீறி அருளாதே - அருள்கொண்டு கோபியாதிரு,
இறைவா - தலைவனே !
நீ தாராய் பறை - (எங்கள் நோன்பிற்கு வேண்டிய) பறையை நீ தருவாயாக.

பொழிப்புரை

பசுக்களை ஓட்டிக்கொண்டு போய் மேய்ச்சல் - காட்டிலே வயிறுவளர்த்துத் திரிகிறவர்களாயினும், அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்தில் நீ எங்களில் ஒருவனாகப் பிறக்கும் புண்ணியம் உடையவர்களாய் இருக்கிறோம் ! ஒருவகைக் குறையும் இல்லாத கோவிந்தா ! உன்னோடு எங்களுக்கு உள்ள உறவோ ! இங்கே உன்னாலும் எங்களாலும் ஒழிக்க ஒழியாது ! உலக வழக்கம் அறியாத சிறு பெண்களான நாங்கள் உன்னிடமுள்ள அன்பினால் சிறு பேரிட்டு அழைத்ததைக் குறித்து, அடியார்க்கு அருளும் அண்ணலான நீ கோபியாமல் நாங்கள் அபேட்சித்ததைத் தந்தருள்வாயாக.

விளக்கம்

நோன்பைப் பிரஸ்தாபித்து அதற்கு உபகரணங்களான சங்கு முதலியவற்றையும், நோன்பை முடித்தபின் அலங்கரித்துக்கொள்ள ஆடையாபரணங்களையும், அன்புடன்கூடி மகிழ்ந்து உண்ணப் பாற்சோற்றையும் ஆய்ச்சியர் அபேட்சித்தார்கள். அவர்களை நோக்கிக் கண்ணன், 'நீங்கள் அபேட்சித்தவைகளை நான் தருவதற்கு நீங்கள் செய்த உபாயம் என்ன ?' என்று கேட்டானும். அதற்கு விடையாக ஆய்ச்சியர், 'யாதோர் உபாயமும் எங்களிடம் இல்லை. எங்களுடைய நிலைமையை எம்பெருமானே ! நீதான் நேரே கண்ணால் காணவில்லையா ?' என்று அறிவிக்கிறார்கள் இப்பாசுரத்திலே. தயா விஷயமாகவே தங்கள் காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்துகொள்கிறார்கள்.

'கறவைகளின் பின்னே குருகுலவாசம் பண்ணும் எங்களுக்குச் சாதன சம்பத்தும் உண்டோ? மேய்ச்சல் காடுதானே எங்களுக்குத் திருப்பதி!' என்கிறார்கள்.

இங்கே 'சிறுபேர்' 'நாராயண' நாமம் என்பர். 'கோவிந்தன்' என்று — அதாவது 'பசு மேய்ப்பான்' என்ற பொருளில் — ஒரு பெயர் இருக்க, அதைவிட்டு 'நாராயணன்' என்று பரத்துவ நிலையைத் தெரிவிக்கும் பெயரைச் சொன்னதே குற்றம் என்பர். 'நாராயணன்' என்றும், 'நாராயண மூர்த்தி' என்றும் பலதடவை 'அழைத்தன' என்று குறிப்பிடுகிறார்கள்.

உள்ளுறை பொருள்

இறைவனையே உபாயமாகப் பற்றுகிறவர்களுக்கு ஆறு குணங்கள் வேண்டும் என்பர். இப்பாசுரத்தின் முதல் அடியில் தங்களிடம் குருகுலவாசம், ஸத்கர்மம் இல்லையென்கிறார்கள் ஆய்ச்சியர். இத்தகைய பணிவு இறைவனையே உபாயமாகப் பற்றுகிறவர்களுக்கு இன்றியமையாதது. இரண்டாம் அடியில் தங்கள் அறியாமையை அறிவிக்கிறார்கள். அறியாமையை அறிந்துகொள்ளும் இந்த அறிவும் இன்றியமையாதது. நான்காம் அடியில் இறைவனுடைய 'குறையொன்றும் இல்லாத' குணபூர்த்தியைக் குறிப்பிடுகிறார்கள். இக் குணபூர்த்தியின் அநுஸந்தானமும் இன்றியமையாதது. ஐந்தாம் அடியில் ஒழிக்க முடியாத உறவை உணர்கிறார்கள். இச்சம்பந்த உணர்ச்சியும் இன்றியமையாதது. ஏழாம் அடியில் 'சீறி அருளாதே' என்று குற்ற மன்னிப்பு வேண்டுகிறார்கள். இவ்வுணர்ச்சியும் அவசியமானது. எட்டாம் அடியில் 'இறைவா! நீ தாராய்' என்று இறைவனையே உபாயமாகத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்;
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்தநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது.
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோ(டு)
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (29)

பதவுரை

சிற்றஞ் சிறுகாலே - மிக்க விடியற்காலத்திலேயே
வந்து உன்னைச் சேவித்து - உன்னை வந்து வணங்கி
உன் பொற்றாமரை அடியே - உன் அழகிய தாமரை மலர் போன்ற அடிகளையே
போற்றும் பொருள் - நாங்கள் போற்றுவதன் பிரயோஜனத்தை
கேளாய் - கேட்டருள்வாய்:
பெற்றம் மேய்த்து உண்ணும் - பசுக்களை மேய்த்து உண்ணும்
குலத்தில் பிறந்த நீ - ஆய்க்குலத்தில் அவதரித்த நீ
குற்றேவல் - பணிவிடைகளை
எங்களைக் கொள்ளாமல் - எங்களிடம் கொள்ளாமல் விட்டுவிடுவது
போகாது - தகாது.
இற்றை - இப்போது
பறைகொள்வான் அன்று - பறைகொள்ளும்பொருட்டாக அன்று (நாங்கள் வந்தது.)
கோவிந்தா - கோவிந்தனே !
எற்றைக்கும் - எப்போதும்
ஏழ் ஏழ் பிறவிக்கும் - நீ எடுக்கும் எந்த அவதாரத்திலும்

உன் தன்னோடு - உன்னோடு
உற்றோமே யாவோம் - உறவு உள்ளவர்களாவோம்; உறவு உள்ளவர்களாகவே இருக்கவேணும்
உனக்கே நாம் - நாங்கள் உனக்கே
ஆள் செய்வோம் - கைங்கரியம் செய்பவர்களாக இருக்கவேணும்;
மற்றை - (இவைகளைவிட) வேறுபட்ட
நம் காமங்கள் - எங்கள் விருப்பங்களை
மாற்று - போக்கு.

பொழிப்புரை

சிற்றஞ் சிறு காலையிலே நீ இருக்குமிடத்தில் நாங்கள் வந்து உன்னைத் தண்டன் இட்டு உன் அழகிய திருவடித் தாமரைகளைப் போற்றியதற்குப் பிரயோஜனத்தைக் கருத்துடன் கேட்பாய்: பசுக்களை வயிறார மேய்த்துப் பின்பு நாங்கள் உண்ணுகிற ஆய்க்குலத்தில் அவதரித்த நீ எங்களிடம் அந்தரங்க கைங்கரியங்களைக் கொள்ளாமல் எங்களை விட்டுவிடுவது தகாது. கோவிந்தனே! இன்று 'பறை' என்று ஒரு பிரயோஜனம் கொள்ளும் பொருட்டாக அல்ல நாங்கள் வந்தது! எப்போதும், ஏழேழ் பிறவிக்கும் உனக்கு உற்றாராவோம்; உனக்கே நாங்கள் ஆட்செய்வோம். எங்களுடைய மற்றை விருப்பங்களை மாற்றியருளவேண்டும்.

விளக்கம்

'பறை, பறை' என்று சொல்லி வந்த ஆய்ச்சிகள் அப்பறையின் பொருளை இப்பாசுரத்தில் உள்ளபடி வெளியிடுகிறார்கள். நோன்பு நோற்பதும், அதற்கு வேண்டியவைகளைக் கண்ணன் தருவான் என்பதும் வியாஜந்தான். கண்ணன் திருவடிகளில் நித்திய கைங்கரியம் செய்வதுதான் இவர்களது முக்கிய நோக்கம். 'இனி ஒரு

நொடிப் பொழுதும் உன்னை விட்டுப் பிரியோம்; வேறு வகையான விருப்பங்கள் எமக்குப் பிறவாது நீயே அருள் புரிய வேண்டும்' என்ற இந்தப் பாசுரக் கருத்தே திருப்பாவை என்ற பிரபந்தத்தின் பரம தாத்பரியம்.

உள்ளுறை பொருள்

கைங்கரியத்திலே களையாகத் தோன்றும் காமங்களைப் போக்கவேண்டும் என்ற பிரார்த்தனையும், பிறவிக்கும் அஞ்சாது, 'உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்ற கைங்கரியப் பிரார்த்தனையும் இதன் உள்ளுறை.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே [சொன்ன
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்(று) இன்புறுவர் எம்பாவாய். (30)

பதவுரை

வங்கக் கடல் - கப்பல்களையுடைய சமுத்திரத்தை
கடைந்த மாதவனை - கடைந்த லட்சுமிபதியான பகவானை
கேசவனை - கேசி யென்ற அசுரனைக் கொன்ற கண்ணனை
திங்கள் திருமுகத்து - சந்திரன் போன்ற குளிர்ந்த அழகிய முகத்தை உடையவர்களும்

சேயிழையார் - அழகிய ஆபரணங்களைப் பூண்டவர்களுமான ஆய்ச்சிகள்
சென்று இறைஞ்சி - போய் வணங்கி,
அங்கு - அங்கே ; கிருஷ்ண சன்னிதியில்
பறைகொண்ட ஆற்றை - தங்கள் புருஷார்த்தத்தைப் பெற்ற அந்த வரலாற்றை
அணிபுதுவை - அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் (அவதரித்த)
பைங்கமலம் - பசுமை பொருந்திய தாமரை மலர்களாலான
தண்தெரியல் - குளிர்ந்த மாலையை அணிந்த
பட்டர் பிரான் கோதை - பெரியாழ்வாருடைய அருமைத் திருமகளான ஆண்டாள்
சொன்ன - பாடியருளிய
சங்கத் தமிழ்மாலை - திரள் திரளாக அனுபவிக்க வேண்டிய தமிழ்ப் பாமாலையாகிய
முப்பதும் - இம்முப்பது பாசுரங்களையும்
தப்பாமே - தப்பாமல்
இங்கு - இக்காலத்திலே
இப்பரிசு - இவ்வண்ணமாக
உரைப்பார் - ஓதுகிறவர்கள்,
ஈர் இரண்டு - நான்கு
மால்வரைத்தோள் - பெரிய மலை போன்ற தோள்களையுடையவனும்,
செங்கண் திரு முகத்து - செம்மையான கண்களையுடைய திருமுகத்தையுடையவனும்,
செல்வம் - இம்மையும் மறுமையும் தன் செல்வமாக உடையவனுமாகிய
திருமாலால் - லட்சுமிபதியான பகவானல்
எங்கும் - எல்லா இடங்களிலும்

திருவருள் பெற்று - (அப்பெருமானுடைய திருவருள் பெற்று

இன்புறுவர் - (அவனுடைய சேர்க்கையால் உண்டான) பரமானந்தம் பெறுவர்.

பொழிப்புரை

கப்பல்களையுடைய திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் அளித்த ஸ்ரிய:பதியும் கேசவனுமான பகவானைப் பூர்ண சந்திரனையொத்த அழகிய முகமும் அழகிய ஆபரணங்களும் உடைய ஆய்ச்சிகள் சென்று வணங்கி, அந்த ஆய்ப்பாடியில் ஸ்ரீகிருஷ்ண சன்னிதியில், நாட்டுக்குப் பறை என்ற வியாஜத்தால் கைங்கரியமே புருஷார்த்தமாகக் கொண்ட அந்த வரலாற்றை, அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த, புதிய தாமரை மலர்களான குளிர்ந்த மாலையையுடைய, பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் அருளிச்செய்ததும், திரள் திரளாக அனுபவிக்கவேண்டியதுமான தமிழ்ப் பாமாலையாகிய இம் முப்பது பாசுரங்களையும் தப்பாமல், இக்காலத்திலே, ஆண்டாளைப்போன்ற பக்தி இல்லாவிட்டாலும், பாசுர மாத்திரமாக ஓதுகிறவர்களும், பெரிய மலையையொத்த நான்கு தோளும், செம்மையான கண்களோடு கூடிய திருமுகமும் உடையவனும், நித்தியவிபூதி என்ற மறுமைச் செல்வத்தையும், லீலாவிபூதி என்ற இம்மைச் செல்வத்தையும் ஒருங்கே உடையவனும் ஆகிய ஸ்ரிய:பதியான எம்பெருமானால் எங்கும் அவன் அருள் பெற்றுப் பரமானந்தம் பெறுவர்.

விளக்கம்

இப்பாசுரம், இப்பிரபந்தம் கற்றவருக்குச் சித்திக்கும் ஆனந்தத்தைச் சொல்லுகிறது. பிராட்டியும் பெருமாளும் இவர்களுக்குச் சர்வ காலமும் அருள்செய்வர் என்பது

தேர்ந்த கருத்து. பயன் அல்லது பலனைத் தெரிவிப்பதால், இதைப் பலச்ருதி என்பர்.

இப்பிரபந்தம் இன்னார் செய்ததென்று தெரிவிக்கும் இப்பாசுரத்தைத் திருநாமப் பாட்டு என்றும் கூறுவர். தன்னைப் பிறன்போல வைத்து ஆண்டாள் ஒருவகைக் கவி சமயத்தை அனுசரித்துக் கூறுவதால், இது தற் புகழ்ச்சி யாகாது.

* * * *

தன் ஊராகிய ஸ்ரீவில்லிபுத்தூரை ஆய்ப்பாடியாகவும், தன்னையும் தோழியரையும் ஆயர் மங்கையராகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்திரசாயி சன்னிதியை நந்த கோபர் இல்லமாகவும், அப்பெருமானைக் கண்ணனாகவும் பாவனை செய்துகொண்டு ஆண்டாள் பாடியது இந்தப் பிரபந்தம். தெய்வப் பணியே வாழ்வின் குறிக்கோள் என்பதும், அன்புருவாகிய இறைவனை நம்பிச் சரணமடைந்து பிரார்த்திப்பவர்களுக்கு அவன் தன்னையும் தன் கைங்கரியத்தையும் கொடுத்தருளுகிறான் என்பதும், இப்பிரபந்த ஸாரமான உள்ளுறை பொருள். வெண்சொல்லும் புதைபொருளும் உடைய திருப்பாவை, தோண்டத் தோண்டப் பொருள் சுரக்கும் ஆனந்தச் சுரங்கம் - ஒரு பக்தி நிலையம் - கண்ணனுக்கு ஒரு காதல் மாளிகை - அன்புப் பெருநெறிக்கு ஒரு தமிழ் விளக்கு—சிறுவடிவில் ஒரு தனியுலகம். திருப்பாவைச் செல்வியின் திருநெறி வாழ்க!

முற்றும்

உ

திருத்தணிகேசர் துணை

ஸ்ரீ அருணகிரிநாதர்

சரித்திர வரலாறும் நூலாராய்ச்சியும்

(இதுவரையும் வெளிவராத ஏழு புதுத் திருப்புகழ்ப் பாக்களுடனும், ஸ்ரீ அருணகிரிநாதர்—திருப்புகழ்ப் பதிப்பாசிரியர் வ. த. சுப்பிரமணியப் பிள்ளை - இவர்கள் திருவுருவப் படத்துடனும்)

ஷி வ. த. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் குமாரர்
தணிகைமணி ராவ்பஹதூர் வ.சு. செங்கல்வராய பிள்ளை எம்.ஏ.
ஆய்ந்து எழுதியது

—(::)—

ஸ்ரீ அருணகிரியார் தரிசித்த தலங்கள் (தரிசித்த வரிசையிலும் அகராதி வரிசையிலும்), திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்பு இவைகளின் ஆராய்ச்சிகளும், அருணகிரியாரின் கவித்திறம், தத்வோபதேசம், குணுதிசயம், அருணகிரியாரும் நால்வரும், அருணகிரியாரும் திருமூலரும், திருப்புகழ்ப் பாராயண முறை, பிரசங்கத்துக்கு வேண்டிய, பகுதிகள் பாலர் பாடத்திருப்புகழ், அருணகிரியார்மீது துதிப் பாக்கள், திருப்புகழாதிய நூல்களின் சாரம் - முதலிய கொண்டுள்ளது.

திருப்புகழ் மூன்று பாகங்களுக்கும் தொடர் நூலாதலின்

திருப்புகழ் நாலாம் பாகம் - என்னத்தக்கது.

300 - பக்கங்களுக்கு மேற்கொண்டது.

பலமான அட்டை கட்டடம் ரூ. 3—0—0
காலிகோ கட்டடம் ரூ. 3—8—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

கந்த புராணத் திரட்டு

(1,489 - பாட்டுகள் கொண்டது. பொழிப்புரையுடன்)

தொகுத்தவர் : ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

முதல் புத்தகம் :

உற்பத்தி காண்டம்

352 - பாட்டுகள் விலை ரூ. 1 - 4 - 0

—

இரண்டாம் புத்தகம் :

அசுர காண்டம்

மகேந்திர காண்டம்

543 - பாட்டுகள் விலை ரூ. 1 - 14 - 0

—

மூன்றும் புத்தகம் :

யுத்த காண்டம்

தேவ காண்டம்

தக்ஷ காண்டம்

595 - பாட்டுகள் விலை ரூ. 2 - 4 - 0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

வேலும் வில்லும் — சீர்திருத்திய 2-ஆம் பதிப்பு

(ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., இயற்றியது.)

வேற்படை எடுத்த முருகனும், விற்படை ஏந்தும் ராமனும் வீரத்துக்கும் எழிலுக்கும் தெய்வங்களாக அன்பர்களின் உள்ளத்திலே விளங்குகிறார்கள். அவ்விருவர் வீரத்தையும், கருணைச் சிறப்பையும், விளக்குவன கந்தபுராணமும், கம்பராமாயணமும். அந்த இரண்டு தமிழ்க் காவியங்களும் சொல்லாலும் பொருளாலும் பல ஒப்புமை உடையன.

இந்த ஒப்புமை ஒருவகையான தனிச் சுவையை உண்டாக்கும். அச்சுவையை நுகர இந்த நூல் துணையாக நிற்கும்.

கதைப் போக்கிலே ஒப்புமை, கருத்திலே ஒற்றுமை, சொற்சுவையிலே ஒப்பு - முதலிய பலவற்றை இனிய தமிழ் நடையிலே எடுத்துக்காட்டும் அரிய இலக்கிய விமர்சனம். விலை ரூ. 1 - 4 - 0